உ

திருகோணமலை உப்புவெளி

# அருள்மிகு சோலை வைரவர் ஆலய

# கும்பாபிஷேக சிறப்புமலர்

வெளியீடு

2012.03.18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை உப்புவெளி
அருள்மிகு சோலை வைரவர்
ஆலய மகா கும்பாபிஷேக சிறப்புமலர்
2009



வெளியீடு.
அருள்மிகு சோலைவைரவர்
ஆலய பரிபாலன சபை
கும்பாபிஷேக தினம்
கரவருடம் பங்குனித் திங்கள் 05ம் நாள்
2012.03.18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலை
## உப்புவெளி அருள்மிகு சோலை வைரவர் ஆலய
## மூல மூர்த்தி



# சமர்ப்பணம்

அற்புத சிற்பக் கோலமுடை வைரவர்
நற்புகழ் இயம்பும் நனிசிறந்த மலர்தனை
பொற்புறு கும்பாபிடேக தினமான இன்னாள்
கற்பகத்தின் கழலிணை களிப்புடன் சமர்பித்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலை
## உப்புவெளி அருள்மிகு சோலை வைரவர் ஆலய
## உற்சவ மூர்த்தி



**தேவாரம் – திருமுறை 01**

**பண்– வியாழக்குறிஞ்சி** **இராகம் – சௌராஷ்டிரம்**

திருச்சிற்றம்பலம்

**வரிந்தவென் சிலைபிடித் தவுணர்த்தம் வளநகர்**
**எரிந்தற வெய்தவ னெழில்திகழ் மலர்மேல்**
**இருந்தவன் சிரமது இமையவர் குறைகொள**
**அரிந்தவன் வளநக ரத்த னையாறே**

– திருஞானசம்பந்தர்

### திருமந்திரம்

**ஆமேவப் பூண்டரு ளாதி வயிரவன்**
**ஆமே கபாலமுஞ் சூலமுங் கைக்கொண்டங்**
**காமே டமருக பாசமுங் கையது**
**வாமே சிரத்தொடு வானது கையே.**


– திருமூலர்

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிவாரமூர்த்திகள்



பிள்ளையார்



பாலமுருகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ முத்துமாரி அம்மன்

அருள்மிகு சோலை வைரவர் ஆலய பரிவாரமூர்த்தி

### அபிராமி அந்தாதி

பரமென் றுனையடைந் தேன்தமி யேனுமுன் பக்தருட்
தரமன் றிவனென்று தள்ளத் தகாது தரியலர்தம்
புரமன் றெரியப் பொருப்புவில் வாங்கிய போதிலயன்
சிரமொன்று செற்றகை யானிடப் பாகஞ் சிறந்தவளே

– அபிராமி பட்டர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நவக்கிரக சந்நிதி



நாகதம்பிரான் சந்நிதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2009.03.02 நூதன பிரதிஷ்டா மகா கும்பாபிடேகம்
## பிரதான யாகசாலை




பிரதம பிரதிஷ்டா குரு அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ஆதீனகர்த்தாவும் பிரதம குருவுமான "வேதாகமமாமணி" பிரம்மஸ்ரீ சோ. ரவிச்சந்திரக் குருக்கள் பிரதான யாகசாலையில் கிரியைகளை மேற்கொள்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற அலங்கார உற்சவம்



அலங்கார உற்சவ கிரியைகளில்
பிரதமகு. பிரம்மஸ்ரீ பொ. ஆறுமுகசாமிக் குருக்கள்



பூங்காவனத் திருவிழாவில்
வைரவப் பெருமான் பள்ளிகொண்ட நிலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

" காவற் தெய்வம் கருணா நிதியென்று
கைதொழு தேத்தினேன் காதலுடன் தினமும்
பாவாற் சொன்மாலை பக்குவமாய் ஆக்கி
வைத்தேன் பாதம் வைரவா ஏற்றருள்! "

அண்ட சராசரங்களையும் ஐந்தொழிலால் ஆட்சி செய்யும், அப்பன் திருவுருவிற் தோன்றிய அருட்குமரனென்றும், அன்றி அவனே பைரவன் என்றும் ஆகமங்கள் இயம்பும்.

எம்பெருமான் திருகோணை நாதனின் காவற் தெய்வமாக, சோலையடி வீற்றிருந்து அருளாட்சி புரியும் வைரவப் பெருமான் திருவருள் லீலையே அடியேன் இக்கும்பாபிடேக மலரைத் தொகுத்தமை.

இப் பெரும்பேறு எமக்குக் கிட்டியமைக்கு அவனுக்கே நன்றிகூறிச் சிரம் தாழ்த்தி, அவனடிக்கே இம்மலரைச் சமர்ப்பித்தேன்.

எம்பெருமான் அருட்கடாட்சத்தால் அவனுடைய புகழ்மிக்க வரலாறுகளையும் திருவிளையாடல்களையும், அருளாற்றலையும் அடியேன் ஓரளவு அறிந்து கொண்டேன்.

அவன் பேரருட்கருணையில் இன்று மலர்ந்துள்ள கும்பாபிடேக மலரை அடியூரர்கள் அனைவரும் பக்தியுடன் பெற்று, வாசித்து, வைரவ மூர்த்தியின் மேன்மை களைத் தெரிந்து கொண்டு, நாளும் அவன் பதம் போற்றிப் பாடி வாழ, அவனருளை வேண்டி பதிப்புரையை நிறைவு செய்கிறேன்.

**நன்றி**

**2012-02-20**

**அன்புடன்,**
**தொகுப்பாசிரியர்**
**மணிமேகலாதேவி,**
**கார்த்திகேசு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

தென்கைலையாம் திருக்கோணேஸ்வரவத்தைப் பெருங்கோவிலாகக் கொண்ட திருக்கோணமலையில் உப்புவெளி சோலையடி வீற்றிருக்கும் வைரவப் பெருமானுக்கு 2009-03-22 இல் நிறைவெய்திய, நூதன பிரதிஷ்டா மகாகும்பாபிடேக, சிறப்பு மலர், கும்பாபிடேக தினமான இன்று 2012-03-18 வெளிவருதையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

இவ்வாலய ஆதீனகர்த்தாவும், ஆலய பரிபாலன சபைத் தலைவருமான திரு.ந.சத்திய மூர்த்தி அவர்களின் பெருமுயற்சியால், அவருடைய ஆசிரியரான கலாபூசணம் செல்வி. மணி மேகலாதேவி கார்த்திகேசு அம்மையார், இச் சிறப்பு மலரைச் சிறந்த முறையிற் தொகுத்தளித்துள்ளார்.

வைரவப் பெருமான் பற்றிய பல அரியபெரிய விடயங்களையெல்லாம் சேகரித்து மலரைத் தொகுத்தமைக்கு அவருக்கு, ஆலயபரிபாலன சபையின் சார்பில் நன்றிகளைத் தெரிவிக்கிறேன். அத்துடன் மலரினை மொய்பார்த்து உதவிய கலாபூசணம் திருமலை சுந்தா அவர்களுக்கும் எமது நன்றி உரித்தாகுக.

மேலும் இம்மலருக்கு, ஆசிச்செய்திகள் கட்டுரைகள் கவிதைகள் ஆக்கி அளித்த சான்றோர், அறிஞர்கள், கவிஞர்கள், அனைவருக்கும், மலரை நல்லமுறையில் வடிவமைத்து அச்சிட்டு வழங்கியுள்ள "அஸ்ரா அச்சகத்தார், ஊழியர்களுக்கும், இதற்காகப் பலவழிகளிலும் உதவிபுரிந்த அன்பர்கள், அடியார் களுக்கும் ஆலய பரிபாலன சபையின் சார்பில் நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

அடியார்கள் யாவரும், இம்மலரைப் பெற்று, வைரப் பெருமான் அருட்திறனை அறிந்து வாழ்வாங்கு வாழ எம்பெருமானை வேண்டி அமைகிறேன்.

இங்ஙனம்,

**2012-02-15**

குகதாஸ். ராம்கிஷன்

செயலாளர்

ஆலய பரிபாலன சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலருள் மலர்ந்திருக்கும் மலர்கள்


**ஆசிச் செய்திகள்**

- வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ சோ. ரவிச்சந்திரக் குருக்கள்
- ஸ்ரீலஸ்ரீ மு. சுந்தலிங்க தேசிகர்
- ஈசான சிவாச்சாரியார். பொன் ஆறுமுகசாமிக் குருக்கள்
- சிவத்திரு.கனக விக்கினராஜா ஐயர்
- சிவத்திரு.க.விநாயகமூர்த்தி ஐயர்
- திரு.பொ.கந்தையா ( காந்தி ஐயா )
- திருமதி.இரத்தினம்மா தெட்சணாமூர்த்தி
- பஞ்சபுராணம்

**கட்டுரைகள், கவிதைகள்.**

- அருள் மிகு சோலை வைரவர் ஆலய வரலாறு
- அருள் மிகு சோலை வைரவர் – திருவூஞ்சல்
- வைரவ மூர்த்தி
- வாருண பத்ததி கூறும் அட்ட பைரவர்
- வைரவர் வழிபாடு
- பைரவர்
- கும்பாபிடேகம்
- வயிரவி மந்திரம், வைரவா போற்றி
- காத்தற் கடவுள் வைரவர்
- மார்கழி நீராடலின் மாண்பு
- திருவாதிரைக் களி – சித்திரக் கதை
- நானிலம் போற்றும் நவராத்திரி விழா
- பால் அபிடேகத்தின் சிறப்பு
- காசியில் கால பைரவர்
- பைரவ அஷ்டகம் – தமிழாக்கம்
- ஸ்ரீ முத்துமாரி அம்மன் கரகம்
- நவக்கிர தோத்திரம்
- வயிரவர் அகவல்
- பொம்மைக் கொலு – தத்துவம்
- ஸ்ரீ ஐயப்பன் கவசம்
- வைரவர் துதிகள்
- ஊஞ்சல் தத்துவம்
- நன்றி நவிலல்


சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ஆதீனகர்த்தாவும், பிரதமகுருவுமான "வேதாகமமாமணி" பிரம்மஸ்ரீ.சோ.ரவிச்சந்திரக்குருக்களின்**

# ஆசிச்செய்தி

திருகோணமலை உப்புவெளி சோலையடியில் வீற்றிருக்கும், அருள்மிகு சோலை வைரவரின் ஆலய மகா கும்பாபிஷேகம் நிறைவேறிய தினத்தில் வெளியிட விருக்கும் கும்பாபிஷேக மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

திருக்கோணை நாதருக்கு எல்லைக் காவலாக விளங்குவது இவ்வாலயம் என வரலாறுகள் சுட்டிக்காட்டுவதால், குளக்கோட்ட மன்னன் காலமுதல் இல்வாலயம் தோற்றம் பெற்றிருக்கலாம் என ஆய்வாளர் கொள்வர். எவ்வாறாயின் பன்னெடுங் காலமாக மக்கள் வழிபாட்டுத்தலமாக விளங்கிய இவ்வாலயத்தில், பண்டைய தமிழ் கலைகளும் வளர்க்கப்பெற்றதாக முன்னோர் கூறுவர்.

தோற்றம் சிறு மண்கோவிலாக அமைந்து 1974இல் கற்கோவிலாகி, 1975ஆம் ஆண்டு நூதன பிரதிஷ்டா மகாகும்பாபிடேகம் நிறைவுற்று, ஆலயம் வளர்ச்சி கண்டுள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயமே.

இருப்பினும், 1983ஆம் ஆண்டு ஊரில் ஏற்பட்ட அசாதாரண நிலைமைகளால், இவ்வாலயம் பெரும்பாதிப்புக்குள்ளாகியது. ஆதீனகர்த்தா திரு.நடராஜா சத்தியமூர்த்தியின் பெருமுயற்சியாலும், பெரியோர்களின் அனுசரணைகளினாலும், அயலவர் ஊரவரின் உதவியாலும், ஆலயம் 2008ஆம் ஆண்டு முதல் புதிதாக நிர்மாணிக்கப் பெற்று, 2009.03.22இல் இரண்டாவது தடவையாக நூதன பிரதிஷ்ட கும்பாபிடேகம் நிறைவாகி, ஆலயம் பலபடிகளில் வளர்ச்சி கண்டுவருவது மெச்சத்தக்க விடயம்.

இத்தருணம், கும்பாபிஷேக தினமான இன்று 2012-03-18 "ஆலய கும்பாபிஷேக மலர்" வெளிவருவது பெருமைக்குரிய விடயமே. ஒரு ஆலயத்தின், தோற்றம், வளர்ச்சி, ஆன்மீக செயற்பாடுகள், சமுதாய முன்னேற்றங்கள் அனைத்தையும் உலகுக்கு எடுத்தியம்பும் சிறந்த ஆவணம், ஆலய கும்பாபிடேக மலர்.

இப்புனித பணியில் பங்களிப்புச் செய்த அனைத்துச் சான்றோரையும் நலம்பெற வாழவைக்க வேண்டும் என ஸ்ரீ பத்திரகாளி அம்பாளை வேண்டி அனைவருக்கும் ஆசிகூறி வாழ்த்துகிறேன்.

சுபம்

இங்ஙனம்

**சோ.ரவிச்சந்திரக்குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சோலை வைரவர் கும்பாபிஷேகம்**

**திருவருள் பெருமை கொண்டது**

**ஸ்ரீலஸ்ரீ.மு.சுந்தரலிங்க தேசிகர் அவர்கள்**

# ஆசியுரை

திருகோணமலை உப்புவெளி அருள்மிகு சோலை வைரவர் ஆலயம், மிகப் பழமை வாய்ந்தது. இவ்வாலயம் நகரின் எல்லையில் உள்ளது. இங்கு வைரவப்பெருமான் காவல் தெய்வமாக வீற்றிருக்கிறார். ஆலயம் 1985ஆம் ஆண்டு நகரின் அசாதாரண நிலைமை காரணமாகப் பெரும் பாதிப்புக்குள்ளானது. இதனாற் பல வருடங்கள் மந்தகதியிற் திருப்பணிகள் நடைபெற்றன.

ஆலய ஆதீன கர்த்தா, திரு.நடராஜா, சத்தியமூர்த்தி குடும்பத்தினர் ஆலயத்திற்குத் தம்மை அர்ப்பணித்து இறைதொண்டு செய்தமை போற்றுதற்குரியது.

இவர்களது வேண்டுகோட்படி, ஆலயத்துக்குத் திருப்பணிகள் சில செய்துமுடிக்க வைரவப்பெருமான் திருவருள் நல்கினார். ஆலய முன்மண்டபம், நவக்கிரக விக்கிரகங்கள், மாரியம்மன் சிலை என்பன சிறப்பாக செய்துமுடிக்கப்பட்டன.

2009-03-22 இல் நூதன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகமும், வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ.சோ.ரவிச்சந்திரக்குருக்கள் அவர்களினால் சிறப்பாக நிறைவேற்றப்பட்டது.

வைரவர் திருவருட்திறனும், அற்புதங்களும் சொல்லில் அடங்கா. எம்பெருமான் அருட்கருணையினால் ஆலய கும்பாபிஷேக தினமான இன்று (2012-03-18) "கும்பாபிஷேக சிறப்புமலர்" மலரவுள்ளது. இம்மலருக்கு ஆசியுரை வழங்குவது மகிழ்ச்சிக்குரிய விடயமே.

அடியவர்கள், மெய்யன்போடு வைரவப்பெருமானை வணங்கி மலரினைப்பெற்று வாசித்துப் பயன்பெற என் நல்லாசிகள்.

**இப்படிக்கு**

**ஸ்ரீலஸ்ரீ. மு. சுந்தலிங்கதேசிகர்**

**ஆதீனகர்த்தா**

**அருள்மிகு ஸ்ரீ ஆலடி விநாயகர் தேவஸ்தானம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருகோணமலை உப்புவெளி அருள்மிகு சோலைவைரவர்**
**ஆலய பிரதமகுரு**
**பிரம்மஸ்ரீ.பொன். ஆறுமுகசாமிக் குருக்களின்**

# ஆசிச்செய்தி

பன்னெடுங்காலமாக இக்கிராம மக்கள் போற்றி வழிபட்டுவந்த இவ்வாலயம் முதன் முதலில் 1975ஆம் ஆண்டிலும், பின்னர் 2009.03.22இலும் புதிதாக நிர்மாணிக்கப் பெற்று, நூதன பிரதிஷ்டா மகா கும்பாபிடேகம் நடைபெற்றது. இரண்டாவது பெருவிழாவிற்கான "கும்பாபிடேக சிறப்பு மலர், கும்பாபிடேக தினமான 18.03.2012இல் வெளிவருவதையும், அதற்கு ஆசிச்செய்தி வழங்குவதையும் கண்டு பெருமகிழ்வு கொள்கிறோம்.

2009ஆம் ஆண்டிற்குப் பின், ஆதீனகர்த்தா திரு.நடராஜா சத்தியமூர்த்தியின் தலைமையிலான ஆலய பரிபாலன சபை, பல அபிவிருத்திச் செயல்களை முன்னெடுத்தமையினால், ஆலயம் வளர்ச்சி கண்டுள்ளமை பெருமைக்குரிய விடயமே.

இவ்வாலய முன்னேற்றம், ஆலயச் சூழலில் வாழும் மக்களின் வாழ்விலும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்றும் விழாவிற் பங்குகொள்ளும் அனைத்து அடியாருக்கும் அருள்மிகு சோலை வைரவருடைய அருளாசி கிட்டவேண்டி நல்லாசி கூறுகிறேன்.

**இங்ஙனம்**
**பொன். ஆறுமுகசாமிக்குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருகோணமலை - உப்புவெளி அருள்மிகு சோலையடி ஞானவைரவர்**

**ஆலய பிரதமகுரு**

**சிவத்திரு.க.விக்னராஜா ஐயா அவர்களது**

# ஆசியுரை

எல்லாம் வல்ல சாமுண்டி அம்பிகா சமேத ஞானவைரவர் ஆலய கும்பாபிஷேக சிறப்பு மலரும் ஆசியுரை வழங்கும் பாக்கியத்தினை தந்த எம்பெருமானுக்கு முதல் வணக்கம். சோலையடி ஞானவைரவர் ஆலயம் பல்லாண்டு கால பழமை வாய்ந்தது. அன்பர்களை நல்வழிப்படுத்தி, அவர்கள் மீது கண்ணருள் பொழியும் பெருமைக்குரியது.

நாட்டின் அநர்த்தம் சில வருடங்கள் ஆலய செயற்பாடுகளை முடக்கி வந்தது உண்மைதான். மிகுந்த இக்கட்டான அந்நிலையிலும் விக்கிரகங்கள் மற்றும் பொருட்களை எல்லாம் வல்ல சாமுண்டி அம்பிகா சமேத ஞானவைரவர் ஆலய கும்பாபிஷேக நினைவு மலருக்கு ஆசியுரை வழங்கும் பாக்கியத்தினை தந்த எம்பெருமானுக்கு முதல் வணக்கம்.

சோலையடி ஞானவைரவர் ஆலயம் பல்லாண்டு கால பழமை வாய்ந்தது. அன்பர்களை பாதுகாத்துக் கொள்வதற்கான வழிகாட்டலையும், தென்பையும் ஆலய தர்மகர்த்தா திரு ந. சத்தியமூர்த்திக்கும், அவர்தம் குழுவினருர்க்கும் எம்பெருமான் வழங்கிய அருள் வியப்புக்குரியது.

சில ஆண்டு காலத்துள் ஆலயம், மீண்டும் புதிதாக நிர்மாணம் செய்யப்பட்டு, கும்பாபிஷேக கிரியைகள், திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ சோ.ரவிச்சந்திரக் குருக்கள் அவர்களது தலைமையில் நிறைவேறியது. (2009.03.22)

இன்று அறநெறி வகுப்புகள், தேவாரம், திருவாசக முற்றோதல் நிகழ்வுகள், வருடாந்த அலங்கார உற்சவம், அன்னதானங்கள், நவராத்திரி விழா போன்ற பல்வேறு அம்சங்களில் கண்டுவரும் வளர்ச்சி பல்கிப்பெருகிடவும், ஆலய வரலாற்றினை தாங்கியதாக வெளிவரும் கும்பாபிடேக மலர் சிறப்பாக மலரவும், ஆலய அன்பர்களும் குடும்பத்தினரும் எம்பெருமானது பேரருள் பெற்று பெருவாழ்வு கண்டு, ஆண்டாண்டு காலமாக ஆலயத்திருப்பணியை செவ்வனே புரியவும் எல்லாம்வல்ல சோலையடி சாமுண்டி அம்பிகா சமேத ஞானவைரவருடைய அருள் கிட்டுவதாக

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முல்லைத்தீவு சிலாவத்தை செல்வவிநாயகர் முல்லைத்தீவு செல்வபுரம் துர்க்கை முல்லைத்தீவு சந்தையடி ஞானவைரவர் ஆலயங்களின்**

**பிரதமகுரு**

**சிவத்திரு.க.விநாயகமூர்த்தி ஐயா அவர்களின்**

# ஆசிச்செய்தி

நாம் ஒவ்வொருவரும் ஆன்மீகத்தில் மென்மேலும் வளர்ச்சியடைய வேண்டியவர்களாகவுள்ளோம். சமய சம்பந்தமான நூல்கள் ஆன்மீகத்தை அறிவது அதில் விருத்தி பெற பெரிதும் உதவுபவையாகவுள்ளன.

இந்த வகையில் "சோலை வைரவர் ஆலய வரலாறு" தாங்கிய கும்பாபிடேக சிறப்பு மலர் வெளிவருவது மிகவும் மகிழ்ச்சி கரமாகவுள்ளது.

வைரவப் பெருமானுடையசிறப்புக்களை அறிந்து மக்கள் பக்தியை வளர்க்கவும் எதிர்காலச் சந்ததியனருக்கும் இம்மலர் சிறந்த ஆவணமாகும். நமது இந்து ஆலயங்கள் இவ்வாறான பணிகளை மேற்கொள்வது மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு வலிமை சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாலயம் மேலும் பல சமூக சமய சமுதாய பணிகளை முன்னெடுக்க எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இங்ஙனம்**

**சிவத்திரு.க. விநாயகமூர்த்தி ஐயா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு.பொ.கந்தையா**

**ஓய்வு நிலை ஆசிரியரின்**

# ஆசியுரை

திருக்கோணமலை உப்புவெளி அருள் மிகு
சோலை வைரவர் ஆலயம்

இவ்வாலயம் 3ம்கட்டை உப்புவெளி கிராம எல்லையில் உள்ளது. இவ்வைரவர் கோணேசர் கோயில் காவல் தெய்வமாகக் கருதப்படுபவர். ஆலயமூர்த்தி சூலவடி விலானது தலவிருட்சமான ஆலமரத்தடியில் இருந்தவர். பின் சிறு மண் கொட்டில் கோயிலில் வைத்து வழிபட்டனர் அதன் பின் கிராமசபைத் தலைவர் திரு.சி.கதிர்காமத் தம்பி அவர்கள் சிறு கற்கோயில் கட்ட எல்லோரும் வழிபட்டனர்.

1975ல் பெரிய கற்கோயில் அமைக்கப்பட்டு ஆகம விதிப்படிமுதலாவது நூதன பிரதிஷ்டகும்பாபிஷேகம் நடைபெற்றது 1985ல் அசாதாரணநிலைமைகளால் ஆலயம் பாதிப்பக்குள்ளானது.

கும்பாபிஷேகதினமான 18.3.2012 திகதி சங்காபிஷேகதினத்தில் சிறப்புமலர் வெளிவருவது மிக மகிழ்ச்சிக்குரிய விடயமே. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" "ஆலயம் தொழுவது சாலவும் நன்று, "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்," "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்றும் பழமொழிகள் உள. நாயன்மார்களும் சமயப் பெரியார்களும் கோயில்களை வழிபட்டே கடவுளை அடைந்தனர்.

மனிதப்பிறவியின் நோக்கம் கடவுளை அறிந்து, கடவுளை வழிபட்டு, கடவுளை அடைதலே ஆகும் என்று சைவத்தையும் தமிழையும் கட்டிக்காத்த ஆறுமுக நாவலர் பெருமான அருளியுள்ளார்.

ஆலயங்கள், சுற்றாடலில் உள்ள, வழிபடும் மக்களை, அன்பும் பக்தியும் தர்மசிந்தனையும் சேவைமனப்பான்மையும் உள்ள நல்ல மனிதர்களாக ஆக்க வேண்டும். ஆலயத்தில் பூஜை பிரார்த்தனையோடு நில்லாது அறநெறிப் பாடசாலைகள், சமய வகுப்புகள், சமயப்பிரசங்கங்கள், திருமுறை ஓதுதல், சமய நூல் நிலையங்கள் நடைபெற்று, சூழ உள்ள மக்கள் அன்பு நிறைந்த தெய்வ வாழ்வு வாழவேண்டும் "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறென்றறியேன் பராபரமே", என்ற தாயுமான சுவாமிகளின் வாக்கைச் சிரமேற்கொண்டு எல்லாமக்களிடமும் கடவுளைக் கண்டு ஆனந்தமாக வாழ்வோமாக.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
ஆனந்தம்

**முத்துக்குமார சுவாமிகோயிலடி**
**திருக்கோணமலை**
**12.2.2012**

பொ. கந்தையா
காந்தி ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருகோணமலை மடத்தடி ஸ்ரீ முத்துமாரி அம்மன்**
**தேவஸ்தான ஆதீனகர்த்தா**
**திருமதி. இரத்தினம்மா தெட்சணாமூர்த்தி**
**அவர்களின்**

# ஆசிச் செய்தி

தெட்சண கைலாயம் என்று போற்றப்படுகின்ற திருக்கோணஸ்வர இறைவருக்குக் காவற் தெய்வமாக விளங்கும், திருகோணமலை - உப்புவெளி அருள்மிக சோலை வைரவருடைய மகாகும்பாபிடேக மலர் (2012-03-18) வெளியிட இருப்பதை எண்ணி மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். அம்மலருக்கு ஆசிசெய்தி வழங்க சந்தர்ப்பங்கிடைத்தது வைரவப்பெருமான் திருவருளே.

1985 ஆம் ஆண்டு ஊரின் அசாதாரண நிலைமை காரணமாகப் பெரும்பாதிப்பிற்குள்ளான இவ்வாலயத்தின் உற்சவ மூர்த்தி மட்டுமே காப்பாற்றப்பட்டு அருள் மிகு ஸ்ரீ முத்துக்குமார சுவாமி கோவிலில் வைத்துப் பூசைசெய்யப்பெற்றது.

பின்னர் அவ்வாலய கும்பாபிடேகம் நிமித்தமாக, அவ் உற்சவ மூர்த்தி எமது ஆலயத்தில் வைத்து 2001 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை பூசிக்கப்பட்டது.

2009ம் ஆண்டு வைரவர் ஆலயத்தில் கும்பாபிடேகம் நடைபெறவிருந்ததால், ஆலய ஆதீனகர்த்தா திரு.ந. சத்தியமூர்த்தி அவர்கள் மீண்டும், ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் இருந்து, தமது ஆலயத்திற்கு எடுத்துச் சென்றார்.

இப்போது அவ்வாலயம் பலபடிகளில் வளர்ச்சி பெற்று வருவது கண்டு மகிழ்ச்சி அடைகிறோம்.

அடியார்கள் கும்பாபிஷேகச் சிறப்புமலரைப் பெற்று, வைரவர் பெருமான் அருளாசியுடன் நலம் வாழ, எல்லாம் வல்ல ஸ்ரீ முத்துமாரியம்மன் அருளை முன்வைத்து ஆசிவழங்குகிறேன்.

**மன்மைகொள் சைவ நீதி**
**விளங்குக உலகெல்லாம்**

**இங்ஙனம்**
**திருமதி. இ. தெட்சணாமூர்த்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணம்

தேவாரம் :- திருநாவுக்கரசு நாயனார்
திருமுறை :- 04
பண் :- கொல்லி
திருத்தலம் :- திருக்சேறையூர்

திருநேரிசை
இராகம் :- நவரோஜ்
தாளம் :- ஆதி

திருச்சிற்றம்பலம்

விரித்த பல்கதிர் கொள்சூலம் வெடிபடு தமருக ங்கை
தரித்ததோர் கோலகால பைரவனாகி வேழம்
உரித்தது உமை அஞ்சக்கண்டு ஒண்டிரு மணிவாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே

திருவாசகம் :- மாணிக்கவாசக சுவாமிகள்
திருமுறை :- 08
பண் :- முல்லை

திருத்தலம் :- குழைத்த பத்து
இராகம் :- மோகனம்

அன்றே எந்தன் ஆவியும் உடலும் உடமை எல்லாமுங்
குன்றே அனையாய் எனை ஆட்கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே

திருவிசைப்பா :- திருமாளிகைத்தேவர்
திருமுறை :- 09
பண் :- பஞ்சமம்

இராகம் :- ஆஹிரி

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன் செய்யம்பலத் தரசே
ஏறணி விடையெம் ஈசனே உன்னை
தொண்டனேன் இசையுமா றிசையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருப்பல்லாண்டு :- சேந்தனார்**
**திருமுறை :- 09**
**பண் :- பஞ்சம் இராகம் :- ஆஹரி**

மிண்டு மனத்தவர் போமின்கண்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
யீசற்காட் செய்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்த பொருளள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டு மின்றுமென்று முள்ளபொரு
ளென்றே பல்லாண்டு கூறுதுமே

**திருப்புராணம் :- சேக்கிழார்**
**திருமுறை :- 12**
**பண் :- செந்துருத்தி இராகம்:- மத்தியமாவதி**

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியாய் நிற்குந்தில்லைப் பொதுநடம் போற்றிபோற்றி
திருச்சிற்றம்பலம்

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்
திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை உப்புவெளி அருள் மிகு சோலை வைரவர் ஆலயம்

திருக்கோணமலைப் பட்டணத்தில் இருந்து, நாலு கிலோமீற்றர் தூரத்தில் பட்டணத்திலிருந்து நிலாவெளிக்குச் செல்லும் வீதியில் உப்புவெளிக்கிராம எல்லையில் இவ் வாலயம் அமைந்துள்ளது. இவ்விடத்தை "சோலையடி" எனக் கூறுவதால், இது சோலை வைரவர் ஆலயம்" என்று பெயர் பெற்றது.

இரண்டாவது உலகமகாயுத்த காலத்திற்கு முன் இங்கு "துரௌபதை அம்மன் சடங்கு விழா நடைபெற்று வந்ததாகக் கூறப்படுகிறது . பஞ்சபாண்டவர்கள் வனவாசம் செல்லும் பாரதக் கதை படிக்கப்பட்டு அதற்குரிய பூசைகளும் நடைபெற்றதாக வரலாறு உண்டு. கோணேசர் கோவிலுக்கு எல்லைக் காவற்தெய்வமாக இருந்து வந்த இந்த வைரவர் ஆலயம், குளக்கோட்டன் காலத்தில் தோற்றம் பெற்றிருக்கலாம் எனவும் எண்ணப்படுகிறது எது எவ்வாறாயினும் இந்த வைரவரை மக்கள் பன்னெடுங் காலமாகப் பூசித்து வந்துள்ளனர் என்று அறியக்கிடக்கிறது.

ஆரம்பகாலத்தில் மண்சுவர் வைத்துக் கிடுகினால் வேயப்பெற்ற சிறுகோவிலாக இருந்தது. வைரவர் மூர்த்திவரம் நிறைந்தவராக இருந்துள்ளார். மக்களுக்கு ஏற்படும், நோய் துன்பங்களை நீக்கி, கிராமத்திற்கே காவற் தெய்வமாக இருப்பவர் இந்த வைரவர் வழிப்போக்கர்கள் இவரை வழிபடாது, பிரயாணத்தை தொடங்குவதில்லை. இவருடைய அற்புதச் செயல்களால் மக்கள் பயபக்தியோடு வழிபட்டு வந்துள்ளனர்.

இரவில் இவருடைய நடமாட்டத்தைக் கண்டதாகவும், மக்களுக்கும், கிராமத்திற்கும் வந்த கேடுகளை வைரவர் நீக்கியதாகவும் மக்கள் கூறுகின்றனர். இந்த வைரவரின் அற்புதங்களை அனுபவித்தவர் திரு.சி. கதிர்காமத்தம்பி என்ற பக்தர் இவர் உப்புவெளி கிராமசபைத் தலைவராக இருந்தவர். வைரவர் மேல் வைத்திருந்த அளவுகடந்த பக்தியினால் , இந்த ஆலயத்தைக் "கற்கோவில்" ஆகக் கட்டுவதற்குப் பெரும் பாடுபட்டார்.

முன்பிருந்த மண்கோவில், பின்னர் சிறிய கற்கோவிலாகக் கட்டப்பட்டிருந்தது. அதனைப் புனருத்தாரணம் செய்து, கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், வசந்த மண்டபம் என்பவற்றை கொண்ட பெருங்கோவிலாகக் கட்டுவித்து - 1975ஆம் ஆண்டு மிகச் சிறப்பாக நூதன பிரதிஷ்டமாக கும்பாபிடேகம் செய்வித்தார். இப்பெரியாரே இக் கோயிலின் முதலாவது ஆதீனகர்த்தா ஆவர்.

கருவறையில் வைரவமூர்த்தி பிரதிஷ்டை செய்யப்பெற்றுள்ளது. பஞ்சலோகத்தில் ஆக்கப்பெற்ற எழுந்தருளி விக்கிரகம் அர்த்த மண்டபத்தில் வைத்து பூசை நடைபெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசி மகத்தை தீர்த்த் தினமாகக் கொண்டு, அதற்கு முந்திய பத்துநாட்கள் அலங்கார உற்சவம் நடைபெறும். சுவாமி சமுத்திர தீர்த்தமாட "வைரவமகா புட்கரணி" என்ற சிறப்புப் பெயர் பெற்ற இடம் சென்று தீர்த்தமாடிய பின் கிராமப் பிரதட்சணம் செய்து, ஆலயத்தை அடைவார்.

இவ்வாலயத்தில் ஆரம்பகாலத்தில் இரண்டுகாலப் பூசைகளும், தைப்பொங்கல், வருடப்பிறப்பு, வைகாசிப் பொங்கல் என்பனவும் நடைபெற்றன. திருக்கோணைநாதர் மகாசிவராத்திரிக்குப்பின் " நகர்வலம்" வரும் போது இவ்வாலயத்தில் தரிசித்து நின்று செல்வார்.

இங்கு நாதம்பிரானுக்குத் தனிச் சந்நிதி அமைக்கப்பெற்றுள்ளது. மக்களாதரவோடு, ஆதீனகர்த்தா திரு.சி. கதிர்காமத்தம்பி அவர்களுடைய குடும்பத்தினர் இவ்வாலயத்தைப் பரிபாலித்து வருகின்றனர். ஆலயம் அமைந்துள்ள பகுதி திரு.சின்னையா கதிர்காமத்தம்பி அவர்களுக்கு, அவரது முன்னோர்கள் விட்டுச் சென்ற முதிசமாகும் எம்பெருமான் மீதுள்ள பக்திமேலீட்டால், அவர் அதை எம்பெருமான் ஆலயத்தைப் பரிபாலிக்கும், தமது வழித்தோன்றல்கள், வாழையடி வாழையாக பராமரித்து, ஆலயத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வழிவகைகளைச் செய்து வைத்துள்ளார்.

1982 ஆம் ஆண்டு திரு.சி. கதிர்காமத்தம்பியின் காலத்திற்குப் பின் அவருடைய பேறாமகனான திரு.மாணிக்கம். குமாரசாமி அவர்கள் ஆதீனகர்த்தாவாகப் பொறுப்பேற்றார். இவர் விதானாகப் பணிபுரிந்தவர். இவருக்குப் பின் தற்போது திரு. நடராஜா சத்தியமூர்த்தி அவர்கள் ஆதீனகர்த்தாவாக, பரிபாலன சபை ஒன்றை அமைத்து தொண்டைத் தொடர்கிறார்

1982இல் ஆலயப்பொறுப்பேற்ற இவர் 1986 ஊரில் ஏற்பட்ட அசௌகரியங்களுக் கெல்லாம் ஈடுகொடுத்து, எழுந்தருளி வைரவரைப் பேணிப்பாதுகாத்து, பெரு முயற்சியின் காரணமாக 2008ஆம் ஆண்டு ஆலயத்தை மீண்டும் புதிதாக நிர்மாணிக்கும் பணிகளை மேற்கொண்டார் 2009-03-22 ஆம் திகதி நூதன பிரதிஷ்டா கும்பாபிடேகம், வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ.சோ ரவிச்சந்திரக் குருக்கள் தலைமையில், ஸ்ரீலஸ்ரீ மு.சுந்தரலிங்கதேசிகரின் அனுசரனையுடன் இனிது நிறைவெய்தியது.

கும்பாபிடேகத்தின் பின், எழுந்த்ருளி வைரவருக்கு சமேதராக, பஞ்சலோகத்தில் சாமுண்டி அம்பிகா விக்ரகம் வைக்கப்பட்டுள்ளது.

நிருத்த மண்டபத்தின் வலப்புறத்தில் பிள்ளையாரும் இடப்புறத்தில் பாலமுருகனும் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளனர். தம்பமண்டபத்தில், வாகன மூர்த்தியும் பலி பீடமும், தம்பப்பிள்ளையாரும் உள்ளனர். ஆலயவீதியில் நவக்கிரக சந்நிதியும், நாகதம்பிரான் சந்நிதியும் உள்ளன. இவ்வாலயத்தின் தலவிருட்சம் ஆலமரம். புராதன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலை உப்புவெளி
## அருள்மிகு சோலை வைரவர் ஆலய ஆதீன கர்த்தாக்கள்



தி. சின்னையா கதிர்காமத்தம்பி கிராமசபைத் தலைவர் 1970ஆம் ஆண்டு முதல் 1980.12.01 ஆம் திகதி வரை இவ்வாலயத்தின் ஆதினகர்த்தாவாக விளங்கினார். இவரே முதலாவது ஆதினகர்த்தாவும் ஆவார்.

திரு. மாணிக்கம் குமாரசாமி கிராமசபைத் தலைவர். 1980.12..30 இலிருந்து 1985.07.06 ஆம் திகதி வரை ஆலய ஆதீன கர்த்த்தாவாகப் பணிபுரிந்தார்.





திரு. நடராஜா சத்தியமூர்த்தி 1985.07.10ஆம் திகதி முதல் இன்று வரை ஆலய ஆதீனகர்த்தாவாகவும், ஆலய பரிபாலனசபைத் தலைவராகவும் இருந்து ஆலயத் திருப்பணிகளை முன்னெடுத்துச் செல்கிறார். இவர் பொறுப்பில் ஆலயம் வளர்ச்சி பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2009 ஆம் அண்டு புதிதாக நிர்மாணிக்கப் பெற்ற
உப்பு வெளி அருள்மிகு சோலை வைரவர் ஆலயம்
கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம்



மகாமண்டபம் நாகதம்பிரான் சந்நிதி
ஆலய ஆதீன கர்த்தா திரு. ந. சத்தியமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலய மண்டபத்தில் அறநெறிப் பாடசாலை
வகுப்பு நடைபெறுகிறது. ஆசிரியரும் மாணவரும்



2010.12.20ஆம் திகதி திருகோணமலை மாவட்ட
கலாசார உத்தியோகத்தர் திரு. சி. மகேந்திரராஜா
அவர்களால், அருள்மிகு சோலை வைரவர் ஆலயத்தில்
அறநெறிப் பாடசாலை ஆரம்பிக்கப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் இம் மரத்தடியே , கல்வடிவில் அருள்சுரந்த எம்பெருமானின் இருப்பிடமாகும். பின்னர் மண்ணாலான சிறு கொட்டில் கோவிலாகி, சிறு கற்கோவிலாகி, 1975ஆம் ஆண்டு பெரியகோவிலாக நிர்மாணிக்கப் பெற்று விளங்கியது 2009-03-22 இல் ஆலயம் மீண்டும் புதிதாக நிர்மாணிக்கப்பட வேண்டியதாயிற்று.

2009 ஆம் ஆண்டு கும்பாபிடேகத்தின் பின், முன்னர் நடந்த நிகழ்வுகளுடன், 10 நாட்கள் அலங்காரத் திருவிழா, கும்பாபிடேக தின சங்காபிடேகம், சித்திரைப் பரணி, நவராத்திரி, திருவெம்பாவைப் பூசை என்பனவும் ஆலயத்தில் வருடாந்தம் நடைபெறுகின்றன.

வைரவ மூர்த்தி, சிவபெருமானுடைய ஒரு திருமூர்த்தமாகவும், அவருடைய திருக்குமாரர் ஐவருள் ஐந்தாவது குமாரராகவும் ஆகமங்கள் கூறுகின்றன. அதனால் இவ்வாலயத்தில், மார்கழித்திருவாதிரைக்கு முந்திய 9 நாட்களும் திருவெம்பாவை பூசைகளும், ஆதிரை நாளன்று விசேட அபிடேகம் பூசைகளும் நடைபெறும். இன்னும் இச்சாசக்தியாக ஸ்ரீமுத்துமாரி அம்மன் இவ்வாலயத்தில் பரிவார மூர்த்தியாக விளங்குவதால், அம்பிகைக்குரிய நவராத்திரி விழாவும் இங்கு சிறப்பாக நடைபெற்று விஜயதசமி அன்று இவ்வாலயத்திலிருந்தும் அம்மன் கும்பமும் கட்டுக்கும்பங்களும் நகர்வலம் செல்லும் அதனால் இவ்விழாக்கள் பற்றியும் இங்கு குறிப்பிட்டுள்ளோம்.

2010-12-20 இல் இவ்வாலயத்தில் அறநெறிப்பாடசாலை ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திருப்பணியை, திருகோணமலை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திரு.சிவஞானம், மகேந்திரராஜா ஆரம்பித்துவைத்துள்ளார் வருங்காலத்தில் ஆலயச் சூழலில் வாழும் இளம் சமூகத்தினர் சைவநெறி நின்று வாழ இது வழிவகுக்கும்.

2011 ஆம் ஆண்டு முதன்முதலாக ஐயப்பன் பூசை நடைபெற்று பலர் கலந்து கொண்டு மாலை போட்டனர் இந்நிகழ்வும் வருடாந்தம் இடம் பெறும்.

ஆதீனகர்த்தா. திரு.நடராஜா, சத்தியமூர்த்தியைத் தலைவராகவும், திரு.சு.திருச்செல்வத்தை உபதலைவராகவும், திரு. குகதாஸ் ராம்கிஷனைச் செயலாளராகவும் சு.பத்மகலாவை உபசெயலாளராகவும், திரு.ஸ்ரீஸ்கந்தராஜா, அருண்சாந்தைப் பொருளாளராகவும், ஜெ.ஜெயந்தி, கு.அர்சுன், ஸ்ரீ நிகைசாந், ம.சுஹிதரன் ஆகியோரை மேலதிக உறுப்பினர்ாளாகவுங் கொண்ட ஆலய பரிபாலன சபையே, ஆலய நிர்வாகத்தை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கதாம்.

– தொகுப்பு –

**திரு. நடராஜா. சத்தியமூர்த்தி**
**ஆதீன கர்த்தா,**
**ஆலயபரிபாலன சபைத் தலைவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை - உப்புவெளி அருள்மிகு சோலை வைரவர்

## திருவூஞ்சல்.

**ஆக்கம்**

**கலாபூசணம் செல்வி. மணிமேகலா தேவி கார்த்திகேசு**


### காப்பு

சீர்த்தி நிறை கோகர்ண உப்புவெளி சோலையிலே
சிறப்புடனே எல்லைநின்று காவல் புரியும்
பார்புகழும் பெருமைபெறு வைரவப் பெருமானுக்கு
பண்மிகுந்த செந்தமிழால் ஊஞ்சல் பாட
கீர்த்திமிகு சிவனாரின் மூர்த்தமாக விளங்கும்
கிருபையுள்ள வைரவரின் மூத்த அண்ணன்
கார்மேக வண்ணமுடை கணபதியின் பாதம்
கருதியே கைதொழு தேன் காப்பதாமே.

### திருவூஞ்சல்

01.
பண்ணினிய மறைகள் நான்கும் கால்களாக
பக்தி நிறை சிவாகமங்கள் நல்ல விட்டமாக
எண்ணரிய ஆணிமுத்து ஆரங்கள் கயிறதாக
எழில் மின்னும் பொற்தவிசு பீடமாக
கண்ணுதலோன் கொண்ட திருக்கோல மானமைந்தா
கருத்தினொடு காவல் செய்யுங் கருணாகரா
மண்ணுலகு சோலையிலே இனிதே மேவி
மகிழ்ந்திருக்கும் வைரவரே ஆடீர் ஊஞ்சல்

02.
அரம்பையரும் ஈங்குவந்து கவிகை தாங்க
அலைமகளுங் கலைமகளுங் கவரி வீச
பரதமுனி வழிநின்று தேவமாதர் ஆட
பக்கலிலே இன்னிசைவீணை முழவம் ஒலிக்க
பரவசமாய்ப் பக்தர்குழாம் பாடி யாட
பக்திவெள்ளங் கோவிலிலே கரைபுரண் டோட
அரனாரின் ஒருருவாய் வந்து, அயன் தலைகொய்த
அற்புதனே ! வைரவரே ஆடீர் ஊஞ்சல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. சுந்தர மார்பில்நவ ரெத்தினமணி மாலைகளசைய
சுகிர்தமுடன் பதங்களிலே சிலம்பு கழலாட
தந்திமுகன் ஆறுமுகன் வீரபத்திரன் என்னும்
தகைமைபெறு அண்ணன்மாரும் வடந் தொட்டாட்ட
முந்தி வந்து சூரியனும் சந்திரனும் இருமருங் கிருந்தே
முத்தமிழாற் சோபனங்கள் கூறி வாழ்த்த
அந்தமிலா அரனாரின் அவதாரமாய் வந்த
அருமருந்தே வைரவரே ஆடீர் ஊஞ்சல்

04. சுடர்மிகு சூலமொடு வெடிபடு தமருகமுஞ்
சுந்தரமாய் வலக்கரத்து ஏந்தி நின்று
இடக்கரத்து கபாலமொடு பாசமு மேந்தி
இடர்செய் ஆனையின் தோலுரித்த தீரா
அடவி, மலை, ஆறு, குளம் அழகுமிகு சோலை
அன்பருள்ளும் மேவிநின்று அருள் செய்வோனே
திடமான மனதோடு செல்வமெல்லாம் அளிக்கும்
திருமகனே பைரவரே ஆடீர் ஊஞ்சல்.

05. அட்ட மூர்த்தங்கள் அனைத்து மொன்றான
அழகிய திருக்கோ லமுடன் சோலையிலே
கட்டங்கள் போக்கியே கவலைகளைக் களையும்
கனிவுடைய தெய்வமே கருணாகர மூர்த்தி
மட்டவிழ் புன்னை கொன்றை மல்லிகை முல்லையென
மலர்கள் பல நிறை சோலை சூழ்ந்திருக்கும்
பட்டமுடைய் பழம்பதியாம் சோலையடி மேவி
பரிபாலிக்கும் பைரவரே ஆடீர் ஊஞ்சல்

06. பழமைக்கும் பெருமைக்கும் பெயர் பெற்ற பதியில்
பாங்குறவே எல்லைக்காவல் புரியும் தீரா
அழகிய சதுர்ப்புயத்து பாசங்கபாலஞ் சூலமொடு
ஆர்த்திடும் உடுக்கையும் ஏந்திய கோலா
நிழல்பரப்பும் வேம்பு, புளி அதனில் மகிழ்ந்து
நிமலனெநீ குடியிருப்பாய் அன்பர் போற்ற
கழல் சிலம்பு, ஒலித்திடவே நடுநிசியில் நட்டங்
களித்தாடும் வைரரே ஆடீர் ஊஞ்சல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. பயம்போக்கிப் பக்குவமாய் ஞானம் அருளும்
பவித்திரனே பாக்கியனே பரமனை மதியாத
அயன் தலை கொய்தவர் அகந்தை அடக்கிய
அற்புதனே சிற்பரனே அருங்குணசீலா
கயவர்கள் தீங்கனைத்துங் களையும் வீரா
கலகங்கள் வாராது காக்குங் காவற்காரா
கயமுகனின் தம்பியே கடலாடும் நேசா
கற்பகமே வைரவரே ஆடீர் ஊஞ்சல்

08. நித்திரை நீக்கி நடுநிசியில் உனைப்பூசிக்கும் யோகியர்
நிறைந்த பேரின்பமது பெற்றுவப்பர் அன்றோ
பத்திரியில் வந்நின்று பரவசமாய் ஆடும்
பக்குவனே பக்தருக்கு நல்லகுறி சொல்பவனே
சித்திகள் பலகிட்டும் நினைத்தினம் தொழுதால்
சிறப்புகளும் வந்தடையும் நின்புகழ் பாட
அத்திமுகன் தம்பியே அரனார் திருவுருவே
அருள் பொலியும் வைரவரே ஆடீர் ஊஞ்சல்

09. தீதகற்றும் புண்ணியனே ஆடீர் ஊஞ்சல்
தீனர்க்கருள் செய்பவனே ஆடீர் ஊஞ்சல்
கோதகன்ற குருமணியே ஆடீர் ஊஞ்சல்
கோலவெழில் வைரவரே ஆடீர் ஊஞ்சல்
மாதர் நிறை காப்பவனே ஆடீர் ஊஞ்சல்
மாண்புகள் உடையவனே ஆடீர் ஊஞ்சல்
பாதகரை ஒறுப்பவனே ஆடீர் ஊஞ்சல்
பாவினை தீர்ப்பவனே ஆடீர் ஊஞ்சல்

10. சோதிவடி வானவரே வாழி ! வாழி !
சோலையடி வைரவரே வாழி ! வாழி !
ஆதிசிவன் பெற்றவனே வாழி ! வாழி !
ஆதிசக்தி பாலகரே வாழி ! வாழி !
நாதியற்றோர் நற்துணையே வாழி ! வாழி !
நால் வேத வாகனரே வாழி ! வாழி !
கோதிலாக் குணக்குன்றே வாழி ! வாழி !
கோகர்ணக் காவலனே வாழி ! வாழி !





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எச்சரிக்கை

சிவனார்திரு மேனிகொண்ட பாலா எச்சரிக்கை
தவமேபுரி யோகியரின் தவமே எச்சரிக்கை
அப்பனுக்காய் அயன்தலையைக் கொய்தாய் எச்சரிக்கை
அட்டமூர்த்த வடிவாய்வந்த அழகே எச்சரிக்கை

சூலபாணி கபாலீஸ்வரா தூயோய் எச்சரிக்கை
மூலமூர்த்தி மூர்த்தமான வைரவா எச்சரிக்கை
ஆலமுண்ட நீலகண்டா வைரவா எச்சரிக்கை
ஞாலமெலாம் போற்றுகின்ற ஞானா எச்சரிக்கை

முந்துதமிழ் மாலையணி முதல்வா எச்சரிக்கை
சுந்தரனே! சுடரெளியே ! சோதி எச்சரிக்கை
உந்துசக்தி எனவிளங்கும் உத்தம எச்சரிக்கை
புந்திவைத்துப் போற்றுகின்றோம் புனிதா எச்சரிக்கை

## பராக்கு

திருபொலியும் கோகர்ண கவலா பராக்கு
திவ்வியசேவை தந்தருளும் தேவா பராக்கு
நிருத்தனாய் உடுக்கை - கை ஏந்தினாய் பராக்கு
நிர்மலனே நித்தியனே நிறைவே பராக்கு

ஆரணத்தின் பொருளான அப்பனே பராக்கு
ஆகமங்கள் போற்றுகின்ற ஆதியே பராக்கு
காரணனே பூரணனே கருணா பராக்கு
காசினியைக் காத்திடுங் கபாலீ பராக்கு

செந்தமிழுஞ் செழுங்கலையும் வளர்ப்பாய் பராக்கு
செவ்வாடைச் சுந்தரனே சிவனே பராக்கு
எந்தவேளை இடர்வரினுங் காப்பாய் பராக்கு
எங்குநிறை பரம்பொருளே ஏந்தலே பராக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லாலி

| | | | | |
|---|---|---|---|---|
| லாலி | லாலி | லாலி | லாலி | லாலி |
| கங்கைவேணியன் | புதல்வா | லாலி | லாலி | (லாலி) |

| | | | | |
|---|---|---|---|---|
| 01. எல்லைக் | காவற் | தெய்வமே | லாலி | லாலி |
| என்றுந் | துயர் | தீர்ப்பவனே | லாலி | லாலி |
| மங்கலமாய் | சூலங் | கொண்டாய் | லாலி | லாலி |
| மஞ்சள் | குங்குமமுங் | காப்பாய் | லாலி | லாலி |
| | | | | (லாலி) |

| | | | | |
|---|---|---|---|---|
| 02. பாசங் | கபாலந் | தாங்கியவா | லாலி | லாலி |
| பாசவினை | அறுத்திடும் | நேசா | லாலி | |
| வாசமலர்ச் | சோலையிலே | வந்தாய் | லாலி | |
| வாழ்வில் | இன்பந் | தருபவனே | லாலி | லாலி |
| | | | | (லாலி) |

| | | | | |
|---|---|---|---|---|
| 03. தமருங் | கையேந்தியவா | லாலி | லாலி | |
| தண்ணளிசேர் | எம்மிறையே | லாலி | லாலி | |
| நவசிவாய | உருவினனே | லாலி | லாலி | |
| நடுநிசியில் | நடம்புரிவோய் | லாலி | லாலி | |
| | | | | (லாலி) |

# மங்களம்

| | | | |
|---|---|---|---|
| மங்களம் | மங்களம் | மங்களம் | - ஜெயஜெய |
| மங்களம் | மங்களம் | மங்களம் | (மங்) |

| | | | |
|---|---|---|---|
| கன்னல் மொழி | அம்மைக்கும் | கங்கை வேணி | அப்பனுக்கும் |
| மன்னுதிருக் | கோணைநகர் | காக்குஞ்சோலை | வைரவர்க்கும் |
| | | | (மங்) |
| ஆனைமுகன் | ஆறுமுகன் | ஆத்தாள் | மகமாரிக்கும் |
| ஆவினுக்குங் | கோவினுக்கும் | அந்தணர் | அறவோர்க்கும் (மங்) |
| செந்தமிழ்நூல் | செய்வோர்க்கும் | சீர்கலைகள் | வளர்ப்போர்க்கும் |
| செம்மைநெறி | வாழ்வோர்க்கும் | செவ்வரியகற்பு | மாதருக்கம் (மங்) |

2010-10-10 — சுபம் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவ மூர்த்தி

## (விளக்கக் குறிப்புகள்)

உலகத்திற்குக் கர்த்தாவாகிய சிவபெருமானின் அருட்தன்மை எல்லையற்றது. சிவபெருமானின் பல திருப்பெயர்களில் 'வைரவர்' என்னும் பெயர், நடுக்கத்தைப் போக்கி, ஞானத்தை அருள்வதாகும். இவரே முத்தொழிலுக்கும் அதிபதி. கிராமம், நகரம், நதிக்கரை, மலை, அருவி, கோவில், அரண்மனை, வயல்வெளி, கல்விக்கூடம், கோட்டை, மாடாலயம், புளியடி, வேம்படி, ஆலடி, சுடலை எங்கும் நின்று காத்தருள்வார்.

சிவாலயங்களில் சூரிய பூசையில் தொடங்கி வைரவரிடம் பூசை நிறைவு பெறும். மறுநாள் வைரவரிடம் உத்தரவு பெற்றே ஆலயக் கதவுகள் திறக்கப்படும். மகோற்சவம், பிரதிட்டை ஆகிய காலங்களில், கிராமசாந்தியில் வைரவர் வழிபாடு தொடங்கி, வைரவர் மடையில் நிறைவெய்தும்.

இவரை வழிபட்டால் பயநீக்கம், தைரியம், செல்வம், ஞானம், ஏவல், பில்லி, சூனியம் நீங்கல் என்பன சித்திக்கும். வாருண பத்ததியிற் குறிப்பிட்ட அஷ்ட வைரவ மூர்த்திகளின் சக்திகள் ஒன்றே இணையப்பெற்ற மகா சக்திவடிவம் தாங்கி, அற்புத சிற்பக் கோலங் கொண்டவர் அருள்மிகு சோலை வைரவர்.

வைரவ மூர்த்தியின் பல்வேறு சிறப்புகள் பற்றியும், வாருண பத்ததி அஷ்டவைரவமூர்த்தங்கள் பற்றியும் வைரவர் பஞ்சவர்ண முறை, வைரவ சுவாமி யந்திரம் பற்றியும் விரிவாக நோக்குவோம்.

### சிவபெருமானே பைரவனாய் வருதல்

உலகின் முழுமுதற் பொருளாகிய சிவபெருமான், உலகிற்குத் தீங்குசெய்வோரைத் தண்டிக்க, அனேக சமயங்களில், காளி, வீரபத்திரர், பைரவர் முதலிய வீரதோற்றங்களைப் படைத்து, அனுப்புவார். எனினும் சிலசமயங்களில் தானே சூலபாணியாகி துஷ்டரை ஒடுக்கவும் சிஷ்டரைப் பரிபாலிக்கவும் வந்ததாக அறியக்கிடக்கிறது.

எடுத்துக்காட்டாக திருவெண்காட்டில் மருத்வாசூரனை வெல்ல, தனது பஞ்சதேகங்களில் ஒன்றான பைரவ உருவிற்தோன்றி அழித்தலை காண்கிறோம். இதைப் போலவே ஒரு சமயம் பிரம்மன் அகந்தையை அடக்க, தானே பைரவனாகத் தோன்றி அவனுடைய ஐந்தாவது சிரத்தைக் கிள்ளி எடுத்தார்.

இத்தகைய பைரவ கோலத்தில் அவருக்கு கபால மாலை, மணிமாலை, நாய்வாகனம் முதலியவை அமைவதில்லை. நாகங்கள் மட்டுமே அணிந்ததாக உள்ளது. இத்தகைய பைரவமூர்த்தியை, பிரம்மன் பூசித்துப் பேறுபெற்ற, திருத்தலங்களில் ஒன்றான பெருநகரில் காண்கின்றோம். இவர் நாகத்தோடுகளை அணிந்துள்ளார்; இடுப்பின் இருபுறங்களிலும் கரங்களிலும் பாம்புகள் உள்ளன; இது மிகவும் அபூர்வமான திருமேனியாகும். கார்த்திகை மாதக் கடைசிச் செவ்வாய் அன்று இம்மூர்த்திக்குச் சிறப்பான வழிபாடுகள் செய்யப்படுகின்றன. இத்தலம் காஞ்சிபுரம் - வந்தவாசி சாலையில் செய்யாற்றின் தென்கரையில் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைரவர் - வைரவர் பெயர் விளக்கம்

பைரவர் என்பது வடமொழிச் சொல்லாகும். இது 'பீரு' என்னும் சொல்லை அடிப்படையாகக் கொண்டது. இதற்கு 'அச்சம்' என்பது பொருளாகும். பைரவர் என்ற சொல்லுக்கு மிகவும் என்பது கருத்து. எதிரிகளுக்குப் பயம்தந்து, தன்னை அண்டியவர்க்கு அருள்பாலிப்பதனால் இவருக்கு "பைரவர்" என்பது பெயராயிற்று. மேலும், ப-(பரணம்) என்பது உலகில் உயிர்களைத் தோற்றுவித்து நிரப்பும் படைப்புத் தொழில் புரிவதையும், ர-(ரமணம்) என்பது தோன்றிய உயிர்களைக் காப்பதையும், வ - (வமணம்) என்பது நெடுங்காலம் வாழ்ந்து சோர்ந்த உயிர்களை அழித்துத் தன்னுள் ஒடுக்கிக்கொள்வதையுங் குறிக்கின்றது. இந்த முத்தொழில்களையும் ஆற்றுவதால் இறைவன் "பைரவன்" என்று அழைக்கப்படுகின்றார்.

சில நூல்களில் "பைரவம்" என்பதற்குப் 'பயந்த சுபாவத்தை உடைய பெண்கள் கூட்டம்' என்றும் பொருள் சொல்லப்பட்டுள்ளது. (பீருணம் ஸமூஹ பைரவம்) தர்மத்தின் மீது பயங்கொண்ட பெண்களே, உலகில் சிறந்த கற்பரசிகளாக விளங்குகின்றனர். அவர்களுக்கு காவலாக இருந்து தர்மத்தைக் காப்பதால் சிவபெருமான் பைரவர் எனப்படுகிறார்.

இனி "வைரவர்" என்ற சொல்லின் பொருளைக் காணலாம். பைரவர் என்ற சொல்லிலிருந்து மருவிய சொல்லே "வைரவர்" என்று குறிக்கப்படுகிறது. ஆனால் வைரம் போன்ற திண்மையான தேகம் படைத்தவராகவும், பக்தனுக்கு வைரத்தால் ஆன கோட்டை போன்று காவல் தெய்வமாக விளங்குவதாலும், சிவபெருமானின் காவல் திருக்கோலமே "வைரவர்" என அழைக்கப்பெற்றதென ஆய்வாளர் கூறுவர். வைரம் பாய்ந்த தன்மையைக் குறிக்கும் "காழ்" என்பதன் அடிப்படையாகத் தோன்றிய சீர்காழி, வைரவரின் தலைமையிடமாகத் திகழ்வதும் இங்கு கருத்திற்கொள்ளத்தக்கதாம்.

மேலும் வைரவருக்கு வடுகன், சட்டநாதன் என்ற பெயர்களும் வழங்குகின்றன. பைரவர் காவல் தெய்வமாக விளங்குவதால் காவல் குறியீடான நாயை வாகனமாகக் கொண்டுள்ளார். இந்த நாய் அவருக்குப் பின்புறம் குறுக்காகவும் அவருக்கு இடப்புறம் நேராகவும் நிற்கின்றது. சில கலைஞர்கள், இந்த நாய், பைரவரின் கரத்திலுள்ள வெட்டுண்ட தலையிலிருந்து வடியும் இரத்தத்தைச் சுவைப்பது போலவும் அமைப்பர்.

பூர்வகாரண ஆகமத்தில் ஆதியில் வேதம், காளை வடிவம் கொண்டிருந்தது என்றும், பின் கலியின் கொடுமையால் வலியிழந்து இப்போது நாயுருவில் உள்ளது என்றும் அதுவே பைரவருக்கு வாகனம் ஆகியதெனவும் கூறப்படுகிறது.

மேலும், வானில் உலவிய அதன் கால்கள், இப்போது சுடுகாட்டில் அலைவதாகக் கூறுகிறது. பல்வேறு சமய நூல்களும் வேதமே நாய் வடிவங்கொண்டு பைரவரின் வாகனமாகவும் கொடியாகவும் விளங்குகின்றதென எடுத்தியம்புகின்றன. ஸ்ரீருத்திரத்தில் இறைவன் நாயாகவும், நாயின் தலைவானகவும் சொல்லப்படுகிறது. பைரவரின் நாய்க்கு "கரமேயன்" என்பது பெயராகும்.

பைரவருக்கு பிரியமானவை நெய் அபிடேகம், சிவப்பு மலர்கள், உடைக்கப்படாத முழுத்தேங்காய், மாவிளக்கு, நார்ப்பழங்கள், சிவப்பு வண்ணம் தோய்ந்த கல்யாணிப் பூசணிக்காய், தேன், வடை அவித்த உணவுகள் முதலியனவாகும்.

பைரவருக்குரிய வழிபாட்டு நேரம் நள்ளிரவாகும். இந்நேரத்தில் பராசக்தி 'பைரவி' என்னும் பெயரில் நடமாடுகிறாள். அவளுடன் பெருமான் பைரவனாக வீற்றிருக்கின்றார். பரமஞானிகளும், யோகிகளும் தமது தூக்கத்தை விடுத்து, அந்த வேளையில் தியானத்தில் 'திரிபுர பைரவியையும், பைரவரையும்" தியானிக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிராமிப்பட்டர் “யாமம் பைரவர் ஏத்தும் பொழுது....” என்று பாடியுள்ளார். தொடர்ந்து விழிப்புணர்வோடு வேண்டுபவருக்கு நள்ளிரவில் திருவடி தரிசனம் தருவாள் பைரவி என்று ஆன்றோர் அருளுவதும் இங்கு எண்ணத்தக்கதாம். சீர்காழியில், வடுகநாதருக்கு வெள்ளிக்கிழமை நள்ளிரவு சிறப்பு வழிபாடு செய்யப்படுவது குறிப்பிடத்தக்கதாம்.


## கபால வைரவர் (சுடலை வைரவர்)

கபாலம் - திருவோடு (மண்டையோடு), வைரவர் தாம் காவல் தேவதை என்பதை உணர்த்த நீண்ட மணிமாலையை அணிந்திருக்கின்றார். அவரே சம்ஹார (அழித்தல்) வைரவராக, உலகினை அழித்தபின், பிரம்மா, விஷ்ணு உள்ளிட்ட சகல தேவர்களின் மண்டை ஓடுகளையும் கோர்த்து மணிமாலையாக அணிந்து காட்சி அளிக்கிறார். இந்த மண்டை ஓடுகளில் இருந்து மீண்டும் அவர்கள் தோற்றுவிக்கப்படுகிறார்கள். இப்படிக் கபால மாலைகளை அணிந்த வைரவ மூர்த்தங்களை அபூர்வமாகவே காணமுடிகிறது.

வாருணபத்ததி கூறும் பைரவருடைய அட்டமூர்த்தங்களுள், ஆறாவது மூர்த்தமானவர் கபால வைரவர். இவருக்குரிய திசை வடமேற்கு, தேவியின் பெயர் இந்திராணி, வாகனம் யானை, நிறம் பத்மராக காந்தி ஆகும். சதுர்ப்புஜங்களிலும் பரசு; வஜ்ரம்; கத்தி; பானபத்திரம் என்பன காட்சி தரும்.

தொகுப்பு
ஸ்ரீலஸ்ரீ. மு. சுந்தரலிங்கதேசிகர்
அருள்மிகு ஸ்ரீ ஆலடி விநாயக தேவஸ்தானம்
ஆதீனகர்த்தா பிரதமகுரு
திருகோணமலை

### பைரவர் பஞ்சவர்ணமுறை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாருணபத்ததி கூறும் அஷ்ட பைரவர் - விளக்கம்

| | |
|---|---|
| **படம் 01 – அஜிதாங்கர்**  | இவர் கிழக்குத் திசைக்குரியவர். இவருடைய நிறம் வெண்மை; தேவியின் பெயர் பிராமி; வாகனம் ஹம்சம். சதுர்புயங்களிலும் கத்தி, பானபத்திரம், உருத்திராக்கமாலை, கமண்டலம் தாங்கியுள்ளார் |
| **படம் 02 – ருருவர்** | ருருவர் என்பவர் இரண்டாவது வைரவர். இவர் தென்கிழக்குத் திசைக்குரியவர். இவர் நிறம் ஸ்படிகம் (பளிங்கு). தேவியின் பெயர் மகேஸ்வரி. வாகனம் ரிஷபம். டங்கம், கத்தி, பானபாத்திரம், குறுவாள் என்பவற்றை நான்கு கரங்களிலும் தாங்கி உள்ளார். |
| **படம் 03 – சண்டர்**  | தெற்குத் திசைக்குரியவர். சண்டபைரவர். இவர் பொன்னிறத்தவர். தேவி பெயர் கௌமாரி; வாகனம் மயில். வில், பாணம், கத்தி, பானபத்திரம், என்பன நாற்கரங்களிலும் தாங்கியவர். |
| **படம் 04 – குரோதனர்**  | குரோதனர் தென்மேற்குத் திசைக்குரியவர். கரிய நிறங்கொண்ட இவர் மனைவி வைஷ்ணவி. வாகனம் கருடன். சங்கு, சக்கரம், கதை, பானபத்திரம், நான்கு கரங்களிலும் விளங்கும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படம் 05 – உன்மத்தர்**



மேற்குத் திசையில் விளங்குபவர் உன்மத்தர் பொன்னிறங் கொண்டவர் தேவி பெயர் வாராஹி நான்கு கைகளிலும் கத்தி உலக்கை கேடயம் கபாலம் காட்சி அளிக்கும்.

**படம் 06 – கபாலர்**



கபாலர் வடமேற்குத் திசைக்குரிய பைரவர். தேவி பெயர் இந்திராணி; வாகனம் யானை; நிறம் பத்மராகசாந்தி. பரசு, வஜ்ரம், கத்தி, பானபத்திரம் என்பவை சதுர்ப்புயங்களிலும் விளங்கும்.

**படம் 07 – பீஷ்ணர்**



வடதிசைக்கு உரியவர் பீஷ்ணர் சிவந்த நிறத்தவர். தேவி பெயர் சாமுண்டி. வாகனம் நாய். நான்கு கரங்களிலும் சூலம், இரும்புலக்கை, கபாலம், கத்தி என்பன ஏந்தி நிற்பார்.

**படம் 08 – சம்ஹாரர்**



எட்டாவது மூர்த்தம் சம்ஹாரர். திசை வடகிழக்கு; நிறம் வெண்மை; தேவிபெயர் சண்டிகை; வாகனம் சிங்கம்; நான்கு கைகளிலும் ஏந்தும் ஆயுதங்கள், சூலம், டமருகம், சங்கு, சக்கரம், கதை, கத்தி, கபாலம், கட்வாங்கம், பாசம், அங்குசம் என்பனவாம்.

தொகுப்பு

ஸ்ரீலஸ்ரீ. மு.சுந்தரலிங்க தேசிகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவர் வழிபாடு

ஆக்கம்

திரு. சீ. மதியழகன்

அதிபர்

தி/ ஸ்ரீ விக்கினேஸ்வரா மா. வி. திருகோணமலை.

தொன்மையும் பழமையும் மிக்க இந்து சமயத்திலே பல்வகைச் சமய வழிபாட்டு மரபென்பது சிறப்புமிக்க ஒன்றாகும். அறுவகைச் சமய நெறிகளால் பரந்துபட்ட இந்து மதமானது சிந்துவெளித் தொன்மை நிறைந்த சனாதன தர்மமாகும். சைவசமயத்தின் முழுமுதற் கடவுளாகப் போற்றப்படும் சிவன் 108 சிவகரணங்களுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளார். அந்தவகையில் பைரவர் சிவமூர்த்தங்களுள் ஒருவராக வழிபடப்பட்டு வருகின்றார்.

பாடல் பெற்ற திருத்தலமான திருக்கோணேஸ்வரம் அமைந்துள்ள திருகோணமலை மாவட்டத்தில் நகர்புற மக்களின் எல்லைப்புற காவல் தெய்வமாகவும். திரியாய் வரையுமான மக்களை வரவேற்கும் சோலை வைரவராகவும் அருள் பாலித்துக் கொண்டிருப்பவர் 3ம்கட்டை சோலை வைரவர் ஆலய காவற் கடவுளாகும்.

பைரவர் வழிபாடு ஆரம்பத்தில் ஆகமம் சாராத கிராமிய சிறுதெய்வ வழிபாடுகளுள் ஒன்றாகவே கொள்ளப்பட்டிருந்தது. கிராமிய மக்களது சாதாரண ஒரு வழிபாட்டுத் தெய்வமாகவும் பாதுகாப்புத் தெய்வமாகவும் பைரவர் வழிபாடு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இலங்கையைப் பொறுத்தவரையில் வடக்கு, கிழக்கு, ஊவா, மத்திய பிரதேசங்களிலும் பைரவர் வழிபாடுகளை அடையாளங்காண முடிகிறது. தமிழ் இலக்கியங்களில் சிறுதெய்வ வழிபாடாக இத்தெய்வம் பற்றிய குறிப்புக்கள் இடம்பெற்று இருக்கின்றன. பைரவர் உட்பட சிறுதெய்வங்களை மக்கள்

1. இனத் தெய்வம்
2. குலத் தெய்வம்
3. சாதித் தெய்வம்
4. ஊர்த் தெய்வம்
5. காவல் தெய்வம்
6. மாலைத் தெய்வம்
7. சமாதித் தெய்வம்
8. துணைத் தெய்வம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

என பல்வேறு வகைக்குள் உள்ளடக்கி இருந்தனர். இவ்வழிபாடுகள் கதைப்பாடல் வடிவில் மரபுவழி வந்த நாட்டுப்புற வழிபாடுகளாக இருந்தே இன்று "சோலைபைரவர்" போன்ற ஆகமம் சார்ந்த கோவில் அமைப்புக்களாக மாற்றம் பெற்றுள்ளன.

சாதாரண மக்கள் தமது வசதிக்கேற்ப எளிமையாக ஆரம்பித்த இவ்பைரவர் வழிபாடு உளவியல் நோக்கில் மக்களை திருப்திப்படுத்துவதாகவே அமைந்து இருந்தது.

இன்று 3ம் கட்டையில் கோயில்கொண்டு இருக்கும் சோலை பைரவர் ஆலயம் போன்று, இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் பைரவர் ஆலயங்கள் ஆகமசார் வழிபாடுகளாக பெரிதும் வளர்ச்சி பெற்றுள்ளன. அந்தவகையில்

| | |
|---|---|
| ஞான பைரவர் | - குப்பிளான் |
| பல்லப்ப பைரவர் | - மருதனாமடம் |
| ஞானவைரவர் | - கொட்டாஞ்சேனை |
| சிறிதுவஞான பைரவர் | - உடுப்பிட்டி |
| சிறுதான்றி பைரவர் | - சரவளை |
| ஆதி வைரவர் | - வட்டுக்கோட்டை |
| ஞான வைரவர் | - இளவாலை |
| வைரவர் கோயில் | - மண்டூர் |
| சுடலை வைரவர் | - கொக்கட்டிச்சோலை |
| சுடலை வைரவர் | - குருக்கள் மடம் |
| ஆதி வைரவர் | - காத்தான்குடி |

ஆகிய பைரவர் ஆலயங்கள் 50 வருடங்களுக்கும் மேல் பழமை வாய்ந்த ஆலயங்களாக மதிப்பிடப்பட்டுள்ளன.

பல பண்டைய தமிழ் நூல்களில் பைரவர் "வடுக தேவர்" என குறிப்பிடப் பட்டுள்ளார். மலையகப் பகுதியிலும் சுதேசிகளும் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களும் தங்களது காவல் தெய்வங்களாக மாடசாமி, கறுப்பன், சங்கிலிகறுப்பன், முனியாண்டி போன்ற தெய்வங்களை குலதெய்வங்களாக வழிபட்டமைக்கான ஆதாரங்களை அறிந்துகொள்ள முடிகின்றது.

இலங்கைப் பண்பாட்டு அம்சங்கள் தென்இந்தியப் பண்பாடுகளோடு மிகவும் நெருக்கமான தொடர்புகளை கொண்டவை. அந்த வகையில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் போது கி.பி 2ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக கருதப்படும் பைரவவிக்கிரகம் ஒன்று கிடைத்துள்ளமை இலங்கையில் வைரவ வழிபாட்டின் பழமைத் தன்மையை எடுத்துக்காட்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்திலே ஆகமம் சார்ந்த ஆகமம் சாராத வகையில் வைரவர் வழிபாடு சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனை மட்டக்களப்பு மான்மியம், காவியங்கள், அகவல்கள், தாலாட்டுப் பாடல்கள், பத்ததிகள் என்பவற்றைக் கொண்டு அறிந்து கொள்ள முடிகிறது.

வைரவரின் தோற்றம் பற்றி, பல்வேறு சமஸ்கிருத நூல்களிலும், புராண நூல்களிலும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அதேபோல பக்தி பாடல்களாக கருதப்படுகின்ற " மகா மாரியம்மன் திவ்விய காரணி நூல்" அகவலில் வைரவர் தோற்றம் இவ்வாறு விளக்கப்பட்டுள்ளது.

'செம்பொன் மேனியும் திருநீற்றழகும்
உச்சிக்குடுமியும் உதிரவாயும்
அலறிய பல்லும் அண்ணார்ந்த பார்வையும்
சாலந்றரித்த தண்டை பாடகமும்
கழுத்தில் கட்டிய கங்கண மாலையும்
கையில் பிடித்த கண்டகோடரியும்
அரையில் கட்டிய காவியொட்டியாணமும்
அங்கம் முழுவதும் அணிந்த வெண்ணீறும்
அக்கினிக் கண்ணும் அரவணி குஞ்சியும்
குஞ்சிச் சடையிற் குலாவிய பிறையும்..'

என்ற பாடல் வரிகள் மூலம் திருவுருவ வழிபாட்டில் வைரவரது தோற்றம் தெளிவாக எடுத்துக் காட்டப்படுகிறது.

"சேத்திரபாலரான" இப்பெருமானின் செஞ்சடையும் நீலநிறமும் கொண்ட திருவடிகளில் சிலம்பும், மார்பில் தலைமாலையும், கையில் திரிசூலமும், மழு, பாசம், உடுக்கை என்பனவும் காணப்படுகின்றன. பொதுமக்களின் நம்பிக்கைக்குரிய காவல் தெய்வமான இவர், தோற்றத்தில் முக்கண்களோடும், கோரப்பற்களோடும், சீற்றம் கொண்ட முகத்தோற்றத்தோடும் விளங்குவார். இந்துமத மரபில் ஊழிக்காலம் என்ற ஒரு நம்பிக்கை உண்டு. அப்போது ஊழி நாயகனாக இறுதியில் யாவற்றையும் அழிப்பவர் வைரவரே என மக்கள் நம்பிக்கை கொள்கின்றார்கள். எமது இந்து மதத்திலே ஒவ்வொரு தெய்வங்களும் வாகனத்துடன் தொடர்புபடுத்தப்பட்டிருப்பது போன்று, பைரவமூர்த்தி நான்மறைகளை நாய் வடிவுடன் வாகனமாக கொண்டவர் எனக் கூறுவாரும் உள்ர்.

கிழக்கின் சிறுதெய்வ வழிபாடுகளில் கிராமங்களில் வேம்பு மரத்தின் கீழ் ஒரு திரிசூலத்தை ஊன்றி இவ்வழிபாட்டினை இலகுவாக மேற்கொள்வார்கள். அனேகமான கிழக்கு மாகாண பக்திப் பாடல்களிலும், பத்தாசிகளிலும், பைரவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகையை 108 எனக் குறிப்பிட்டிருக்கின்றன. அவை மகாவைரவர், ஆதி பைரவர், சண்ட பைரவர், சங்கார வைரவர், கபால பைரவர், கோதண்ட பைரவர், நரசிங்க பைரவர், ஊமத்த பைரஷவர், விளாறுக வைரவர், சுத்தாங்க வைரவர், நீலபைரவர், வீரபத்திர வைரவர், அகோர வீரபத்திரி பைரவர், சுடலை வைரவர், உச்சி வைரவர், கால வைரவர், சந்தி வைரவர், மாலைவைரவர், கெங்கை வைரவர், ஊத்தக்குடி வைரவர், கலியாண பைரவர், இருள பைரவர், மடுள் பைரவர், அக்னி பைரவர், வடுவ பைரவர் முதலியனவாகும்.

மேற்குறிப்பிட்ட பைரவ வடிவங்களில் பிரதேசத்திற்குப் பிரதேசம் இடத்திற்கு இடம் பைரவ வடிவங்கள் விருப்பின் அடிப்படையில் வழிபடப்பட்டு வருகின்றது. உதாரணமாக மட்டக்களப்பில் இருபதிற்கு மேற்பட்ட இடங்களில் மகாபைரவர், ஆதிபைரவர், நரசிங்க பைரவர் ஆகிய வழிபாட்டு வடிவங்களே வழிபடப்பட்டு வருகின்றது. அதே போன்று யாழ்ப்பாணம் பகுதியில் சிறிசிவஞான பைரவர் வழிபாடு அதிகமாக இருப்பதை குறிப்பிடமுடியும். நரசிங்கர், நரசிங்க பைரவர் என்ற இரு வழிபாடுகளிலும் பெரும்பாலும் ஒரே அம்சங்களையே காணமுடிகிறது. யாழ்ப்பாணத்தில் இத்தகைய வழிபாடுகளை அவதானிக்கமுடியும்.

பைரவ ஆலய அமைப்புக்களை பொறுத்தவரையில் மரத்தின்கீழ் திரிசூலத்துடன் ஆரம்பித்து, பந்தல்களின் கீழும் இன்னும் சில கருவறைகளுடனும், கருவறையும் ஒரு மண்டபத்துடனும், மேலும் சில கருவறை மண்டபங்கள் தூபி அமைப்புக்கள் சிகரங்கள் என்பவற்றைக் கொண்டனவாகவும் இன்று வளர்ச்சி அடைந்துள்ளன.

பைரவ வழிபாடு ஆகமமுறை சார்ந்த ஒரு வளர்ச்சியை பெற்றுள்ள போதும் பெரும்பாலான கிராமங்களில் மரபு வழியான முறையிலேயே சடங்குகளை மக்கள் மேற்கொள்வதில் நாட்டம் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. பிரதேச வழக்காறுகளிலும், ஆகமமுறை வைரவ கோயில்களிலும், நூல் கட்டுதல், திருநீறு போடுதல், தண்ணீர் ஓதி எறிதல் என்பன தொடர்ந்தும் இடம்பெற்று வருவதனை அவதானிக்கமுடியும். குலதெய்வ வழக்கப்படி சில மக்கள் வாசலின் வலது புறத்தில் வைரவர் காவல் பந்தல் ஒன்றை அமைப்பதும் வழக்கில் இருந்து வருகின்றது.

ஆனிமாத முதல் வாரத்தில் வைரவரை வேண்டி தித்திக்க சக்கரை அமுது செய்து இறைவனுக்கு படைத்து அயலவருடன் உண்டு மகிழும் வழக்கம் இன்று எம்மவரிடம் இருந்து வருகின்றது. ஒருவருடைய வீட்டில் பைரவ பொங்கல் என்றால் அந்த அயல் முழுவதுமே புனிதம் பெற்று விடும். எல்லோருமாக சுத்தப்படுத்து வார்கள், பந்தல் அமைப்பார்கள், பொங்கல், வடை, மோதகம் சிறப்பாக ஊர்ப் பெண்களின் தயாரிப்புகளாக இறைவனுக்கு படைக்கப்பட்டு உடுக்கை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரங்கள், தூபதீப ஆராதனை என ஊரே ஒன்று சேர்கின்ற ஒரு நிகழ்வாக வைரவரை மக்கள் வழிபட்டு வருகின்றனர்.

மேலும் வயல் செய்கின்ற மக்கள் 1.விதைப்பு ஆயத்தச் சடங்கு
2.கதிர்கண்ட சடங்கு
3.புதிர்ச் சடங்கு
4.களவெட்டிச் சடங்கு

என ஆகக்குறைந்து மூன்று நான்கு தடவைகள் வைரவருக்கான வழிபாடுகளில் ஈடுபட்டு வருவது மக்களின் நம்பிக்கைக்குரிய கடவுளாக பைரவ வழிபாடு இருப்பதையே எடுத்துக் காட்டுகின்றது. மேலும் ஆதிவைரவ வழிபாடுகள் இடம் பெறும் ஒரு சில இடங்களில் கரும்பு, பால், இளநீர், ரொட்டி, பழவகை என்பவற்றை படைத்து வழிபாடு செய்வதனையும். சுடலை பைரவருக்கும், நரசிங்க பைரவருக்கும் மது, உயிர்ப்பலி என்பவற்றைக் கொடுத்து வழிபடும் வழக்கம் இன்றும் இடம்பெற்று வருகின்றது. ஆகம முறையிலான ஆலயங்களிலும் இறுதியாக பைரவரிடம் திறப்புக்களை ஒப்படைக்கும் கிரியை முறைகள் இப்போதும் இடம்பெற்று வருவது வைரவர் காத்தல் கடவுள் என்பதையே எமக்கு நினைவுபடுத்துகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைரவர்

"மகாவிரதம்" என்ற சைவசமயப் பிரிவைச் சேர்ந்தவர்கள் பைரவரையே பரம் பொருளாக வழிபடுகிறார்கள். அவர்கள் பைரவர் கொண்ட கோலத்தையே தாமுங் கொண்டு ஆசைகள், அணிகள் துறந்து, ஊர் ஊராக பிச்சை ஏந்தி இன்றும் வாழ்கிறார்கள்.

" காபாலிகம்" என்ற சைவப் பிரிவினர் கபாலமும் திரிசூலமும் ஏந்திய பைரவ மூர்த்தியை வழிபட்டு அவ்வாறே வாழ்ந்தார்கள். இதைச் சிறுத்தொண்ட நாயனர் புராணம் சிறப்பாக விபரிக்கிறது.

" காளாமுகம்" என்ற சைவம் பிரிவும் பைரவத் திருமேனியை வழிபடுதேயாம். இவர்கள் தாம் வழிபடும்-மூர்த்திக்கேற்ப, தங்கள் மேனியில் கருப்பு வண்ணம் பூசிக் கொள்வர்.

" பாசுபதம்" என்ற சைவசமயப் பிரிவினில் தங்கள் உடல் முழுவதும் சுடுகாட்டுச் சாம்பலைப் பூசி பைரவ வழிபாடு செய்வர் இன்றும் உஜ்ஜையினி மகாகாளேசர் ஆலயத்தில் இவர்கள் நிறைந்திருப்பதைப் பார்க்கலாம்.

"ஆன்மலிங்கத் திருமேனியான பரசிவமே பரம்பொருள்" என்று கருதி வழிபடும் ஐக்கியவாத சைவப் பிரிவினர் பைரவரையும் வீரபத்திரரையும் குருநாதர்களாகக் கொள்வர்.

சிவபெருமானின் 64 சிவமூர்த்தங்களைப் பற்றிக் கூறும் "சிவபராக்கிரம்" என்ற நூல் பைரவரைப் பற்றி விளக்கும் போது, அவர் பைரவமூர்த்தி, ஆபதோத்தாரண மூர்த்தி, வடுகமூர்த்தி, சேத்திர பாலக மூர்த்தி, என நான்கு வடிவங்களைக் கொண்டவர் என கூறுகிறது.

" பராக்யம்" என்ற நூலோ பைரவரை "அஷ்ட பைரவராக" விபரித்து, அவருக்கு அஷ்ட பைரவ சக்திகளையும் குறிப்பிடுகிறது.

**அவை வருமாறு :-**

01. அசிதாங்க பைரவர் - பிராம்ஹி
02. குரு பைரவர் - மாகேஸ்ரி
03. சண்ட பைரவர் - கௌமாரி
04. குரோத பைரவர் - வைஷ்ணவி
05. உன்மத்த பைரவர் - வாராஹி
06. கபால பைரவர் - மஹேந்திரி
07. பீஷ்ண பைரவர் - சாமுண்டா
08. சம்ஹாரா பைரவர் - சண்டிகா

சிவபெருமானுடைய ஐந்து திருக்குமாரர்கள் என்ற வரிசையில், கணபதி, முருகன் வீரபத்திரர், ஐயப்பன், ஆகியவர்களுடன் பைரவரும் சேர்க்கப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"துக்கம் அல்லது துக்கத்துக்குக் காரணமான பாவம் போக்குவதால் சிவபெருமான் ருத்திரர்" என்றும் " பைரவர்" என்றும் அழைக்கப்படுகிறார்" என ஆகமங்கள் கூறுகின்றன.

எனினும், ஸ்ரீ மகாலட்சுமி மந்திர கோசம்" என்ற நூல், சுவர்ணாகர்ஷண பைரவ மந்திரம், மற்றும் யந்திரம்மூலம், ஸ்வர்ணதா தேவியின் அருள் பெற்று பொற்குவியலை அடையும் முறை ஆகியவை பற்றிக் கூறுகிறது. இந்த மந்திரத்திற்கு உரிய முனிவர் பெயரும் வடுகரே வடுகர் என்ற சொல் பைரவரைக் குறிக்கும்.

திருமூலர் தமது திருமந்திரத்தில், நான்காவது தந்திரம், 10அம் அதிகாரம்" வயிரவச் சக்கரத்தில் ................. (12697"

ஆமேவப் பூண்டரு ளாதி வயிரவன்
ஆமே கபாலமுஞ் சூலமுங் கைக்கொண்டங்
காமே தமருகம் பாசமுங் கையது
வாமே சிரத்தொடு வாளது கையே"

என்று பாடலில், கபாலம், சூலம், உடுக்கு, பாசம் (கயிறு) அறுத்த சிரம் (தலை), வாள் என பைரவரின் ஆறு திருக்கரங்களிலும் படைகள் தாங்கி, ஆருயிர்கள்விரும்பியவாறு திருவருள் புரிகிறார்" என விபரிகிறார்.

இன்னும் "பக்தர்களின் மனதிற் தோன்றும் பகையான ஆணவத்தை அழிக்க, தமது இருகரங்களிலும், சூலமும், கபாலமும் ஏந்தி, ஞானத்தையே உடலாகக் கொண்டு பைரவர் உலாவுகிறார்" என்பதை 1268 வது பாடலில்

நடந்த வைரவன் சூல கபாலி
கடந்த பகைவனைக் கண்ணது போக்கித்
தொடர்ந்த வுயிரது உண்ணும் பொழுது
படர்ந்த வுடல்கொடு பந்தாட லாமே" என்று விளக்குகிறார்.

கால ஸ்பரவர் என்ற திருநாமத்தை உன்னிப்பாகக் கவனித்தால், சில உண்மைகள் விளங்கும்.

பிரபஞ்சத்தில் உள்ள சகல உயிர்க்குலமும், வானமண்டலத்தில் உள்ள, சூரியன் உள்ளிட்ட கிரகங்களும், நட்சத்திரங்களும்,காலச்சக்கரத்தின் ஆளுகையில் அடங்கியவையே. காலச்சக்கரத்தை இயக்குபவரே "காலபைரவர்"
எனப்படுவர். காலத்தின் கட்டுப்பாடுகளை அகற்றி நன்மை செய்பவரும் இவரே காலச் சக்கரத்தின் சுழற்சியால் துன்புறும் பக்தர்களைக் காப்பாற்றுவதால், இவர் "ஆபதுத்தாராண பைரவர்" எனவும் போற்றப்படுகிறார். பயத்தைப் போக்குவார் பக்கத்தனுக்கு, பயத்தை அளிப்பார் துஷ்டர்களுக்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனி, தனது அண்ணன் யமதர்மனால், அலட்சியப்படுத்தப்பட்டு, மனம் வருந்தினார். தனக்கு நேர்ந்த அவமரியாதையைத் தன் தாயான சாயாதேவியிடம் முறையிட்டார் பின் தாய் கூறியபடி பைரவரை வழிபட்டு, நவக்கிரக பதவியும், "ஈஸ்வரன் என்ற பட்டமும் பெற்றார்

" *பைரவர் சனீஸ்வரனுக்கு குருவாக விளங்கி அருள் பாலிப்பதால்*, பைரவருக்கு ஒவ்வொரு சனிக்கிழமையும் சஹஸ்ர நாம அர்ச்சனை செய்து வழிபட்டால், ஏழரைச் சனி, அட்டமத்துச் சனி முதலிய சனீஸ்வர உபாதைகள் முற்றிலும் நீங்கி நல்ல யோக பலன்கள் கிடைக்கும் என்று "பைரவ தந்திரம்" என்ற நூலிற் கூறப்பட்டுள்ளது.

பெரும்பாலான பைரவர்களுக்கு வாகனம் நாய். பல சித்தர்களும், மகான்களும் நாயுடன் கொண்ட நட்பை நாம் இங்கு குறிப்பிடுவோம்.

இதற்கு நேர்ச்சான்றாக விளங்கியவர் ஸ்ரீபாடகச்சேரி ராமலிங்க சுவாமிகள். இவர் மக்களுக்கு கூழ்காய்ச்சி ஊற்றியும் மூலிகை மருந்து தயாரித்து வழங்கியும் வந்தார்.

இவர் பைரவர் வழிபாடு செய்பவர் ஆண்டிற்கு ஒரு முறை இந்த மகான் திருக்குறிப்பால் எல்லா நாய்களையும் அழைப்பார். அவைகளும் வரும். கூட்டமாக அவைகளை இருக்கச் செய்வார்.பின் அவர் செய்யும் சமாராதனையை எல்லா நாய்களும் ஏற்று, தமது குணங்களை விட்டு, எந்த ஆரவாரமும் இன்றி ஒரு கட்டுப்பாடுடன் உணவு கொள்ளும்.

பின்னர் சுவாமிகள் "இனி நீங்கள் போகலாம்" என்று உத்தரவளித்ததும், அவை தமது பழைய குணம் மீண்டு வர ஓடிக் குரைத்துக் கொண்டு செல்லும். இது அப்பகுதி மக்கள் நேரில் கண்டு, இன்றும் கூறும் அரிய நிகழ்ச்சியாகும். இந்தப் போராற்றல் அவருக்குச் சித்திக்க பைரவ வழிபாடே உதவியது.

"ஞானமும் நன்னெறியும் காட்டுபவர் பைரவர்" என "விஞ்ஞான பைரவம்" என்ற நூல் கூறுகிறது மேலும் இந்நூலில் 112 வகையான ஞானநிலைகளைக் கூறி " முடிவான ஞானம் அருளும் யோகீசர், சித்தபுருடர், ஆனந்தபைரவர் என்றுங் குறிப்பிடுகிறது.

அச்ச வழிபாடடில் தொடங்கி காமிய வழிபாடாகவும் தோழமை வழிபாடாகவும் வளர்ந்து ஞான ஆனந்த வழிபாடாக மலர்ந்துள்ளது "காலபைரவர்" வழிபாடு

– ஆதாரம்–

ஸ்ரீ இராமக்கிருஷ்ண விஜயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கும்பாபிஷேகம்

கலாபூஷணம்
- திருமலை சுந்தா -
(ஆசிரியர் - சிவஒளி)

இறைவனின் இருப்பிடம் எது? அவன் தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான், மக்கள் எளிதில் இத் தத்துவத்தை புரிந்து கொள்வதற்காக இறைவன் தனது தன்மையை திருவுருவ தெய்வச் சிலைகள் உருவில் வெளிப்படுத்தி அருளுகின்றார்.

இவ்வாறு எழுந்தருளி அருளும் தெய்வமூர்த்திகள் பக்தர்களைப் பொறுத்தவரை உயிர் உள்ள உருவங்களே. கேட்பது கிடைக்கும் என்ற நம்பிக்கை. குறைகள்களையும் என்பது பக்தர்களின் வாழ்வில் தெய்வங்கள் நிகழ்த்தும் லீலைகளுக்கு அளவே இல்லை.

இத்திருமூர்த்திகள் பரப்பிரம்ம சைதன்யத்தை ஈர்த்து எழுந்தருளச்செய்யும் முறை தேவதாப் பிரதிஷ்டை எனப்படும். தேவதாப் பிரதிஷ்டைக்குப் பின் தெய்வம் உறையும் கோயிலுக்குத் தெய்வீகத்தை ஊட்டுவதே குப்பாபிஷேகம் எனப்படும். கும்பாபிஷேகம் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை செய்யப்படுகின்றது.

பரப் பிரம்மத்தின் சக்தியானது சப்த பிரம்மமாகவும், ஜோதியாகவும் பக்தர்களுக்கு அருள் புரிவதற்காக தன்னை மட்டுப்படுத்திக்கொண்டு கோயில்களில் பலவிதமான சக்தியாக எழுந்தருள்கின்றது.

இதனால் தான் சித்தர்களும், ஆழ்வார்களும் நாயன்மார்களும் கோயிலைச் சிறப்பித்து இறையருளை நாடி அங்கு சென்றார்கள்.

கோயில்கள் ஆகம விதிப்படியோ அல்லது வைதீக முறையிலோ உருவாக்கப்படுகின்றன. இதற்கு அமையவே சிற்பசாஸ்திரங்களும் உருவாகின. ஆழுமை பெற்ற சிற்பிகளும் உருவானார்கள்.

## கும்பாபிஷேக கிரியைகள்

**01. கணபதி பூசை :-** பிள்ளையாரை வணங்கி முதல்வராக்கி சகல நலத்திற்காக செய்யப்படும் கும்பாபிஷேகம் தடையின்றி நடக்கப் பிராத்தித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**02. வாஸ்து சாந்தி :-** ஆலயத்தை உருவாக்கும் போது விபத்து ஏதும் ஏற்பட்டிருந்தால் அதனால் ஏற்படும் பாவங்கள் சகலதும் விலகி நன்மை ஏற்பட வாஸ்து சாந்தி செய்யப்படுகின்றது. துப்புரவான சுத்தப்படுத்திய நெல் அல்லது அரிசியைப் பரப்பி கறுப்பு எள்ளில் 64 வட்டங்கள் வருமாறு வாஸ்து மண்டலம் அமைக்க வேண்டும். பிறகு வாஸ்து புருஷனை அதில் வரச்செய்து பூசித்து அவரை சாந்தப்படுத்துவார்கள்.

**03. ப்ரவேசபலி [பூதகக்தி] :-** கோயிலைச் சுற்றியும் கோயிலில் உள்ள ஊரிலும் இருக்கும் தீய சக்திகளுக்கு பலி தந்து அவற்றை மந்திர பூர்வமாக தொலைவில் அனுப்பும் கிரியை இது.

**04. நவக்கிரக ஹோமம் :-** கிரகங்களினால் ஏற்படும் தீமை நீங்கி நற்பலன்கள் ஏற்பட தொல்லை ஏற்படாதிருக்க செய்யப்படும் ஹோமம் இது.

**05. ம்ருத்சங்கிரகணம் :-** ஆற்றுப்படுகை, வில்வம், துளசிச் செடி வளரும் இடங்களில் இருந்து மண்ணைக் கொண்டு வந்து யாகசாலையில் பாலிகைகளில் இடுவது ம்ருத்சங்கிரணம் ஆகும்.

**06. ரித்விக்குகள் ஆவாஹணம் :-** பிராம்ம ணோவைஸர்வா தேவதா" என்ற வாக்கியத்திற்கு ஏற்ப அந்தண பெருமக்களை யாகசாலைக்கு அழைத்து வருதல்.

**07. அங்குரம் :-** ஊறி முளை விட்ட தானியங்களை யாகசாலையின் வடமேற்கு மூலையில் பாலிகைகளில் போட்டு யாகம் முடியும் வரை நீர் விட்டு வளர்த்தல்

**08. ரக்ஷபந்தனம் :-** யாகசாலையில் கலந்து சிறப்பிக்க வந்திருக்கும் அந்தணர்களுக்கு அவர்களின் வலது கையில் மந்திர உரு ஏற்றப்பட்ட மஞ்சல் நூலினைக் கட்டுதல். இதனால் கும்பாபிஷேகம் நிறைவுறும் வரை தீட்டுகள் ஏதும் அணுகாது.

**09. ரித்விக் வரணம் :-** யாகம் செய்பவர்களின் தலைமைத்துவச் சர்வசாதகர் வெவ்வேறு தெய்வங்களுக்கு உரிய சாதகர்களை நியமிப்பார். சாதாரணமாக, அவர்கள் அந்தந்த தெய்வங்களை உபாசிப்பவர்களாக இருப்பார்கள்.

**10. வருண பூஜை :-** பல புண்ணிய நதிகளில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித தீர்த்தத்தை நூல் சுற்றிய கும்பங்களிலிட்டு அதில் தங்க நாணயத்தை இட்டு தர்ப்பையாலான கூர்ச்சம் மாவிலை, தேங்காய் ஆகியவற்றை வைத்து அந்த கும்பத்திலே வருணனை ஆவாஹனம் செய்து பூஜித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**11. கலாகர்ஷணம் :-** ஆலயத்தைப் புதிப்பிக்கத் தொடங்கு முன் கருவறைகளில் உள்ள இறைசக்தியை ஒரு சிலையிலோ, படத்திலோ, கும்பத்திலோ, எழுந்தருளச் செய்து ஆலயத்துள் வைப்பார்கள். பின் ஆலய புனர்நிர்மாணப்பணி தொடங்கப்படும். அந்த மூர்த்திகளிலிருந்து வருண கலசத்திற்கு இறை சக்தியை மந்திர உச்சாடனம் வழியாக ஆகர்ஷிப்பது கலாகர்ஷணம் ஆகும். இம்முறை பழைய ஆலயங்களுக்கே பொருந்தும்.

**12. துவாரபூசை :-** யாகசாலையின் நான்கு வாயில்களை நான்கு வேத புருஷர்கள் காப்பார்கள். ஒவ்வொரு வாயிலுக்கும் உரிய தோரணம், புஸ்பம், இலை, துவாரசக்தி முதலியவை உண்டு இவற்றுக்குப் பூஜை செய்வது துவார பூஜை.

**13. பரிவார பூசை :-** ஒவ்வொரு தேவதைக்கும் உள்ள அங்க ப்ரத்யங்க, உபாங்க தேவதைகள் ஆகியவற்றுடன் கிரகங்கள், அஷ்டதிக் பாலகர்கள், பஞ்ச பாலகர்கள், ரிஷிகள், வேதபுருசர்கள் போன்றவர்களைப் பூஜிப்பது பரிவார பூசை எனப்படும்.

**14. பிரவேச பலி :-** ஆவாஹானம் செய்யப்பட்ட துவார சக்தி, பரிபாரசக்தி, பூதங்கள், கந்தர்வர்கள், யக்ஷர்கள், கின்னரர்கள். போன்றவர்களுக்கு உணவளிப்பது பிரவேசப்பலியாகும். இதனால் உலக நன்மை கருதி நடாத்தப்படும் கும்பாபிஷேகம் தடையின்றி நடக்கும்.

**15. பிரதான தேவதா ப்ராண பிரதிஷ்டை :-** புதிதாக நிர்மாணிக்கப்படும் கோயில்களில் ஆச்சார்யர் தமது மூச்சுக்காற்று வழியாக திரிகண்டா என்ற முத்திரையுடன் பிரதான சக்தியைக் கும்ப கலசத்தில் எழுந்தருளச் செய்வார். பிறகு வெவ்வேறு தெய்வங்களின் மூலமந்திர ந்யாசம் , ஜபம் செய்து உருவேற்றுவார்.

**16. அஷ்டசக்தி பூஜை :-** பிரதான தெய்வத்திற்கு ஏற்றவாறு பிராம்மி முதலிய சக்திகள் ஆயுத சக்திகள் முதலியவை ஆவாஹணம் செய்யப்படும். இவை கோயில் உள்ள ஊரையும் அதன் மக்களையும் காக்கும். பாதுகாப்பு வளையமாக அமைகிறது.

**17. உபசார பூஜை :-** பிரதான தெய்வம் மற்றும் சக்திகளுக்கு 16 விதமான உபசாரங்களுடன் பூஜையும் ஆவரண பூஜைகளும் செய்து இறைசக்தியைப் பிரகாசப் படுத்துவார்கள். பிறகு உரிய ஜபங்கள் செய்து உருவேற்றி அதற்குச் சக்தி ஊட்டுவார்கள்.

**18. அக்கினிப் பிரதிஷ்டை :-** யாக குண்டலத்தில் அக்னியை ஆவாஹனம் செய்து அதில் ஆகம முறைப்படி பிரதிஷ்டை செய்து பூஜிக்க வேண்டும். கும்பாபிஷேகம் முடியும் வரை இந்த அக்னி அணையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தேவதைகளுக்குரிய தேவைகளை ஏந்திச் சென்று அவர்களிடம் சேர்ப்பவர் அக்னிதேவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**19. தத்துவ ஹோமம் :-** எழுந்தருளச் செய்யப்பட்ட தேவதைகளுக்குக் குணம் சக்தி, அவயங்கள், முதலியவற்றை மந்திரம் மூலமாக உண்டு பண்ணுவது தத்துவ ஹோமம் எனப்படும். இதில் நாம் தியானிக்கும் 36 தத்துவங்கள் மற்றும் 30 உப தத்துவங்களுக்கான ஆஹூதிகள் இறை சக்திக்குஉயிரூட்டுகின்றன.

**20. கலாஹோமம் :-** சிருஷ்டிகலை - 10, ஸ்திதிகல் - 11, சம்ஹகலை - 11, அக்னிக்குரியகலை - 23, மாயாகலை - 7, அனுகிரககலை - 19, சோமகலை - 13, புருஷ் கலை - 5, ஸ்ரீகலை - 9, ஆகிய 108 கலைகளுடன் ஆலயத்தில் இறைவன் அருள் பாலிக்கிறான்.

**21. மூர்த்தி ஹோமம் :-** ஆலயத்தையும் ஊரையும் எட்டுத் தித்திக்கு இருந்து காக்கும் அஷ்ட மூர்த்திகளுக்கு அவிர்பாகம் அளித்து சக்தியைப் பெருக்குவதே மூர்த்தி ஹோமம் ஆகும். இதனால் ஊரில் எந்த அசம்பாவிதங்களும் ஏற்படாது.

**22. திரவ்யாஹூதி :-** இயற்கை செல்வங்களான மூலிகைகள், வேர்கள், சமித்துகள், உலோகங்கள், மருந்துப் பொருட்கள், பழங்கள், இலைபூக்கள், முதலியவற்றை மூல வேதமந்திரங்களுடன் யாகத்தில் ஆஹுதி அளிப்பது. இதனால் உடல் மனவலிகள் தீர்ந்து ஆன்ம பலம் பெருகும்.

**23. யந்திர ஸ்தாபனம் [சுத்தி அபிஷேகம்] :-** ஆலயத்தில் விக்கிரகங்களின் கீழே உள்ள யந்திரம், நவரத்தின பஞ்ச லோகங்கள், பாதரசம் முதலியவற்றை வைத்து திரிபந்தனம், அஷ்டபந்தனம், சார்த்துவது, யந்திர ஸ்தாபனம் ஆகும். இப்படி தயாரான இறைபிம்பங்களுக்கு பஞ்ச கவ்யத்தால் அபிஷேகம் செய்து புண்ணியவாசன ஜபம் செய்த நீரால் அபிஷேகம் செய்து கும்பாபிஷேகத்திற்குத் தயாராக்குவதும் சுத்தி அபிஷேகமாகும்.

**24. பூர்ணாஹூதி :-** அக்கினியில் சமித்து, அன்னம், நெய் முதலியவற்றால் மூலமந்திர ஹோமம் செய்தபின் பழங்கள் மூலிகைப் பொருட்கள் தேங்காய் ஆகியவற்றை ஒரு பட்டு வஸ்திரத்தில் முடித்து அதை அக்கினியில் இடுவது பூர்ணஹூதி. பூர்ணஹூதி செய்யும் சமயமே தேவதைகள் மகிழ்ந்து வரமளிக்கும் சமயமாகும்.

**25. நாடி சந்தானம் :-** மூல மந்திர ஹோமத்திற்கும், பூர்னா ஹூதிக்கும் இடையே செய்யப்படும் கிரியை ஹோமகுண்டலம், கலசம், கோபுரம், மூலபிம்பம் ஆகியவற்றை ஒரு தர்ப்பை கயிறு மூலமாக இணைப்பார்கள். பின் கலசத்தில் உள்ள இறைசக்தியை கிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், அனுக்கிரகம் என்ற நான்கு கலைகளாகப் பிரித்து பூ: புவ, ஸ்வ:, ஓம் பூர்புவ:வ ஸ்வாஹா என்று உயிர்ச்சக்தியை மந்திர பூர்வமாகச் சேர்ப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நியாஸங்கள் நான்கு வகை**

01. மாத்ருகா நியாஸம் (51 அஷ்ரம்)
02. ஷட்சக்ர நியாஸம் (06 சக்கரம்)
03. மூர்த்தி நியாஸம் (அந்தந்த தெய்வத்துக்குரியது)
04. ப்ராணபிரதிஷ்பா நியாஸம் (உயிரூட்டல்)

**26. யாத்ரா தானம் :-** தீப ஆராதனைகளின் முடிவில் மக்கள் தாவரவிலங்கிணங்கள் நலமுடன் வாழவும் , நீர் நிலைகள் நிரம்பி பெருகவும், வேதமந்திரங்கள் உச்ச ரிக்கப்படும், நவநாயகர்களை பிரீதீ செய்ய தானங்கள் அளிப்பர். பின் தேவதைகளின் சந்நிதிகளுக்கு கலசங்கள் போய் சேரும்.

**27. கும்பாபிஷேக :-** கோபுரத்திற்கு வந்தடைந்த கும்பகலசத்திலிருந்து மாலை தர்ப்பை வஸ்திரம் முதலியவற்றை ஒவ்வொன்றாகக் கோபுரக் கலசத்திற்கு அணிவிப்பார்கள் மந்திர உரு ஏற்றிய கலசத்திலிருந்து மந்திர பூர்வமாகக் கோபுர கலசத்தில் தெய்வ சக்தியை ஆவாஹனம் செய்வார்கள். பின் கலசநீரால் கோபுரத்திற்கு அபிஷேகம் செய்து தீபாராதனை செய்வார்கள்.

**28. கும்பாபிஷேக தீபாரதனை :-** கும்பத்திற்குச் செய்ததைப் போலவே மூல ஏனைய விம்பத்திற்கும் அபிஷேகம் செய்வார்கள். இங்கு காய்ச்சாத பாலை நிவேதனம் செய்வார்கள்.

பின் மூலஸ்தானத்தை மூகூர்த்த நேரம் வரைமூடி வைப்பார்கள். பின் கதவினைத் திறந்து பற்பல திரவியங்களால் பிம்பத்திற்கு அபிஷேகம் செய்து மகா தீபாரதனை செய்வார்கள்.

ஆகம சாஸ்திரப்படி கோபுரகலசம் இறைவனின் பாதம் எனப்படுகின்றது. அதன் கூரான நுனி பிரபஞ்சத்திலுள்ள இறைசக்தியை ஈர்த்து தன்னுள் வைத்துக்கொள்ளும். கலசத்துக்குள் உள்ள வரகு, அரிசி நல்ல சக்தியை மட்டும் ஈர்த்து இறை பிம்பத்திற்கு அனுப்பும்.

கோபுர முகடுகள் போன்ற வடிவங்கள் இவ்வாறு சக்தியை ஈர்க்கும் வலிமை வாய்ந்தவை ஆகும்.

இவ்வாறு நன்மைகளை தரும் ஆலயங்களை போற்றி வழிபட்டு இறைவனது அருளை அளவின்றி பெற்று கும்பாபிஷேக குடமுழுக்கில் நனைந்து ஆனந்தமடைவோமாக!

**நன்றி**

**– ஞான கல்யாண் சாஸ்திரிகள் –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயிரவி மந்திரம்



அந்தம் பதினாலும் அதுவே வயிரவி
முந்து நடுவும் முடிவும் முதலாகச்
சிந்தை கமலத் தெழுகின்ற மாசக்தி
அந்தமும் ஆதியு மாகிநின் றாளே (1052)

சூலங் கபாலங்கை ஏந்திய சூலிக்கு
நாலங் கரமுள நாகபா சாங்குச
மாலங் கயனறி யாத வடிவுக்கு
மேலங்க மாய்நின்ற மெல்லிய லாளே. (1057)

ஆதி அனாதி அகாரணி காரணி
வேதம் ஆய்ந்தனள் வேதியர்க் காய்நின்ற
சோதித் தனிச்சுடர் சொரூப மாய்நிற்கும்
பாதி பராபரை பன்னிரண் டாதியே (1100)

– திருமந்திரம் –

சைவசமயத்தின் ஒரு கண்ணாக விளங்குவது பன்னிரு திருமுறைகளாகும் அவற்றுள் பத்தாந் திருமுறையாகத் திகழ்வது, திருமூலர் ஆக்கிய திருமந்திரம்.

இந்நூல் எமது நாளாந்த வாழ்க்கையை நெறிப்படுத்தி, வையத்துள் வாழ்வாங்கு வாழவைக்கும் வழிமுறைகளை வழங்குகிறது . ஆகமத்தில் உள்ள தத்துவக்கருத்துகளை எடுத்தியம்புதலின், "தமிழாகமம்" எனப் போற்றப்படுகிறது.

இத்தகைய சிறப்பு மிக்க நூலின் நான்காம் தந்திரம், 06 அத்தியாயத்தில், பராசக்தியின் தோற்றமான "வயிரவி" பற்றிய மந்திரங்கள் 100 ( 1051 - 1100) உள

அவற்றுள் மூன்று மந்திரங்கள் மேலே தரப்பட்டுள்ளன. அவற்றின் பொருளையும் அறிந்து கொள்வது தக்கதே.(1052) ஆதி வயிரவியின் இருப்பிடம் பதினான்கு கலைகளாகும் முதல், நடு, இறுதியுமாகத்திகழும், அன்னை பராசக்தியின் நெஞ்சத் தாமரையிடத்து விளங்கும், பேராற்றல், அந்தமும் ஆதியும் அற்றது. இது ஆன்மாக்களின் ஒடுக்கத்தையும், அவற்றின் தோற்றத்தையும் செய்விக்கும் உரிமை உடையவர் என்பதைக் குறிக்கும்.

(1057) சூலத்தையும் விண்ணோர் தலைமண்டை ஓட்டையும் ஏந்தி விளங்கும் சூலி ஆகிய சிவபெருமானுக்கு அழகிய திருக்கரங்கள், நான்கு அவற்றுள், சூலமுங்கபால. முந் தாங்கிய இருகைகள் போக, எஞ்சிய திருக்கைகள் இரண்டிலும் முறையே பாம்பாகிய கயிறும் தோட்டியும் உள்ளன. மாலும் அயனும் அறியாது சோதிப் பிழம்பாகத் தோன்றிய முழுமுதற் பொருளான சிவபெருமானிடத்து செம்மையாக இடப்பாகத்தைத் தனதாக்கிக் கொண்ட அம்மை, (வயிரவி ) எமைக் காப்பாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1100) அம்மை வயிரவி தொடக்கமும் தொன்மையும், தனக்கோர் காரணமும் இல்லாதவளும் எல்லாவற்றுள்ளும் காரணமாய் உள்ளவளும் ஆவாள். அறவோர் பொருட்டு அறநூலை ஆராய்ந்து அருளினாள். நிலைபெற்று நிற்கும் பேரொளிச் சுடராக நிற்பவள். பன்னிருகலைகளாக திகழும் சிவபெருமானுடைய பாதித்திருமேனியாக விளங்குபவள். அவளே நடப்பாற்றல் ஆகிய ஆதியும் ஆவாள்.

இவ்வாறான மேலான பேராற்றல் படைத்த பராசக்தி, நள்ளிரவிலே "பைரவி" என்ற பெயரிலே நடனம் செய்கிறாள் அவளுடன் சிவபெருமான் "பைரவன்" ஆக வீற்றிருக்கிறார் பரமஞானிகளும் யோகிகளும் தமது தூக்கத்தை விடுத்து, அந்த நள்ளிரவு நேரத்தில் தியானத்தில், திரிபுர பைரவியையும், பைரவரையும் தியானிக்கின்றனர். இவ்வாறு தொடர்ந்து விழிப்புணர்வோடு வேண்டுபவர்களுக்கு, நள்ளிரவில் பைரவி "திருவடி தரிசனம்" தருவாள் என்று ஞானிகள் கூறுவர்.

சீர்காழியில் வெள்ளிக் கிழமைகளில் "வடுக நாதருக்கு" நள்ளிரவில், சிறப்பாக வழிபாடு செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

**ஆக்கம்**

**கா. புஸ்பம்**

## பைரவா போற்றி !

| | | | |
|---|---|---|---|
| அரனாரின் | திருவுருவே | அஜிதாங்கா | போற்றி ! |
| ஆற்றல்கள் | மிகவுடைய | ஐயனே | போற்றி ! |
| இகபர | சுகமருளும் | எந்தையே | போற்றி ! |
| ஈரேழு | புவன | நாயகா | போற்றி ! |
| உடுக்கை | கையேந்திய | உன்மத்தா | போற்றி ! |
| ஊரெல்லை | காக்கும் | ஒப்பிலி | போற்றி ! |
| எலும்பு | தண்டங்கொண்ட | எம்பிரான் | போற்றி ! |
| ஏவல் பில்லி | அழிக்கும் | ஏகனே | போற்றி ! |
| ஐங்கரனுக்கு | இளைய | வைரவனே | போற்றி ! |
| ஒல்லைநின்று | வினையறுக்கும் | உத்தமா | போற்றி ! |
| ஓதுவார் | மனமதில் | ஒளிர்பவனே | போற்றி ! |
| ஔடதமாய் | ஆணவங்களையும் | அருட்குருவே | போற்றி ! |

**– திருமலைப் பிச்சி –**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்தற் கடவுள் வைரவர்

ஆக்கம்
திரு. சிவஞானம் மகேந்திரராஜா
மாவட்ட கலாசார உத்தியோகத்தர்
திருகோணமலை

வழிபாட்டு முறைகளில், சிறுதெய்வ வழிபாடு குறிப்பிடக் கூடியதொரு வழிபாடாகும். இவ்வழி பாடானது நம்பிக்கை அடிப்படையிலே நிகழ்பவையாகும். கிராமங்களிலே, விவசாயப் பெருமக்கள் வாழ்கின்ற பிரதேசங்களிலே, வைரவர் வழிபாடு மிக முக்கியத்துவம் வாய்ந்த வழிபாடாகத் திகழ்கிறது.

வைரவக் கடவுளை "காத்தற் கடவுள்" என விளைநிலங் காக்குங் கடவுளாக, கிராமப்புற விவசாய மக்கள் தொன்று தொட்டு வழிபட்டு வருகின்றனர். வயல் வினை நிலங்களிலே வைரவக் கடவுளுக்குப் பொங்கல் பூசைசெய்து மடைபோட்டு வழிபடும் மரபு இன்றும் உள்ளது .

அது மாத்திரமல்ல வீடுகளிற் கூட ஆண்டுக்கொரு தடவை, வீட்டு முற்றத்தில் பந்தல் போட்டு பொங்கல் வைத்து - மடை பூசை நிகழ்வுகளிலே, "வைரவர் அகவல்" காவியம் என்பன பாடப்படுவதும் குறிப்பிடத்தக்கதாம்.

கிராமப்புறங்களிலே - ஆகமவிதிக்கப்பால் பத்ததி முறையில், பூசகர்கள் இவ் வழிபாட்டுப் பூசை நிவேத்தியங்களைச் செய்து வருகின்றனர். பூசகர் மந்திர உச்சாடனம் செய்து "கலை ஆட்டுவதிலும்" ஈடுபடுகின்றனர்.

கலை ஆடுபவர்கள், மாரி, காளி, பேச்சி ; வராகி வைரவர், வீரபத்திரர் போன்ற தெய்வ நாமங்களைச் சொல்லி, இத் தெய்வங்களே தங்கள் மீது இருப்பதாகக் கூறிக் கலையாடுகின்றனர். பேய், பிசாசு, வஞ்சனை, சூனியம், நோய் போன்றவற்றை இக்கலை ஆடுபவர்கள், வேப்பிலை கொண்டு மக்களிடமிருந்து விரட்டுகின்றனர். கலை ஆடும் போது இவர்களாற் கூறப்படும் வார்த்தைகளை மக்கள் தெய்வவாக்காகப் போற்றி நம்பிக்கை அடைகின்றனர்.

இவ்வழிபாடானது திருகோணமலை, மூதூர் மட்டக்களப்பு பிரதேசங்களில் இன்றும் தொடர்ந்து நடைபெற்று வரும் வழிபாடாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

வைரவக் கடவுள் திருக்கரத்தில் சூலாயுதம் ஏந்தியுள்ளார். இது ஐந்தொழில்களையும் ஆற்றுவதற்கு உரியதாகும். ஆரணி, ஜனனி, ரோத்யித்திரி என்ற மூன்று சக்திகளையும் திரிசூலங் கொண்டுள்ளதாக வாதுள ஆகமம் குறிப்பிடுகின்றது. இதனால் சிவனும், வைரவரும் ஒருவரே என்பது புலனாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமா முதலான தேவர்கள் சிவபெருமானை வழிபடாது செருக்குற்றுத் தடுமாறித் திரிந்தபோது வைரவக் கடவுள் பிரமாலின் ஒரு தலையைக் கொய்து அவர் செருக்கைப் போக்கியதாகவும் தேவர்களுக்கும் வைத்தியம் செய்து அவர்கள் கொண்டிருந்த செருக்கை அகற்றினார். என்றும் புராணங்கள் கூறுகின்றன. தேவர்கள் கெட்டுப்போகாது நல்வழிப்படுத்திய "ஞானகுரு" வைரவக் கடவுளேயாவார். இதனால் இவர் "ஞானவைரவர்" என அழைக்கப்படுகிறார்.

இந்து சமயத்திலே பல தெய்வ வழிபாடுகள் காணப்படினும், நமது வழிபாடுகள் அனைத்தும் அறநெறி வாழ்வின் தேவை கருதியே நடைபெறுகின்றன. வாழ்க்கை நெறி பிழைத்தோர், இறைஇன்பத்தை அடையமுடியாது. ஆன்மீக வளர்ச்சியே வாழ்க்கையின் இலட்சியம். ஆனால் தவறான வளர்ச்சி வாழ்க்கையைப் பாதிக்கும். எனவே இறை வழிபாடு செய்து அறவழியில் வாழ்ந்து உய்தி பெறுவோமாக.

## பூசைப் பொருட்களின் தத்துவம்

**எல்லாம்வல்ல பரம்பொருளைக் கோவிற் கருவறையில் விக்கிரகத்தில் எழுந்தருளச் செய்கிறோம்; பொருட்களினால், பஞ்சபூதங்களால் ஆனபொருட்களினால் தத்துவ நோக்கத்துடன் அபிடேகம், ஆராதனை செய்கின்றோம். விளக்கம் வருமாறு :-**


**மண்தத்துவம் :- சந்தனம், பழங்கள், இலைகள், தயிர்ச்சோறு, புளிச்சோறு, பொங்கல், பலகாரங்கள், ஆடை அலங்காரம்.**

**நீர்த் தத்துவம் :- பால், தயிர்**

**நெருப்புத் தத்துவம்:- நவரத்தினம்,பொன் வெள்ளி,ஆபரணங்கள், நெய்முதலான தீபங்கள்**

**காற்றுத் தத்துவம் :- தூபமிடுதல், சாமரம் வீசுதல்**

**ஆகாயத் தத்துவம் :- மணியோசை, வேதமந்திரம் ஓதல், தோத்திரம் பாடுதல் இசைப்பாடல்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி நீராடலின் மாண்பு

ஆக்கம்
திருமதி. தேவிகாரணி முருகுப்பிள்ளை
ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர் (சங்கீதம்)

**திருகோணமலை உப்புவெளி அருள்மிகு சோலை வைரவர் ஆலயமே, திருமலையில் முதன்முதல் பைரவமூர்த்திக்கு தனித்துவமாக அமைக்கப்பெற்ற ஆலயம் என்பது வரலாறு வாயிலாக அறியக்கிடக்கிறது. வைரவ மூர்த்தம் சிவபெருமானுடைய திருமூர்த்தங்களுள் ஒன்றென ஆகமங்கள் கூறும்.**

**இதன் காரணமாக 2009ம் ஆண்டு மகா கும்பாபிடேகத்தின் பின்னர் இவ்வாலயத்திலும் மார்கழித் திருவெம்பாவைப் பூசையும் திருவாதிரை விழாவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.**

**2009ம் ஆண்டு நிறைவேறிய கும்பாபிடேகத்தின் சிறப்பு மலர் 2012-03-18இல் கும்பாபிடேக தினத்தின் சங்காபிடேகத்தைத் தொடர்ந்து வெளியீடு செய்யப்பெறவுள்ளது. இத்தருணம் அம்மலருக்கு "மார்கழி நீராடலின் மாண்பு" என்ற தலைப்பில் கட்டுரை சமர்ப்பித்தற்கு வைரவப் பெருமான் அருள்பாலித்துள்ளமைக்கு பணிவுடன் எனது வணக்கத்தைச் செலுத்தி கட்டுரையைத் தொடர்கிறேன்.**

பனி நிறைந்த மார்கழியில் விடிந்தும் விடியாத அதிகாலைப் பொழுது, தூரத்தே தென்னங் கீற்றுகளிடையே தெரியும் விடிவெள்ளி; பூங்குயில்கள், கோழிகள் கூவுகின்றன. குருகுகள் இயம்புகின்ற; இயம்பின சங்கம், தோத்திரம் இயம்பினர் ஒருபால்; சென்னியில் அஞ்சலி கூப்பிய கையினராய் வீதியில் பஜனை செய்வோர் ஒருபால். கன்னிப் பெண்கள் தோழியரை துயிலெழுப்பி நீராட செல்வது இன்னொரு புறம். இந்த விடியலைப் பார்க்கின்றார் மணிவாசகர். ஞான நெறியில் வாழ்ந்த மகான். பெண்களின் செயல்களை உலகியல் செயல்களை உன்னதமாக போற்றி பேரின்பவாழ்வை தரும் வகையில் திருவண்ணாமலை இறைவனை நாயகனாகக் கொண்டு பாடியதுதான் திருவெம்பாவை. இப்பாடல்கள் பொருள் நயமும் கவிதை நயமும் வாய்ந்தவை மட்டுமன்றி பக்திச் சுவை நனி சொட்டும் தன்மையும் வாய்ந்தவை. இப்பாடல்கள் மார்கழி மாதத்தில் எல்லாக் கோயில்களிலும் பாடப்படுகின்றன.

திருவெம்பாவை என்பது கன்னிப் பெண்கள் ஒருவரையொருவர் துயிலெழுப்பி மார்கழி நீராடும் வரலாற்றினைக் கூறும் பகுதியாகும். மணிவாசகர் சிவன் தலங்கள் தோறும் சென்று தரிசித்து திருவெண்ணாமலையை அடைந்து அங்கிருக்கும்போது அவர் கண்டகாட்சி கன்னிப்பெண்கள் தனு மாதம் அதாவது மார்கழி மாதத்தில் திருவாதிரையை இறுதி நாளாகக் கொண்ட பத்து நாட்களிலும் வைகறையில் துயிலுணர்ந்து தங்கள் தோழியரை அவர்கள் இல்லந்தோறும் சென்று துயிலுணர்த்தி எல்லோரும் ஒருங்கே சென்று இறைவன் புகழ் பாடிக்கொண்டு நீர்நிலையை அடைவர். பின்னர் நீராடி புறத்தூய்மையை நீரால் அமைத்து, தூய ஈர மண்ணால் பார்வதிதேவியின் திருவுரு அமைத்து வழிபாடு செய்வார்கள். சிறந்த கணவர் கிடைக்கவும், மழைவளம் சிறக்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுதல் செய்வார்கள். இதனைக் கண்ணுற்ற மணிவாசகப்பெருமாள் கன்னிப் பெண்கள் கருதும் பொருளும், சைவ உண்மைப் பொருளும் அமைய அவர்கள் புகன்றதாக இத் திருவெம்பாவையை அருளிச் செய்தார்.

“அன்னவரியல்பு கண்டார் ஆங்கவர் புகன்றதாக
மன்னிய திருவெம்பாவை வாசகம் பேசி” என்றும்
“மலவிருளுற்றுறங்காமல் மன்னுபரிபாகரருள்
செலமுமுக வருக வென செப்பல் திருவெம்பாவை”

எனவும் திருவாதவூரடிகள் புராணத்தும் வருவதால் திருவெம்பாவை பாவை நோன்போடு உண்மைப் பொருளும் அமையுமாறு அருளிச் செய்யப்பட்டதாக அறியக்கூடியதாக இருக்கிறது.

## மார்கழி நோன்பு

மார்கழி மாதத்தில் பெண்கள் நோற்கும் விரதங்களில் முக்கியமானது மார்கழி நோன்பாகும். மார்கழியில் நோற்பதால் “மார்கழி நோன்”பென்றும் கன்னிப்பெண்கள் பாவை அமைத்து நோன்பு நோற்பதால் “பாவை நோன்பு” என்றும் அழைக்கப்படுகிறது. சைவ கன்னியர்கள் பனி நிறைந்த மார்கழி மாதத்தில் பொழுது புலர்வதன் முன் துயில் எழுந்து மற்றத் தோழியரையும் எழுப்பி “கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே” என அழைத்து ஆற்றங்கரை சென்று “சீதப்புனலாடி சிற்றம்பலம்பாடி”, “விண்ணுக்கு ஒரு மருந்தை வேத விழுப்பொருளை” கண்ணுக்கு இனியாளைப் பாடிக் கசிந்துள்ளம் உருகி, உன்னடியார் தாள் பணிவோம், ஆங்கவர்க்கே பாங்காவோம், அன்னவரே எம் கணவர் ஆக அருள் தருவாய் என இறைவனைப் பணிந்து வேண்டுவர்.

கோகுலப் பெண்கள் தம் தோழியரோடு ஆற்றங்கரை சென்று யமுனையில் புனலாடி ஈர மணலால் கார்த்தியானியின் திருவுரு அமைத்து, பூவும் புகையும் கொடுத்துக் கண்ணனையே தமக்கு நாயகனாக அடைய அருள்செய்க என அத்தேவியை வழிபாடு செய்வார்கள். பாற்கடலில் பையத் துயின்ற பரந்தாமனின் அடி பாடித் துதித்து ஆலயம் செல்வர்.

மணிவாசகப் பெருமாள் அருளிய திருவெம்பாவையும், ஆண்டாள் நாச்சியார் அருளிய திருப்பாவையும் மார்கழி நோன்பை அடிப்படையாகக் கொண்டவை. மார்கழி நீராடல் என்பது சங்ககாலம் முதலே இருந்து வருகிறதென்பதை பரிபாடல், நற்றிணை, ஐங்குறுநூறு, கலித்தொகை போன்ற சங்க நூல்கள் மூலம் அறியலாம்.

பாவை நோன்பு “அம்பாவாடல்” எனவும், “தைநீர்” எனவும் “மார்கழி நீர்” எனவும் சொல்லப்படும். பாவை நோன்பாகிய அம்பாவாடல் 11ம் பரிபாடலிலே சொல்லப்படுகிறது. “ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குணத்து.... என்ற பாடலில், சூரியனின் வெயில் சுடாத குளிர்ச்சியுடைய மாரிகாலத்தில் பிற்பகுதியாகிய தனு மாதத்தில் விரிந்த ஆகமநூலையுடைய ஆதி சைவ அந்தணர்கள் ஆலயத்தில் இறைவனுக்கு பூரணையை அடுத்து வருகின்ற ஆதிரை விழாவினைத் தொடங்க அம்பாவாடலாகிய பாவை நோன்பைக் கன்னியரும் தொடங்கினர் என்று கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிரை விழவு, ஆதிர்ரையை இறுதியாகக் கொண்டு முன் பத்துநாட்களுக்கு முன் தொடங்கப்படுவதால் அம்பாவாடலும் அதாவது மார்கழி நீராடலும் ஒன்றாகவே தொடங்கி ஒன்றாகவே நிறைவெய்தும் என்பது புலனாகிறது.

அம்பாவாடல் என்பதற்குத் தாயுடன் ஆடல் என்பது பொருள். பாவை போல தாய்க்கடவுளின் வடிவை அமைத்து வணங்கி வழிபட்டு நீராடுவதால் அம்பாவாடல் என அழைக்கப்பட்டது. பாவை நோன்பு நோற்பவர் விரும்பத்தக்க கணவரைப் பெறுவர் என்பது நம்பிக்கை. அம்பாவாடல் என்பதற்கு உலகத் தாயின் வடிவைப் பாவையாக அமைத்து வழிபடுதல் எனவும் பொருள் கொள்ளலாம்.

**மார்கழியின் சிறப்பு :-** கண்ணபெருமான் கீதையில் மாதங்களின் நாள் மார்கழி என்று கூறியுள்ளார். "மார்கழி மாதத்து மதி நிறைந்த நன்னாள்" என ஆண்டாளும் திருப்பாவையில் வர்ணிக்கின்றார். மார்கழி மாதத்தில் தான் ஆதிரை நாள் கொள்ளப்பட வேண்டும் என்பது ஆகம விதியாகும்.

மார்கழி மாதம் தக்ஷினை சயனத்தின் இறுதி மாதமாகும். மார்கழி மாதத்தில் தேவர்கள் தில்லைச் சிதம்பர நடராஜனைத் தரிசிக்க ஒன்று கூடுவதாக ஐதீகம் உண்டு. தேவர்களுக்கு இம்மாதம் அதிகாலைப் பொழுதாகும். இக்காலத்தில் வைகறையில் சுவாமி தரிசனம் செய்வது உத்தமமாக கருதப்படுகிறது. இக்காலத்தைப் பிரம்ம முகூர்த்தம் என்றும் சிறப்பித்துக் கூறுவர்.

வைகறைப் பொழுது அதாவது அதிகாலை துயிலெழுதல் என்பது சைவ சமயத்தவரின் தலையாய கோட்பாடுகளில் ஒன்று. அறிவியலையும் ஆன்மீகத்தையும் ஒன்றாக கையாண்டவர்கள் எம் முன்னோர். ஆகாயத்தில் சூரியனைச் சுற்றியிருக்கும் ஓசோன் படையில் இருந்து சுரக்கப்படும் பொருள் காற்றில் கலந்து வந்து எமது மூளைக்கு தேவையான உந்து சக்தியை அளிக்கிறது என்பது விஞ்ஞானிகளின் கருத்து. அதிலும் மார்கழி மாதத்தில் சுரக்கப்படும் பொருள் கூடுதலாக இருப்பதால் மார்கழி மாதத்தை வீதி பஜனைக்கும், மார்கழி நீராடலுக்கு ஏற்றதாக நம்முன்னோர் கடைப்பிடித்துள்ளனர். அதிகாலையில் வெளியில் வந்து காற்றை சுவாசிப்பதற்கு ஏற்றவாறே கோலம் போடுதல், மார்கழி நீராடல், வீதி பஜனை போன்றவற்றையெல்லாம் கடைப்பிடித்துள்ளனர் என்பதை நினைக்கும்போது முன்னோரின் அறிவியல் சார்ந்த ஆன்மீகம் நெறியும் எம்மை வியக்க வைக்கின்றதன்றோ நல்ல பழக்கவழக்கங்களையும், இறைவனைப் போற்றும் மாண்பையும் கைக்கொண்ட எம் முன்னோர் ஈதல் இசைபட வாழ்ந்தார்கள். தற்காலத்தில் இவை எல்லாம் மெல்ல மெல்லத் தேய்ந்து போய்விட்டது. இங்கு திருகோணமலையில் கோவில்கள் இருக்கும் வட்டாரங்களைச் சேர்ந்த சிறுவர், இளைஞர், பெரியோர் யாவரும் மார்கழி மாதத்தில் நீராடி வீதி பஜனை செய்து மக்களைத் துயிலெழுப்பிய வழக்கம் இருந்தது. தற்போது காலநிலை காரணமாக அருகிப் போய்விட்ட இவ்வழக்கம் திரும்பவும் உயிர்பெறுவது நம்மிளைஞர் கையிலே தங்கியுள்ளது. நமது பாரம்பரியங்கள் போற்றப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவெம்பாவை, திருப்பாவை, மார்கழி நீராடல் போன்ற சிறப்புகள் பெற்ற "மார்கழி மாதத்து ஆதிரை நாள்" என்று சிறப்பாக அழைக்கப்படும் திருவாதிரை தினத்தில் தில்லைநடராஜப் பெருமான் தேரில் ஆரோகணித்து வீதிவலம் வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். வானவர் போற்றும் காட்சியல்லவா? இக்காட்சியை தரிசிக்க பல பாகங்களிலிருந்து அடியார்கள் சிதம்பரம் போவதுண்டு. சிதம்பரம் பஞ்ச பூத தலங்களிலே ஆகாயம் என்பதும், நடராஜப் பெருமானின் ஆருத்ரா தரிசனத்தை தரிசிக்க முக்தி கிடைக்கும் என்பது ஒரு நம்பிக்கையாகும்.

**ஆருத்ரா தரிசனம்:-** தாருகாவனத்து முனிவர்கள் சிவனை நிந்தித்துப் பெருவேள்வி ஒன்றை நடத்தினார்கள். சிவபெருமானோ இதனைப் பொருட்படுத்தாது "பிச்சாடனர்" வேடத்தில் முனிவர்களது இல்லங்களுக்கு பிச்சை எடுக்கச் சென்றார். முனிபத்தினிகள் தம்மை மறந்து பிச்சாடனராகிய சிவனின் பின்னே செல்வாராயினர். இதனால் வெகுண்ட முனிவர்கள் வேள்வித் தீயில் மதயானை, முயலகன், உடுக்கை, மான், தீப்பிழம்பு என்பவற்றைத் தோற்றுவித்து அவற்றை சிவன்பால் ஏவினர். சிவன் மதயானையைக் கொன்று தோலை அணிந்து கொண்டார். மற்றவைகளைத் தானே தரித்துக் கொண்டு முயல்கன் மேல் வலது காலை ஊன்றி இடது காலைத் தூக்கி நடனமாடி முனிவர்கட்கு உண்மையை உணர்த்தினார். இதுவே ஆருத்ரா தரிசனம் என்று சொல்லப்படுகிறது.

சிவனுக்குரிய நட்சத்திரமாக திருவாதிரையைக் கொள்வதற்கும் ஒரு காரணம் கூறப்படுகிறது. 27 நட்சத்திரங்களிலே எந்நேரமும் மேல் கீழாக ஆடிக்கொண்டிருக்கும் நட்சத்திரம் திருவாதிரையாகும். மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரையானது மேல்கீழாக ஆடுவது மட்டுமன்றி இடம் வலமாக பக்கவாட்டிலும் அசைகின்றதாக கூறப்படுகிறது. எனவே தான் மார்கழி திருவாதிரையிலே சிவன் கோவில்களில் சிவனின் ஆட்டம் வெகு சிறப்பாக ஆடப்படுகிறது. திருகோணமலையில் விஸ்வநாத சிவன் கோவிலில் பன்னெடுங்காலமாக திருவாதவூரடிகள் புராணம் படிக்கப்பட்டு, திருவாதிரை விழா பத்துநாட்கள் கொண்டாடப்பட்டு நடேசரது நடனம் வெகு சிறப்பாக இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கது. சிதம்பர நடேசருக்கு நடக்கும் அத்தனை சிறப்புகளும் விஸ்வநாத சிவனுக்கும் சிவகாமி அம்மைக்கும் நடப்பது விசேடமான அம்சமாகும்.

**திருவாதிரைக்களி –** தி-ருவாதிரைத்தேர்:- திருவதிரையன்று சிவனுக்கு களியே பிரதான நைவேத்தியமாகப் படைக்கபக்படுகிறது. இத்திருவாதிரைக் களிபற்றியும், திருவாதிரைத் தேர்பற்றியும் ஒரு புராணக்கதை வரலாறு உண்டு இது படக்கதையாக இந்நூலில் இடம்பெற்றுள்ளது.

திருவாதிரையை இறுதிநாளாகக் கொண்ட திருவெம்பாவை நோன்பு காலங்களில் சில சிவாலயங்களில் பகல் திருவிழாவும், ஒன்பதாம் நாள் தேர்த்திருவிழாவும், நடைபெறும் அன்று பின்னிரவு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று, பத்தாம் நாள் சூரிய உதயத்தில் ஆருத்திரா தரிசனம் நடைபெறும். இவ்விரதத்தை கடைப்பிடிப்போர் திருவாதிரை நாளில் உபவாசம் இருந்து அடுத்த நாள் பாரணை செய்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எம்பாவாய் :** – எம்பாவாய் என்பது திருவெம்பாவை என்னும் பெயருக்கு ஏதுவாயுள்ளது. கன்னியர்களின் பாவை நோன்பிற்குரிய பார்வதி தேவியைக் குறிப்பது. திருவெம்பாவையின் உள்ளுறைப் பொருளாகிய சக்தியை வியந்தது என்னும் உட்பொருளுக்கு பொருத்தமானது.

திருவெம்பாவையின் முதல் எட்டுத் திருப்பாட்டுகளிலும் பாவை நோன்பு நோற்கும் கன்னியரைத் துயிலெழுப்புதல் கூறப்பட்டுள்ளது. மற்றய பாடல்கள் சக்தியை வியந்து கூறுவனவாயமைந்தவை. திருவெம்பாவையின் சிறப்பு எம்பாவாய் என்ற தொடர்மொழியாகும்.

சிவ சக்தியின் அருட்செயல்களை வியந்த நவ சக்திகள் ஒன்றுசேர்ந்து சிவபெருமானை துதிப்பதும் திருவெம்பாவையின் தத்துவமாகும். மேலும் ஒன்பது சக்திகளின் ஏவலால் பிரபஞ்ச காரியம் நடைபெறுகிறது. இதை உணர்த்துவதே பாவை நோன்பாகும்.

சிவ சக்தியை வியந்தது என்பது உள்ளுறைப் பொருள் என்பதற்கு "முன்னிக்கடலை சுருக்கி" என்ற பாடலை நாம் சிறந்த உதாரணமாகக் கொள்ளலாம். மழை மேகமே, கடலை சுருக்கி எழுந்து எம் இறைவியின் திருமேனிபோல் நீலநிறமாக விளங்கி, இறைவியின் இடையைப் போல் மனின் விரிவடைந்து, எம்பிராட்டியின் சிலம்பின் ஒலிபோல் முழக்கமிட்டு, புருவம் போன்று வானவில்லை வளையவிட்டு எம்மை ஆளாக உடைய இறைவி தன்னின்றும் பிரிவில்லாத இறைவனின் அன்பர்கட்கும் இறைவி தொண்டு செய்யும் எமக்கும் முன்னின்று சொரிகின்ற இனிய அருளைப் போல் மழையினைப் பொழிவாயாக என்பது இப்பாடலின் பொருள். "தன்னிற் பிரிவிலா எம் கோமான்" - எம்மையாளாகவுடைய எம் தலைவனாகிய இறைவன் இறை தன்னில் பிரியாமையை உடையாள் உன்தன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீ இருத்தி" என்ற அடிகளிலும் குறிக்கப்பட்டுள்ளதை இங்கு சிந்தித்துப் பார்க்கலாம். நமக்கு என்பதில் இறைவியின் தொண்டுடைய நீராடும் கன்னியர்களாகிய நமக்கு எனப் பொருள்படும்.

முன்னி முன் சுரக்கும் இன்னருள் என்பது அடியவர்கட்கு இறைவி சார்ந்து நின்று முதலில் செய்யும் இனிய அருள் என்று கூறுவர். இவ்வருள் 'சத்திநிபாதம்' எனப்படும். சத்திநிபாதம் என்பது திருவருட்சக்தி பதிதல் என்பதாகும். வளர்மதியின் ஒளி வளர்ந்து வளர்ந்து நிறைவெய்த இருளானது தேய்ந்து தேய்ந்து இல்லாமற் போவதுபோல திருவருட்சக்தியின் பதிதல் ஆனது வளர்ந்து வளர்ந்து தீவிர தர நிலையை எய்தி, பரிபாகமடைந்த மல ஆற்றலை நீக்கி உயிர்களை இறைவன் திருவடியில் சேர்த்து முக்தி அளிக்கும். இறைவியின் இன்னருள் உயிர்களுக்கு முக்தி அளிப்பது போல மழைமேகமே நீ மழையினைப் பொழிந்து உலகத்தைப் பாதுகாப்பாயாக என்ற பொருளில் அமைந்தது "முன்னிக்கடலை" என்ற பாடல்.

மார்கழி நீராடும் கன்னிப்பெண்கள் வேண்டிப் போற்றும் இம் மழை வீழ்ச்சியினால் உலகம் செழிப்படைந்து எல்லா வளங்களும் உடையதாகும். செழிப்படைதலால் தாளம் தவம் இரண்டும் தங்கும். இந்நெறிகளில் உயிர்கள் தலைப்பட்டு இன்னருளுக்கு இலக்காகி மேற்கதியடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவள் நமக்கு முன் சுரக்கும இன்னருளே எனப் பொழியாய்" என்ற அடிகளால் சக்தியை வியந்தது என்றும் பதிகப்பொருள் புலப்படுகிறது.

மேலும் மணிவாசகர் இறைவனைத் தலைவனாக கொண்டு தம்மை நாயகியாக கொண்டு பாடிய இப்பாடல்கள் பிற்காலத்தில் நாயக நாயகி பாவம் ததும்பும் "பதம்" என்னும் இசையுருப்படி தோற்றுவதற்கு அத்திவாரமிட்டன என்று கூறலாம். மதுர பக்திக்கு வித்திட்ட பாடல்களாக திருவெம்பாவை, திருப்பாவை ஆகிய பாடல்களைக் குறிப்பிடலாம். ஞானமார்க்க நெறி நின்ற பாடல்கள் மணிவாசகருடையது.

இறைவனின் ஐந்தொழில்களையும் குறிக்கும் பாடலாக "போற்றி அருளுக" என்னும் பாடல் அமைந்துள்ளது. படைப்புத் தொழில்கள் சக்திகளால் நிகழ்வதாலும் திருவடி சக்தியைக் குறித்தலாலும் இப்பாடலில் "தோற்றமாம் பொற்பாதம்" "போகமாம் பூங்கழல்கள்" "ஈறாம் இணையடிகள்" "காணாத புண்டரீகம்" "ஆட்கொள்ளும் பொன்மலர்கள்" என ஐந்தொழில்களையும் இறைவன் திருவடிமேல் ஏற்றி இப்பாடல் இயம்புகின்றது.

புலரிக் காலத்து எழுந்து நீராடி நியதி முடித்துப் பாவை உருவில் பார்வதிதேவியை வழிபட்டு தாம் விரும்பிய பேற்றை பெறுவதற்காக மகளிர் ஆடும் தூய நீராட்டு என மார்கழி நீராடல் வியந்து போற்றப்படுகின்றது. அதுமட்டுமன்றி பேரின்பக் கடலுக்கு அறிகுறியாகவும் ஆர்கழி நீரைக் குறிப்பிடலாம். மார்கழி நீராடல் என்பதை "போற்றியாம் ஆர்கழி நீராடல்" என்றும், போற்றியாம் மார்கழி நீராடல் என்றும் பொருள் கொள்ளலாம்.

பிறவிப் பெருங்கடல் நீந்தி, இறைவனின் பேரின்பக் கடலில் மூழ்கி முத்தியடைய "மார்கழி நீராடல்" வித்திடுகிறது என்பதை யாவரும் உணர்ந்து அதன்வழி நின்று உய்வோமாக!



**" திருப்பெருந்துறையில் குருந்த மரநிழலில், இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட, மாணிக்கவாசக சுவாமிகள். இவர் அருளிய திருவாசகப் பகுதியே 'திருவெம்பாவை"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாதிரைக் களி

1 சிதம்பரத்திற்கு அருகில் சேந்தன் என்ற விறகுவெட்டி ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் தாழ்ந்த குலத்தில் பிறந்தவர். ஆனால் சிறந்த சிவபக்தர்.

2




தினமும் சேந்தன் விறகு விற்ற பணத்தைக்கொண்டு, பகலில் ஒரு சிவனடியாருக்கு உணவளிப்பார். அதன் பின்னர் தான் உணவருந்துவார். இதுவே அவர் வழக்கமாகும்.

3 ஒரு நாள் அதிக மழை பெய்தது. சேந்தன் மனம் மிக வருந்தினான். நடராஜப் பெருமானே இன்று என்னால் ஈர விறகுதான் கொண்டுவர முடிந்தது! அதனால் அரிசி வாங்கக் காசு இல்லை..... எனவே கேழ் வரகில் களி செய்திருக்கிறேன்.



4 உணவிடுவதற்கு எங்கு தேடியும் ஒரு சிவனடியார் கூடத் தென்பட வில்லையே. இன்று நான் என்ன செய்வேன்?



5 சேந்தனின் தூய சிவபக்தியை நடராஜர் உலகிற்கு உணர்த்த விரும்பினார். அதனால் அவர் சிவனடியார் போலச் சேந்தன் வீடு நோக்கிச் சென்றார்.

சுவாமி! தாங்கள் என்வீட்டிற்குவந்துஉணவு அருந்த வேண்டும்.



சரி அப்படியே செய்கிறேன்.

கதை அமைப்பு:- ஜெயஸ்ரீ
பட அமைப்பு:- சங்கர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6 சிவனடியார் வடிவத்தில் வந்த சிவபெருமான் உணவருந்திய பிறகு.... அன்பனே! நீ அளித்த களியை மிகுந்த விருப்பத்தோடு சாப்பிட்டேன்! இந்த அடைமழையில் இனி யார் எனக்கு அடுத்த வேளை உணவு தருவார்கள்? எனவே உன்னிடம் மீதியிருக்குங் களியையும் எனக்குக் கொடு. அதை நான் அடுத்தவேளை உண்பதற்கு வைப்பேன்.

உடனே சேந்தன் களியை ஒரு துணியில் முடிந்து சிவனடியாரிடம் கொடுத்தான்.



7 தஞ்சை சோழ மன்னரின் புதல்வர் கண்டராதித்தர். சிறந்த சிவபக்தரான இவர், சிதம்பரம் கோவிலின் கூரைக்குப் பொன்னோடு வேய்ந்தவர்.

இவர் நாள் தோறும் சிவபூசை செய்து வந்தார். இறைவன் பூசையை ஏற்றுக்கொண்டதற்கு அடையாளமாக, தமது பாதச்சிலம்பை பூசை முடிவில் ஒலிப்பது வழக்கம்.

8 அன்றைய தினம் நடராஜரின் பாதச்சிலம்பொலி கேட்கவில்லை....

பெருமானே! இன்று தங்கள் பாதச்சிலம்பொலி ஏன் எனக்குக் கேட்கவில்லை? என் பூசையில் ஏதும் தவறுண்டோ?.....



9

அன்று கண்டராதித்தர்
கனவில் நடராஜர்
தோன்றி.....



அன்பனே! நீ கவலைப்படாதே! உனது பூசையில் ஒரு குறையும் இல்லை. நான் சேந்தன் அளித்த களியை உண்ணச் சென்றேன். அதனாற் தான் இன்று உனக்கு எனது பாதச்சிலம்பொலி கேட்கவில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


10 தில்லைவாழ் அந்தணர்கள் வழக்கம்போல் சிதம்பரம் கோவிலின் கருவறைக் கதவைத் திறந்தார்கள். அப்போது....

ஐயோ! என்ன இது! நடராஜப் பெருமானைச் சுற்றி எங்கும் களியின் தூள்கள் இப்படிச் சிதறிக் கிடக்கின்றன!

யாரோ கோவிலுக்குள் நுழைந்து அநாசாரம் செய்திருக்கிறார்கள்

கருவறைக்குள் களி எப்படி வந்தது?


வாருங்கள், உடனே அரசரிடம் சென்று சொல்லுவோம்.



11 அந்தணர்கள் சென்று அரசரிடம் முறையிட்டனர். அப்போது கண்டராதித்தகளுக்கு, இறைவன் தன்னிடம் கனவில் வந்து கூறிய உண்மை விளங்கியது. உடனே அரசர், சேந்தனைப் பற்றி விசாரிக்கும்படி அமைச்சருக்கு ஆணையிட்டார்.

12

அமைச்சரே! சேந்தன் யார் என்பதைக் கண்டுபிடித்தீர்களா?



மன்னா! எங்கு தேடியும் சேந்தனைப் பற்றியவிபரம் எதுவும் கிடைக்கவில்லை.....




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13 தில்லை நடராஜப் பெருமானின் தேர்த்திருவிழா நடைபெற்றது. அதற்கு சேந்தனாரும் வந்திருந்தார். நடராஜப்பெருமானை ரதத்தில் அமர்த்திய பிறகு, அரசர் உட்பட எல்லோரும் தேரை வடம் பிடித்து இழுத்தார்கள். ஆனால்மழையின் காரணமாகச் சேற்றில் அழுந்திய தேர் சிறிதுகூட அசையவில்லை.

14 தேர் அசையாததைக் கண்டு அரசர் மிகவும் மனம் வருந்தினார். அப்போது நடராஜப் பெருமானின் குரல் வானத்தில் கேட்டது.


சேந்தா!
நீ பல்லாண்டு
பாடு!

நடராஜப்பெருமானே! ஏதும் அறியாத என்னைப் பாடச் சொன்னால் என் செய்வேன்? நீங்களே எனக்கு அருள்புரிய வேண்டும்!



15 சேந்தனார் இறைவன் அருளால் பல்லாண்டு பாடினார்.

மன்னுகதில்லை, வளர்க நம் பக்தர்கள்,
வஞ்சகர் போய் அகலப்.....
பல்லாண்டு கூறுதுமே!




16 சேந்தனார் பதின்மூன்று பாடல்களால் இறைவனை வாழ்த்திப் பாடினார். உடனே தேர் நகர்ந்தது. அரசரும், தில்லைவாழ் அந்தணர்களும் சிவனடியார்களும், சேந்தனாரின் கால்களில் வீழ்ந்து வணங்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17 மன்னர் தான் கண்ட கனவைச் சேந்தனாரிடம் தெரிவித்தார். நடராஜப் பெருமான்தான் வீட்டில் களியுண்ண வந்த சிவனடியார் என்பதை அறிந்து சேந்தனார் மனம் உருகினார்.



18 பன்னிரு சைவத் திருமுறைகளில் ஒன்பதாம் திருமுறையில் சேந்தனார் பாடியருளிய 13 "திருப்பல்லாண்டுகளும்" இடம் பெற்றுள்ளன. அத்துடன் திருவிசைப்பாக்கள் முப்பதும் பாடியுள்ளார்.

ஆதாரம்:- ஸ்ரீ இராமக்கிருஷ்ணவிஜயம்

# திருப்பல்லாண்டு

**அருளியவர்:- சேந்தனார்** **திருமுறை:- 9**

**பண்:- பஞ்சமம்** **இராகம்:- ஆஹரி**

**திருச்சிற்றம்பலம்**

" மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய்மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்னநடை மடவா ளுமைகோ னடியோமுக்
கருள் புரிந்து
பின்னைப்பிற வியறுக்க நெறிதந்த பித்தர்க்கு
பல்லாண்டு கூறுதுமே "

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானிலம் போற்றும் நவராத்திரி விழா

தொகுப்பு
செல்வி. ப்ரணவீ, ஞானசக்தி.

சக்தி வழிபாட்டிற்குரிய விரதங்களில் வெள்ளிக்கிழமை விரதம், பௌர்ணமி விரதம், நவராத்திரி விரதம் என்பன மிகவும் முக்கியமானவை.

இவற்றுள் நவராத்திரி விரதம் மிகச் சிறப்புடையது. இது ஒன்பது இரவுகள் விரதமிருந்து கொண்டாடப்படுகிற விழா; விரத விழா; வீட்டில் கொண்டாடப்படும் விரதவிழா நவராத்திரி விழா தவிர வேறில்லை. வீட்டிலே கொண்டாடப்படும் 'நவராத்திரி' அந்த வீடு என்ற கோவிலுக்கு ஒரு "பிரம்மோற்சவம்" ஆகும்.

'நவராத்திரி' என்றால் அன்னை பராசக்தியை பூசிக்கும் ஒன்பது இரவுகள் என்பது பொருளாம். இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானாசக்தி ஆகிய சக்திகளை முறையே துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி வடிவங்களாக வைத்து வணங்குகின்றோம்.

இம்மூன்று தத்துவங்களும் சேர்ந்து "சண்டிகாதேவி" என அழைக்கப்படும். கல்வி, செல்வம், வீரம் ஆகிய மூன்றிற்கும் உரிய முப்பெருந்த தேவிகளான சரஸ்வதி, இலக்குமி, துர்க்கை ஆகிய சக்திகளை வழிபட்டு, அவர்கள் பேரருளைப் பெறும் விழாவாக நவராத்திரி விழா விளங்குகின்றது.

சித்திரை, புரட்டாதி ஆகிய இரண்டு மாதங்களை யமனது இரண்டு கோரப் பற்கள் என்று சொல்வார்கள். அப்போது நோய்கள், நெய்க்குடத்தை எறும்புகள் மொய்த்துப் பற்றுவது போல, உடலைப் பற்றித் துன்புறுத்தும், பிணிகள் உடலை நலியும்படி செய்யும்.

சாதாரணமாக, உயிரும் உடலும் தாங்கவே முடியாத பல துன்பங்களை இறைவன் தருவதில்லை. இருந்தாலும் யமனது கோரப் பற்களால் கடிபடுகிற துன்பங்கள், உடலுக்கு ஏற்படும் போது அவற்றிலிருந்து விடுபட ஒரே வழி சக்தி வழிபாடேயாம்.

சித்திரை மாதத்தில் "வசந்த நவராத்திரி" ஆடியில் "ஆஷாட நவராத்திரி", ஐப்பசியில் "சாரதா நவராத்திரி" என்று பூசித்தாலும், புரட்டாதி மாதத்தில் வரும் நவராத்திரி பூசையே, மிகவும் சிறப்புக்கு உரியதாம்.


நவக்கிரகங்களுக்கு நடுநாயகமான "சூரியன்" சித்திரையில் மேடராசியிலும், வைகாசியில் இடப ராசியிலும், ஆனியில் மிதுன ராசியிலும், ஆடியில் கடகராசியிலும், ஆவணியில் சிம்ம ராசியிலும் பிரவேசிப்பது போல, புரட்டாசியில் "கன்னி" ராசியில் சஞ்சாரம் செய்கிறான்.

கன்னிராசிக்குரிய அதிபதி புதன்; புதன் "வித்தியாகரன்" என்ற புகழுக்குரியவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "மகிஷாசுர மர்த்தனி"



எங்கும் எரியக் கிரிகள் பொடிபட வெம்பகைசூர்
அங்கம் பிளந்திட விண்மண் கிழிந்திட ஆர்த்தெழுந்து
பொங்குங் கடல்கள் பிளந்திடச் சூலத்தைப் போக விட்டுச்
சிங்கத்தின் மீதுவருவாள் வராகி சிவசக்தியே

– வராகி மாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது கல்வி, புத்தி, தொழில் ஆகிய அனைத்துக்கும் அவனே அதிபதி. அதனால் உலகவாழ்வு இன்பமுடன் அமைவதற்கு அவனே மூலகாரணனாவான்.

"ஆதலின் புரட்டாதி மாதத்தில், புதனுக்கு உரிய ராசியான கன்னியில் சூரியன் பிரவேசிக்கும் சிறப்பான காலத்தில், தேவியை வழிபடுவது பெருஞ் சிறப்புக்குரியது" என்பது ஆன்றோர் வாக்கும் அவன் வகுத்த வழியுமாகும்.

நவராத்திரி வழிபாடு முழுக்க முழுக்கப் பெண்களுக்கே உரியது. எல்லா வயதுடைய பருவத்துப் பெண்களும் இவ்வழிபாட்டில் பங்குகொள்ளலாம்.

நவராத்திரி வழிபாட்டில் பெண்குழந்தைகள் பெறுவது மகிழ்ச்சிப் பயன்; கன்னிகள் பெறுவது திருமணப் பயன்; சுமங்கலிகள் பெறுவது மாங்கல்யப்பயன்; மூத்த சுமங்கலிகள் பெறுவன, மனமகிழ்ச்சி, மனஅமைதி, மனநிறைவு, சுருக்கமாகக் கூறின் எல்லோரும் பெறுவது பரிபூரண திருப்தி.

புரட்டாசியில் வரும் அமாவாசைக்குப் பிறகு பிரதமை முதல் 3நாட்கள் துர்க்கையையும், அடுத்துவரும் 3நாட்கள் லட்சுமியையும், கடைசி மூன்று நாட்கள சரஸ்வதியையும் வழிபட வேண்டும். பத்தாம் நாள் விஜயதசமி அன்று சகல கலைகளும் ஆரம்பித்தல், பயிலுதல் என்பன இடம்பெறும்.

வீரத்தின் தெய்வமாக விளங்கும் துர்க்கை, நெருப்பின் அழகும் ஆவேசப் பார்வையும் கொண்டு அழகாகத் திகழ்வாள். சிவப்பிரியை, இச்சாசக்தி பழைய தமிழ் நூல்கள் இவளைக் "கொற்றவை" என்றும் "காளி: என்றும் குறிப்பிடுகின்றன.

வீரர்கள் போரின் தொடக்கதிலும், நிறைவிலும் வழிபடும் தெய்வம் இவளே.

துர்க்கை, மகிஷன் என்ற, எருமை வடிவங்கொண்ட அசுரனுடன் ஒன்பது இரவுகள் போர் செய்தாள். இந்த நாட்களே "நவராத்திரி" அவனை வதம் செய்து வெற்றிவாகை சூடியது. பத்தாம் நாள் இதுவே "விஜயதசமி", 'விஜயம்' என்றால் மேலான வெற்றி. மகிஷனை வெற்றி கொண்டு அழித்தமையால் துர்க்கைக்கு "மகிஷாசுரமர்த்தனி" என்ற பெயருண்டானது.

துர்க்கையின் அம்சங்கள் ஒன்பது. அவையாவன 1.வனதுர்க்கை, 2.சூலினி துர்க்கை, 3.ஜாதவேதா துர்க்கை, 4.ஜாவலா துர்க்கை, 5.சாந்தி துர்க்கை, 6.சபரி துர்க்கை, 7.தீபதுர்க்கை, 8.ஆசுரி துர்க்கை, 9. லவண துர்க்கை

முதல் மூன்று நாட்களுக்கும் உரிய நிவேதனம் ① வெண்பொங்கல், ② புளியோதரை, ③ சர்க்கரைப் பொங்கல். நவதானியச் சுண்டலை நாளும் ஒரு வகையாக வைக்கலாம்.

அடுத்து லட்சுமி:- இவள் தாமரை மலரின் அழகு; அருள்பொழியும் பார்வையுடன் அழகாக இருப்பாள். செல்வத்தின் தெய்வம்; விஷ்ணுப்பிரியை; கிரியா சக்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லட்சுமி பாற்கடலில் அமுதத்துடன் தோன்றியவள்; அமுதமயமானவள்.

பொன்னிற மேனியுடன் செங்கமலாசனத்தில் வீற்றிருப்பாள்; இவளை நான்கு யானைகள் எப்போதும் நீராட்டும். முக்கியமாக, இவள் செல்வவளம் தந்து வறுமையை அகற்றி அருள்புரிபவள். இவளுக்குத் திருப்பதியில் உள்ள திருக்கனூரில் தனிக்கோவில் உண்டு.

லட்சுமியின் அம்சங் கொண்டவர்கள் எண்மர்:- 1.ஆதிலட்சுமி, 2.தானியலட்சுமி, 3.தைரியலட்சுமி, 4.கஜலட்சுமி, 5.சந்தானலட்சுமி, 6.விஜயலட்சுமி, 7.வித்யாலட்சுமி, 8.தனலட்சுமி. இந்த மூன்று நாட்களுக்குமான நிவேதனங்கள் 1.கதம்ப அன்னம், ②தயிர்ச்சாதம்,③தேங்காய் சாதம்.

வைரத்தின் அழகு சரஸ்வதியுடையது. அமைதிப் பார்வையுடன் அழகாகப் பிரகாசிப்பவள். கல்வியின் தெய்வம்; பிரம்மப் பிரியை; ஞானசக்தி.

தமிழ் நூல்கள் சரஸ்வதியை "ஆத்தங்கரைச் சொற்கிழத்தி" எனக் குறிப்பிடும். நாகை மாவட்டத்திலுள்ள கூத்தனூரில் சரஸ்வதிக்குத் தனிக்கோவில் உண்டு.

நவராத்திரியின் ஆறாவது ஏழாவது நாளில், மூலநட்சத்திரம் உச்சமாக இருக்கும்போது தேவியை ஆவாகனம் செய்வது முறையாகும். இது தேவி அவதாரம் செய்த நாளாகும். இவள் பூசை 'சிரவணம்' என்ற நட்சத்திரம் உச்சமாகும் நாளில் நிறைவு பெறும் - 'சிரவணம்' - என்பது திருவோண நட்சத்திரம்; அன்றே விஜயதசமி.

தொழில்கள் யாவும், புலமை தொழில், என்ற இரு பிரிவுகளில் அடங்கும். புலமை என்பது ஞானம், தொழில் - செயற்பாடு. ஒவ்வொரு தொழில் செய்தவற்கும் அத்தொழில் பற்றிய ஞானம், அதாவது அறிவு மிகமிக அவசியம். எனவே ஞானத்தின் தெய்வமான சரஸ்வதியைப் பூசிப்பதே சரஸ்வதி பூசை.

நவராத்திரியின் கடைசி நாளாகிய "மகாநவமி" வீட்டிலிருக்கும் நூல்கள், இசைக்கருவிகள், வீட்டு வேலைகள் செய்யப்பயன்படுத்தும் கருவிகள் யாவற்றையும் ஒழுங்காக அடுக்கி வைத்து பூசைசெய்து கலைமகளை வழிபட வேண்டும். இதை "ஆயுத பூசை" என்பர்.

சரஸ்வதிக்கும் அஷ்ட அம்சங்கள் உள. அவையாவன:- 1.வாகீஸ்வரி, 2.சித்திரேஸ்வரி, 3.துளஜா, 4.கீர்த்தீஸ்வரி, 5.அந்தரிட்ச சரஸ்வதி, 6.கட சரஸ்வதி, 7.நீலசரஸ்வதி, 8.கினி ஸரஸ்வதி

கடைசி மூன்றுநாள் நிவேதனங்கள் 7.எலுமிச்சை, 8.பாயாசம், 9.அக்கார அடிசில்


நவராத்திரியின்போது பெரும்பாலும் வீடுகளில் கொலு வைப்பார்கள். அமாவாசை அன்றே பொம்மைகளை வைத்து ஒழுங்குசெய்ய வேண்டும். இந்த நாட்களின் போது வேதபாராயணம், திருமுறை ஓதுதல், நவராத்திரிப் பாடல்கள் பாடி வழிபடுவர். நடனம், வில்லுப்பாட்டுப் போன்றவைகளும் இடம்பெறும். இதனால் வீடு மங்களகரமாக விளங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய பல சிறப்புகளும் நற்பயன்களும் தரும் நவராத்திரி, சக்தி ஆலயங்களிலும், இராஜராஜேஸ்வரி அம்மன் பிரதிஷ்டை செய்யப்பெற்ற சிவாலயங்கள், முருகனாலயங்கள், வைரவ ஆலயங்களிலும் நடைபெறும்.

சிவமூர்த்தமாக விளங்கும் வைரவரின் ஆலயமான "சோலை வைரவர்" கோவிலிலும் பரிவார மூர்த்தியாக விளங்கும் ஸ்ரீ முத்துமாரி அம்மனுக்கு "நவராத்திரி விழா" நடைபெறும். பத்தாம் நாள் விஜயதசமி அன்று திருகோணமலையில் இடம்பெறும் கும்பவிழாவில் இவ்வாலயத்திலிருந்தும் அம்மன் கும்பமும் கட்டுக் கும்பங்களும் இணைந்து சிறப்பிக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால் அபிடேகத்தின் சிறப்பு

இறைவனுடைய திருவருளைப் பெறுவதற்காக ஆலயங்களில் ஆகமவிதிப்படி வழிபாடுகள் நடைபெறுகின்றன.

இவ்வழிபாடுகள் ஆத்மார்த்த பூசை, பரார்த்த பூசை என இருவகைப்படும்.

தத்தமது வீடுகளில் தாமே பூசைகளைச் செய்வது தாம்விரும்பிய பயனை அடைவதற்கே, இது ஆத்மார்த்த பூசை ஆகும்.

ஆலயங்களில் சகல ஆன்மாக்களின் நன்மை கருதிச் செய்யப்படுவது பரார்த்த பூசையாகும். இங்கு இறைவனுக்குப் பல்வேறு பெருட்களால் அபிடேகம் செய்து, ஆடை அணிகள், மலர் மாலைகளால் அலங்காரம் செய்து, வேதபாராயணம், தேவார பராயணம், உபசாரங்கள் என்பன செய்து வழிபடுகிறோம்.

அபிடேகம் செய்வதற்கு பயன்படும் பொருட்களாவன:- பால், தயிர், நெய், பஞ்சகௌவியம், பஞ்சாமிர்தம், தேன், இளநீர், கருப்பஞ்சாறு, பழச்சாறு, சந்தணம் என்பனவாம். இவற்றுள் மிக முக்கியமான அபிடேகப் பொருட்களாகப் பசுவின் இடமிருந்து கிடைக்கும் பால், தயிர், நெய், பஞ்சகௌயம் என்பன முதலிடம் பெறுகின்றன.

இறைவனால் ஆக்கப்பட்டவைகளை முதலில் இறைவனுக்கே அர்ப்பணிப்பதால் எமக்கும் இன்பம் கிட்டும் என்று, எண்ணும் அன்பின் வெளிப்பாடாகவே இந்த அபிடேகம் இடம்பெறுகிறது.

ஆகம முறைப்படி அபிடேகம் செய்யும்போது, ஒவ்வொரு பொருட்களுக்குமுரிய மந்திரங்கள் உச்சரிக்கப்பட்டே அபிடேகம் நடைபெறும். மந்திர உச்சாடனத்தினால் அபிடேகப் பொருட்களின் சக்தியும், பிம்பத்திலும் இயந்திரத்திலும் சேமிக்கப்பட்ட தெய்வ சக்தியும் கலந்து, வீரியம் பெற்று சக்தி அலைகளாக, வழிபடவரும் அடியார்கள் மீதும் பரவும். இதனால் தோஷங்கள் நீங்கி சுகம் கிட்டும். அதனாலேயே அபிடேகம் ஆகமவிதிப்படி ஆலயங்களில் செய்யப்படுகின்றன.

அபிடேகத்தில் முக்கிய இடம் பாலாபிடேகத்திற்கே. பசுவின் உடலில் பல்வேறு இறைவர்களும் தேவர்களும் குடி இருக்கிறார்கள். பசுவின் மடியில் இருக்கும் காம்புகளில் ஏழு சமுத்திரங்களும் வாசம் செய்கின்றன. இதன்படி நாம் பாலாபிடேகம் செய்வது, ஏழு சமுத்திரங்களின் தீர்த்தங்களால் அபிடேகம் செய்வதற்கு ஒப்பாகும்.

"பிரம்மதேவர் பசுவைப் பூமியில் உள்ள புண்ணிய தீர்த்தங்களிலிருந்தும் எல்லாப் புண்ணிய திருத்தலங்களிலிருந்தும், எல்லா உலகங்களில் இருந்தும் பரிசுத்தமான அழகான பதார்த்தங்களில் இருந்தும் சக்தியை எடுத்து எல்லாவற்றையும் விடச் சிறப்பாக பசுவைப் படைத்தார்" எனப் புராணங்கள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுக்களின் மடியிலுள்ள நான்கு காம்புகளும் சுவாஹாரம், சுவதாகாரம், வஷ்டாகாரம், ஹந்தாகாரம் என நான்கு வகைப்படும். இவற்றை முறையே தேவர், விதுரர், பூதேசுரர், மானிடர் என்று பூசிக்கிறார்கள்.

காமதேனு பாற்கடல் தோன்றியது. எனவே அதன் சந்ததிகளே பூலோகத்திற் காணப்படும் பசுக்களாகுமெனப் புராணங்கள் கூறுகின்றன. இவை மனிதர்களுக்கு பல்வகைப் பயன்களை நல்குவதால் "கோமாதா" எனப் போற்றுகிறோம். இத்தகைய சிறப்புக்களுடைய பசுவின் பாலால் இறைவனுக்கு அபிடேகம் செய்வது உலகிலேயே மிகவும் உயர்ந்த பொருளை இறைவனுக்குச் சமர்ப்பிப்பதாகும்.

பசுவிடமிருந்து பெறும் பஞ்சகௌவியத்தில் பல்வேறு தேவர்கள் குடியிருக்கிறார்கள். பாலில் சந்திரன்; தயிரில் வாயுபகவான்; கோசலத்தில் வருணன்; கோமயத்தில் அக்கினி; நெய்யில் சூரிய பகவானும் உளர்.

ஐம்புலன்களையும் ஐந்து பசுக்களோடு ஒப்பிட்டு கூறுகிறார் திருமூலர். எனவே ஐம்புலன்களையும் அடக்கி, இறையருளாற் பெற்ற இன்பத்தை (பாலை) இறைவனுக்கு சமர்ப்பிப்பதே "பால் அபிடேகத் தத்துவம்" ஆகும்.

பசுக்கள் தாமாகவே பால் சொரிந்து இறைவழிபாடாற்றிய திருத்தலங்கள் பல இந்தியாவில் உள. இவ்வதிசயங்களை மக்கள் கண்டு, அவ்விடங்களில் எழுந்தருளியிருந்த இறைவனைக் கண்டு கோவில் கட்டி, அவற்றை வழிபாட்டுத்தலங்களாக்கியதாகப் புராணங்கள் கூறுகின்றன.

தஞ்சையிலுள்ள திருவாய்பாடியில் "பால் உகந்த நாதர்" ஆலயம் உளது. இங்குதான் சண்டேசுர நாயனார் பூசைசெய்து முத்தி பெற்றார். "கந்தன் குடி"யில் வள்ளி தெய்வானை சமேத கந்தப் பெருமான்: காரமடையில் சிவலிங்கம்: திருக்கொண்டீச்சரத்தில் இறைவி பசுவடிவில் வந்து வழிபட்ட சிவலிங்கம் என்பன உண்டு.

பரிசுத்தமாக விரதமிருந்து பால்குடம் தலையிற் சுமந்து சென்று அதை இறைவனுக்கு அபிடேகம் செய்வது மிகவும் சிறப்பானதாம்.

"இறைவனுக்கு அபிடேகிக்கப் பெற்ற தீர்த்தத்தை கீழே சிந்தாது பக்தி சிரத்தையோடு வாங்கிப் பருகி, பின்னர் கைகளைத் தலையில் தடவிக்கொள்ள வேண்டும்" எனப் பூசை விதிகள் கூறும்.

இவ்வளவு சிறப்புக்களையும் வழங்கும் பசுக்களை, நாம் தெய்வமாகப் போற்றிப் பேணிப் பாதுகாத்து வருவோமானால் எமது இல்லமும் சிறக்கும், உள்ளமும் சிறக்கும்.

" கோமாதா எங்கள் குலமாதா "

**ஆக்கம்**

**திருமதி. ஜெயலட்சுமி. சுந்தரலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசியில் கால பைரவர்

தென்னிந்தியாவில், காலபைரவர் ஒரு சேத்திர பாலகராக பொதுவாகக் கருதப்படுகிறார் எனினும் அவருக்கும் சிவன் கோவில்களில் பூசைகள் தவறாமல் செய்யப்படுகின்றன.

வடுகன், வயிரவர், சுடலை மாடன் என்று பல பெயர்களால் அழைக்கப்படும் காலபைரவருக்கென்று, சில தலங்களிற் தனிக் கோவில்களும் உள

அவரையே உபாசனா மூர்த்தியாக முழுமுதற் கடவுளாக வணங்கி வழிபடும் மரபும் தமிழ் நாட்டில் உண்டு.

குருமார்க்கமாக "வயிரவ உபதேசம்" பெற்று, திருவாவடுதுறை ஆதீனத் தம்பிரான்கள் சிலர் பைரவ வழிபாட்டையே மூல வழிபாடாகக் கொண்டு பூசித்திருக்கிறார்கள்.

யார் இந்தக் கால பைரவர்? கால பைரவர் என்ற மூர்த்தம் உண்மையில் சிவாம்சமே ஆகும்.

மும் மூர்த்திகளில் படைக்கும் தொழிலுக்குரிய பிரம்மா, ஆதியில் ஐந்து தலைகள் பெற்றிருந்தார், தாமே படைப்புத் தொழிலுக்கு அதிபதி என்ற அகந்தையால், சிவனையும் விஷ்ணுவையும் மதிப்புக் குறைவாகப் பேசி அவமதித்தார்.

பிரம்மாவின் அந்தக் கர்வத்தை அடக்கும் பொருட்டு. சிவபெருமான் தன் மேனியிவிருந்து பைரவ அம்சத்தைத் தோற்றுவித்தார்

மகா உக்கிர சொரூபமாக வெளிப்பட்ட பைரவ மூர்த்தி சிவ ஆணைப்படி தம் விரல் நகங்களாலேயே பிரம்மாவின் தலையைக் கொய்தார். ஆனால் அந்த பிரம்ம சிரசை பைரவரால் தூர வீசி எறிய முடியவில்லை

பிரம்ம கபாலம் பைரவர் கையிலேயே ஒட்டிக் கொண்டது. அதனால் பிரம்மசத்தி தோசம் அவரைப் பிடித்தது.

சிவன், தமது வைரவ அம்சத்திடம் " அந்த பிரம்ம கபாலத்தில் 12 ஆண்டுகள் "இரத்தப்பிச்சையை நீ ஏற்க வேண்டும்" என்று கட்டளையிட்டார்

அவரது உத்தரவின் படி பல இடங்களில் அலைந்து திரிந்து வைரவர் பிரம்ம கபாலத்தில் இரத்தப் பிச்சை ஏற்றார்.

ஒருமுறை வைரவர் திருமாலிடம் இரத்தப்பிச்சைக்கு வந்தபோது திருமால் எவ்வளவு இரத்தம் அளித்தும் அந்தப் பிரம்ம கபாலம் நிரம்பவில்லை தாம் இனி எடுக்கப் போகும் பத்து அவதாரங்களில், எதிரிகளைக் கொன்று அவருக்குப் போதிய இரத்தப் பிச்சை அளிப்பதாகத் திருமால் பைரவருக்கு வாக்குறுதி அளித்தார். இறுதியில் வைரவர் காசி சேத்திரத்தில் பிச்சை தேடி வந்தபோது அவர் கையில் இருந்த பிரம்மகபாலம் மறைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் சிவபெருமானுக்கு " பிரம்மசிரச்சேத மூர்த்தி" என்ற ஒரு திருநாமம் வழங்கலாயிற்று. மேற்கூறிய வரலாறு " பிரம்மாண்ட புராணத்திலும், வாமன புராணத்திலும் இடம் பெற்றுள்ளது.

காசியில் காலபைரவருக்குத் தனிமரியாதையும் முக்கியத்துவமும் தரப்பட்டிருப்பதைக் காசிக்குச் செல்பவர்கள் கண் கூடாகப் பார்க்கலாம்

காசியில் வசிப்பவர்களின், பாவ புண்ணியம், மற்றும் ஜீவமரணக் கணக்குகளைச், சித்திர குப்தனுக்குப் பதில், காலபைரவரே எழுதுகிறார். ஆதனால் காசியில் யமபயமோ, யமவாதையோ இல்லை.

காசியில் யமதர்மனின் கடமையைக் காலபைரவரே பொறுப்பேற்று நிறைவேற்றுவதால், காசிக்குச் செல்பவர்களின் பாவங்களையும் அவரே போக்குகிறார்

காலபைரவரை இங்கு வழிபடுபவர்கள், மிருத்தியுஞ்ஜய மந்திரத்தின் பயனைப் பெற்று மரண பயத்திலிருந்து விடுபடுகிறார்கள்.

இந்த பைரவ மூர்த்தியைக் காசியில் வழிபடும் பக்தர்கள் தம்முடன் கொண்டு செல்லும் கறுப்புப் பட்டுக் கயிற்றைக் கோயில் பூசாரிகளான பண்டாக்களிடம் தர வேண்டும் அவர்கள் அதைக் " காலபைரவ அஷ்டகம்" என்ற சுலோகங்களைக் கூறி பைரவர் திருவடியில் வைத்துப் பக்தர்களுக்குக் கொடுப்பார்கள். பின் பூசாரிகள் மயில் தோகையால் பக்தர்களின் தலைமீது வைத்து, அவர்கள் மீது துர்தேவதைகளின் ஆதிக்கம் இருந்தால் நீக்குகிறார்கள்.

காசியின் காவற் தெய்வம் என்பதால் காசியின் எட்டுத் திசைகளிலும் பைரவருக்குக் கோவில்கள் உண்டு.

அதோடு மட்டுமன்றி காசியில் கங்கைக்கரையில் 64 தீர்த்தக் கட்டங்களிலும் 64 பைரவ மூர்த்திகள் நிறுவப்பட்டுள்ளனர்,

பைரவ அவதாரம் பற்றி இன்னொரு வரலாறுமுண்டு. ஹிரண்யாட்சனின் மகன் அந்தாகாசுரனைச் சங்கரித்தற் பொருட்டு, சிவபெருமான் எடுத்த கோலமே என்பது அது.

– ஆதாரம் –

ஸ்ரீ. இராமக்கிருஷ்ண

விஜயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைரவ அஷ்டகம்

1. எங்கு பார்த்தாலும் யட்ச கணங்களின் உருவத்தில் இருப்பவரும், எல்லாத் திசைகளிலும் அறியப்பட்டவரும், பூமியை நடுங்கச் செய்பவரும், தீயவர்களான எதிரிகளை அழிப்பவரும், கிரீடம் அணிந்த தலையில் சந்திரனைத் தரித்தவரும், "தம்தம்" என்ற நீண்ட உடல் உடையவரும், விகாரமான நகங்களும் முகத்தோற்றமுங் கொண்டவரும், உயர்ந்து, அடர்த்தியாகக் காணப்படும் உரோமம் உள்ளவரும், "பம் பம்" என்று பாவத்தைப் போக்குபவரும் ஆகிய "உலக ரட்சகர்" பைரவர் என அழைக்கப்படும் சிவனை எப்போதும் வணங்குங்கள்.

2. அழகிய இரத்தினம் போன்ற நிறத்துடன், யானையின் மத்தகம் போன்ற உறுதிவாய்ந்த உடல் படைத்தவரும், கூர்மையான பயங்கரமான கோரைப் பற்கள் உடையவரும், கோடிக்கணக்கான பறவைக்கூட்டத்தின் கூச்சல் போன்று ஒலி செய்பவரும், தன்னிடம் சரணடைந்தவர்களை "கம் கம்" என்று வரும் யமனின் பிடியிலிருந்து விடுவிப்பவரும், காம இச்சைகளை எரிப்பவரும், ஒளிபொருந்திய உடல் உடையவரும், உலகை ரட்சிப்பவருமாகிய பைரவரை எப்போதும் வணங்குங்கள்.

3. நீண்ட பெரிய நாக்கை "வல வல" என ஆட்டிக்கொண்டு "லம் லம்" என்று கூறிக்கொண்டு வருபவரும், சாம்பல் பூசியதால் சாம்பல் நிறமுடையவரும், பரந்த முகங் கொண்டவரும், நல்ல நெற்றியை உடையவரும், இளஞ்சூரியன் போன்ற சிவந்த பெரிய கண்கள் உடையவரும், ஆடையற்றவர் என்றாலும் அலங்கரிக்கப்பட்டவரும், ஒளிவீசும் பெரிய உடல் படைத்தவரும், உலகைக் காப்பாற்றுபவருமாகிய பைரவரை எப்போதும் வணங்குங்கள்.

4. காற்றைப் போல் மிகவும் வேகமாகச் செல்பவரும், தன்னை வணங்குவர்களுக்கு அருள் புரிபவரும், பிரபஞ்சத்திற்கு ஆதாரமாக இருந்து தாங்குபவரும், கையில் வாள் ஏந்தியவ்ரும், மூன்று உலகங்களுக்கும் உறைவிடமானவரும், எப்போதும் அசைந்து அசைந்து சஞ்சரிப்பதால். பூமியைச் செயற்படச் செய்பவரும், மாயவடிவங் கொண்டவரும் ஆகிய உலக ரட்சகனான பைரவரை எப்போதும் வணங்குங்கள்.

5. "சம் சம்" என்றொலிக்கும் சங்கைக் கையில் ஏந்தியவரும், பூரண சந்திரன் போன்ற ஒளி பொருந்தியவுரும், "மம் மம்" என்ற புன்சிரிப்புடையவரும், நித்தியம் ஆனவரும், ஆனால் தனது ரகசியமான உண்மைத் தத்துவத்தை எவராலும் அறியப்படாமல் இருப்பவரும், சிறிய சிறிய லீலைகள் மூலம் எல்லோரையும் உற்சாகப்படுத்துபவரும், வாயு மண்டலத்தில் சஞ்சரிப்பவருமாகிய உலக ரட்சகனான பைரவரை எப்போதும் வழிபடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பக்தர்களின் எதிரிகளை வாளால் ஒறுப்பவரும், கொடிய விஷத்தையும் அருந்தி அமிர்தம் போல் ஆக்கியவரும், மிகவும் வேகமாகச் செல்லும்போது "தக தக" என்று எரியும் நெருப்பின் ஒளிபோல் பிரகாசமாக இருப்பரும், ஹுங்கார பேரிரைச்சலுடன் ஆகாயத்தில் வெகு வேகமாகச் சென்று ஆகாயத்தையும் பூமியையும் நடுங்கச் செய்பவரும், பக்தரிடம் குழந்தைபோல விளையாடுபவரும் ஆகிய உலக ரட்சகன் பைரவ மூர்த்தியை எப்போதும் துதியுங்கள்.

7. எல்லாவிதமான சித்திகளையுங் கொண்டவரும், எல்லா நற்குணங்களையும் பெற்றவரும், தேவர்களிடம் பிரசன்னமாக இருப்பவரும், பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற மும்மூர்த்திகளின் வடிவமானவரும், சந்திரன், சூரியன், அக்கினி மூன்றையும் முறையே இடம், வலம், நெற்றியில் கண்களாக உடையவரும், சகல செல்வங்களுடனும் இறைவனாகத் திகழ்பவரும், பரிபூரண வடிவில் எப்போதும் பயத்தைப் போக்குபவரும் தேவையானபோது தனது உக்கிர வடிவத்தைக் காட்டுபவரும், ஆகிய பைரவ மூர்த்தியை எப்போதும் வணங்குங்கள்.

8. "ஹம் ஹம்" என்ற பைரவரின் சிரிப்பு மெல்ல மெல்ல ஆரம்பித்து பின் தொண்டையிலிருந்து கிளம்பி பயங்கரமாக வெளிப்படும். "தம் தம்" என்ற தலைவரான பைரவரின் கம்பீரமான வடிவம் வெளிப்படும். தலையில் கிரீடம் போல பாம்பைச் சுற்றி வைத்துக்கொண்டு, தண்டிக்கத் தயாராக 'இருப்பவர் போன்று முன்கையை இறுக்கமாக மூடிக்கொண்டும் "டண் டண்" என்று சத்தம் செய்துகொண்டு வரும் பைரவர் தேவர்களின் மனதிலிருக்கும் எண்ணங்களை எல்லாம் அறிந்தவர். மன்மதனின் கர்வத்தை அடக்கியவர். தலைவராக இருப்பவர். அந்த உலக நாயகரான 'பைரவர்' என்று அழைக்கப்படும் சிவபெருமானை எப்போதும் வணங்குங்கள்.

9. இவ்விதம் இந்த பைரவாஷ்டகத்தை நாள்தோறும் நியதியுடன் படிப்பவர்களின் விருப்பங்கள் கைகூடும். தடைகள் நீங்கும். துன்பங்கள் நீங்கும், தேவதைகளிடமிருந்து உண்டாகும் பயமும், டாகினீ - சாகினீ முதலான பிசாசுகளின் பீடையும் தவிர்க்கப்படும். எல்லாவிதமான நோய்களும் நீங்கும். வாழ்க்கையில் எல்லாவிதமான நோய்களும் தவிர்க்கப்படும், கஷ்டங்கள் நீங்க இந்த அஷ்டகத்தை முழுமனதுடன் தியானம் செய்வது தான் ஒரேவழியாகும்.

10. இந்த பைரவாஷ்டகத்ரைத எவன் ஒருவன் ஆறுமாதம் படிக்கிறானோ, அவன் மகேஸ்வரனான பகவான் இருக்கும் உலகத்தை அடைகிறான். சிந்தூரம் போன்ற சிவந்த உடல் உடையவரும் பிறப்பற்றவரும், அழகான கிரீடம் தரித்தவரும் ஆகிய பைரவர் என்று அழைக்கப்படும் சிவபெருமானை நான் வணங்குகின்றேன்.

**தமிழாக்கம்: - வி. ஆர். கணேசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை உப்புவெளி சோலை வைரவர் கோவில்

## ஸ்ரீ முத்துமாரி அம்மன் கரகம்

ஆக்கம்

கலாபூசணம் செல்வி . மணிமேகலாதேவி கார்த்திகேசு

01. பத்திரியில் விற்றிருக்கும் முத்துமாரி அம்மா - எம்
பாவவினை போக்கிடடி முத்துமாரி அம்மா
சுத்தியெழும் பகைதொலைப்பாய் முத்துமாரி அம்மா - பைரவ
சூலபாணி கோவில் கொண்டாய் முத்துமாரி அம்மா

02. பைரவியே வராகியே முத்துமாரி அம்மா - சோலை
வைரவரின் அருகமர்ந்தாய் முத்துமாரி அம்மா
பையவே வினைகளைவாய் முத்துமாரி அம்மா - மன
மையலைப் போக்கிடடி முத்துமாரி அம்மா

03. சோலையடி வீற்றிருக்கும் சுந்தரி அம்மா - வரும்
சோதனைகள் தீர்த்திடடி திரிசூலினி அம்மா
கோலவெழிற் கோமளமே குணவதி அம்மா - எம்
கோதிலாக் குஞ்சரியே குணமணி அம்மா

04. கும்பத்திலே வீற்றிருக்கும் முத்துமாரி அம்மா - நல்ல
கூத்துமாடி வருபவளே முத்துமாரி அம்மா
பம்பையொலி கேட்டதுமே முத்துமாரி அம்மா - நீயும்
பார்விளங்க ஆடிடனே முத்துமாரி அம்மா

05. வேம்புரதம் ஏறிவரும் முத்துமாரி அம்மா - நல்ல
பாம்பு ரதமும் ஏறிடுவாய் முத்துமாரி அம்மா
வேம்பின் நிழல் குடியிருப்பாய் முத்துமாரி அம்மா - முத்தை
சாம்பவன் மேல் வீசினாயே முத்துமாரி அம்மா

06. கொம்புகுழல் சங்கினொலி முத்துமாரி அம்மா - கேட்டு
குதித்துநடம் புரிபவளே முத்துமாரி அம்மா
தொம்தோமெனச் சிலம்பொலிக்க முத்துமாரி அம்மா - நீயும்
துரியநடம் ஆடிடனே முத்துமாரி அம்மா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலையில் நவராத்திரி கும்பவிழா



அருள்மிகு சோலை வைரவர் ஆலய
ஸ்ரீ முத்துமாரி அம்மன் கரகம்



ஸ்ரீ முத்துமாரி அம்மன் கட்டுக் கும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. பூநாகங் குடைபிடிக்க முத்துமாரி அம்மா -நீயும்
புவிமேலே பவனிவருவாய் முத்துமாரி அம்மா
மூவுலகும் ஆள்பவளே முத்துமாரி அம்மா - நல்ல
முத்தழகி ரத்தினமே முத்துமாரி அம்மா

08. உத்தமியே சித்திரமே முத்துமாரி அம்மா - இந்த
ஊர்காக்கும் காவற்காரி முத்துமாரி அம்மா
புத்தம்புதுக் கோவிலிலே முத்துமாரி அம்மா - நீயும்
பூரிப்புடன் குடியமர்ந்தாய் முத்துமாரி அம்மா

09. மகிசாசுர மர்த்தினியே முத்துமாரி அம்மா - எம்
மானங்காக்கும் மாதரசி முத்துமாரி அம்மா
அகிலமெலாம் பூத்தவளே முத்துமாரி அம்மா - காக்கும்
ஆத்தாளே அம்பிகையே முத்துமாரி அம்மா

10. நவராத்திரி நாயகியே முத்துமாரி அம்மா - வக்ர
நவக்கிரக நாசினியே முத்துமாரி அம்மா
அவணியெலாங் காப்பவளே முத்துமாரி அம்மா - எம்
அவலங்கள் தீர்ப்பவளே முத்துமாரி அம்மா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக தோத்திரம் - வியாச முனிவர்

இந்தத் தோத்திரத்தைத் தினமும் ஓதி சூரிய நமஸ்காரத்துடன், நவக்கிரகங்களை வணங்கினால் எல்லாக் கஷ்டங்களிலிருந்தும் விடுபடலாம்.

1) செம்பருத்திப் பூப்போன்றவரும், காசியப்பரின் பிள்ளையும், அதிக ஒளி உள்ளவரும், இருளுக்கு எதிரியானவரும், எல்லாப் பாவங்களையும் தீர்ப்பவருமான சூரிய பகவானை வணங்குகின்றேன்.

2) தயிர், சங்கு, பனிக்கட்டி போன்ற நிறமுள்ளவரும், பாற்கடலிற் பிறந்தவரும், பரமசிவனுடைய தலையில் ஆபரணமாக விளங்குபவருமான சந்திரனை வணங்குகிறேன்.

3) பூமியின் புத்திரனும், மின்னல் போல ஒளி உள்ளவரும், குமாரனும், சக்தியைக் கையில் வைத்துள்ளவரும், மங்களகரமானவருமான அங்காரகனை (செவ்வாய்) வணங்குகிறேன்.

4) ஞாழல் (புலிநகக் கொன்றை) மொட்டுப்போல கரியநிறத்தவரும், உருவில் ஒப்பற்றவரும், புத்திமானும், சந்திர புத்திரனும், சாந்தமானவனுமான புதனை நமஸ்கரிக்கிறேன்.

5) தேவதைகளுக்கும் மகரிசிகளுக்கும் குருவும், பொன்னொளி நிறத்தவரும், சற்புத்தி உள்ளவரும் மூவுலகிற்கும் ஈஸ்வரனுமான பிரகஸ்பதியை (வியாழன்) வணங்குகிறேன்.

6) பனி, தும்பைப்பூ, தாமரைத் தண்டு இவற்றின் நிறத்தில் ஒளிர்பவரும், அசுரர்களுக்கு பரமகுருவும், சர்வசாத்திரங்களையும் உபதேசிப்பவருமான சுக்கிரனை (வெள்ளி) வணங்குகிறேன்.

7) நீலமான மைபோன்ற ஒளியுள்ளவரும், சூரிய புத்திரனும், எமனுக்கு அண்ணனும், சாயாதேவியிடம் சூரியனுக்குப் பிறந்தவருமான சனீஸ்வரனை வணங்குகின்றேன்.

8) பாதி உடல் உள்ளவரும் மகா ஆற்றல் படைத்தவரும், சந்திர சூரியர்களை எதிர்ப்பவரும், சிம்ஹிகையின் புத்திரனுமான ராகுவைப் பணிகின்றேன்.

9) பலாச மலர் போன்றவரும், நட்சத்திரம் கிரகங்களுக்குத் தலைவனும், கோபம் மிக்கவரும் அகோர தோற்றமுடையவரும், பயங்கரமான கேதுவை வணங்குகின்றேன்.

மனமொன்றி, பகலிலோ, இரவிலோ வியாச முனிவரால் அருளப்பெற்ற இந்தத் தோத்திரத்தை யார் படிக்கிறார்களோ, அவருக்குத் தடைகள் விலகும்.

பெண்கள், ஆண்கள், அரசர்கள் ஆகியோருக்குக் கெட்ட கனவுகள் வாரா. அளவற்ற செல்வமும், ஆரோக்கியமும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

மேலும் நவக்கிரகம், நட்சத்திரம், திருடர்கள், அக்கினி இவற்றால் ஏற்படும் துன்பங்கள் ஆபத்துகள் யாவும் நீங்கி நிவர்த்தியாகும் என வியாசமுனி கூறுகிறார்.

சுபம்

**ஆதாரம்**

**ஸ்ரீ இராமகிருஷ்ணவிஜயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயிரவர் அகவல்



சீர்புகழ் வயிரவர் செந்தமி முரைக்க
கார்புகழ் மேனிக் கணபதி யருளே
ஆதி பராபரி அருளிய நுதல்விழி
சோதிபோ லெழுந்து சுடரொளி யாகி
வீதியி லெழும்பி விசும்பெலாங் கடந்து
ஓதிய மந்திர உச்சா டனமாய்
ஓங்கா ரங்கொண் டொருமுக மாகி
அக்கினிச் சொரூப வனல்பல கதிராய்
விக்கினந் தீர்க்கும் விறும வயிரவா!
அப்பமு மவலு மாலங் காயும்!
செப்பிய மாங்கனி திகழ்தட டுறட்டியும்!
தேங்கத லிப்பழமும் செப்பிய பலாப்பழமும்!
அத்தனை யெல்லா மருந்திய வயிரவா!
ஐயுங் கிலியு மகோர வயிரவா!
சவ்வுங் கிலியுஞ் சங்கார வயிரவா!
மௌவுங் கிலியு மான வயிரவா!
முச்சூல வயிரவா! முக்கணீ ஸ்வரா!
அக்கினி வயிரா! ஆனந்த வயிரா!
சக்தியோ டருள்புரி தற்பர னாகிப்
பாம்பெலாம் பணிந்த பராபர னாகிப்
சாம்பலு மணிந்து தலையோ டேந்திச்
சுடலையில் நின்று சுடலைகாத் தவனே
கங்கைக் கரையிற் கிருபா கரனாய்
நம்பின பேர்க்கு நற்பத மருளிப்
பூமடை தன்னிற் பூசல் புரிந்து
ஆலின் நிழலி லமர்ந்துறை இசைப்ப
ஆதி சிவனா ரருள்புரி வயிரவா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்பொன் மேனியும் திருநீற் றழகும்!
உச்சிக் குடுமியும் உதிர வாயும்
அலறிய பல்லும் அண்ணாந்த பார்வையும்
காலிற் தரித்த தண்டை பாடகமும்
கழுத்திற் கட்டிய கங்கண மாலையும்
கையிற் பிடித்த கண்டகோ டாலியும்
அரையிற் கட்டிய காவியொட்டி யாணமும்
அங்கம் முழுவதும் அணிந்த வெண்ணீறும்
அக்கினிக் கண்ணும் அரவணி குஞ்சியும்
குஞ்சிக் கடையிற் குலாவிய பிறையும்
பச்சை மேனியும் பரிந்த முகமும்
உச்சிக் குடுமியும் உதிர வாயும்
அக்கினிச் சுடலையி லவவேஷ மானாய்
திக்குப் பேய்களைச் சிதற அடித்துப்
பக்கப் பசாசைப் பறக்கத் துரத்தி
எற்றி மிதித்து ஈடழித் திடுவாய்
ஐயனே யுந்த னருளுண் டானால்
வையகப் பிணிபோய் வாதபித்த கபம்
துய்ய வியாதிகள் துகழ்போற் பறக்க
எதிர்க்கும் வியாதிகள் இருள்போல வெட்டி
மெய்யனே யுன்னருள் மேதினி விளங்க
ஐந்தெழுத் துச்செபித் தன்போ டரனே
நம்பினே னுன்னை நமக்கருள் தருவாய்
கரிமுக முடைய கற்பகா! அருள்தா
திருவருள் புரியும் சிவனே அருள்தா
பார்வதி யிடமுறை பரனே அருள்தா
சித்த மிரங்குஞ் சிவனே போற்றி
மத்தணி மாலின் மருகா போற்றி
ஞாளியில் வந்து நமக்கருள் புரிந்து
கூளிகள் மாயக் குண்டெறிந் தவனே
அன்பாய் வந்து அடியேன்செய் பூசையை
நண்பா யேற்று நமக்கருள் புரிவாய்
ஆனக பாலமு மழகிய பிரம்பும்
ஞானபூ ஷணமும் நமக்கருள் காட்டி
சங்கூர்ந்த மார்பில் தனியொளி காட்டி
எங்களை ரட்சித் தருள்வாய் போற்றி
இன்பமாய் வந்து யான்செய் பூசையை
நண்பா யேற்பாய் நமஸ்தே நமஸ்தே

– ஆதாரம் –

ஐயா என ஓங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொம்மைக் கொலு - தத்துவம்

**ஆக்கம்:- திருமதி.பத்மஜோதி தாமோதரம்பிள்ளை**

அன்னை பராசக்திக்கு விசேட வழிபாடு நடைபெறும் ஒன்பது இரவுகளே 'நவராத்திரி விழா'. கோவில்களில் இவ்விழா சிறப்பாக கொண்டாடப்படும். ஒவ்வொரு நாளும் தேவியைப் புதுப்புதுக்கோலங்களில் அலங்கரித்து கொலு மண்டபத்தில் எழுந்தருளச் செய்து சிறப்புப் பூசைகள் நடைபெறும். அங்கிருந்து தேவி அருளாட்சி செய்து, உலக மக்கள் அனைவரையும் பாதுகாக்கின்றாள்.

ஆலயங்களில் அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி கொலு வீற்றிருந்து அருள்புரிகிறாள். அதைப் போல வீடுகளில் தேவிகளின் பொம்மைகள், ஏனைய சீவராசிகள், கோவில்கள், பழங்கள், மலர்கள், முனிவர்கள், யோகிகள் போன்றவற்றின் பொம்மைகளையும் கொலுவைத்து வழிபாடு செய்வர்.

புரட்டாதி மாத அமாவாசையன்றே கொலு வைப்பதற்குரிய சரியான நேரமாகும். இதற்காக ஓர் அறையைத் தெரிந்து புனிதமாக்கிப் படிகள் அமைப்பார். படிகள் மூன்று, ஐந்து, ஏழு, அல்லது ஒன்பது படிகளென அமைக்க வேண்டும். வெள்ளை அல்லது மஞ்சள் துணியை விரிக்க வேண்டும்.

முதலாவது படியில் பூரண கும்பம் வைத்து தீபாரதனை பூசை செய்து தேவியை கலசத்தில் எழுந்தருளச் செய்வர். பின் நவராத்திரி வழிபாடும், கொலு வழிபாடும் தொடங்கும். இதன் **தத்துவம்:-** கலசம் - உடம்பு; பச்சை அரிசி - உயிர்; மாவிலை - அருள்பாலித்தல்; தேங்காய் - தேவி; தேவியின் அருள் உயிருக்குக் கிடைக்கிறது என்பது இதன் பொருள். தேவியின் அருள் உயிரில் இறங்க மாவிலைகள் துணை புரிகின்றன.

**நவதானிய முளைப்பாலிகை:-** கொலு வைக்கப்பட்டிருக்கும் அறையின் ஒரு பகுதியில், மண் சட்டியில் நவதானியங்களை விதைக்கிறார்கள். அவை முளைவிட்டுச் செழித்து வளர்ந்தால், குடும்பமும் செழிப்புடன் விளங்கும் என்று நம்புகின்றனர்.

**இதன் தத்துவம்:-** குபேரன் அருளுகிற பலவகைப்பட்ட செல்வச் செழிப்புகளை நவதானியங்களின் வளர்ச்சி உணர்த்துகிறது. நவதானியங்கள் - பல செல்வங்களை குறிக்கும்.

**பொம்மைகள்:-** கொலுவில் மண், மரம், பீங்கான், பிளாஸ்டிக், உலோகத்தால் செய்யப்பட்ட பொம்மைகளை வரிசை வரிசையாக அடுக்கி வைக்கின்றனர்.

தெய்வ வடிவங்கள், புராணக்காட்சி வடிவங்கள் முதலிய தெய்வத்தொடர்பான பொம்மைகளை மேற்படியில் வைக்கவேண்டும். அப்படியில் வேறு உயிரினங்கள், உயிரற்ற பொருள்களை வைத்தல் ஆகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலும் பெண்களே இப்பூசைகளில் பெருமளவில் கலந்துகொள்வர். அயலவர்களை கொலுபார்க்க வரும்படி, பாக்கு வெற்றிலை பழம் வைத்து அழைப்பர். வரும் விருந்தினர் பூசையிற் பங்குகொண்டு ஆடல், பாடல், பேச்சு, நாடகம் போன்ற நிகழ்ச்சிகளையும் செய்வர்.

விருந்தினர்கள் புறப்படும்போது அவர்களுக்கு பலகாரம் பரிசுப் பொருள்களும் கொடுத்தனுப்புவர்.

கொலுவின்போது வீடு சிறந்த கலைக்கூடமாக. பக்தியோடும் மகிழ்ச்சியோடும் திகழும். விஜயதசமி அன்று பால் நைவேத்தியம் வைத்து தீபாரதனை செய்து கொலுவை நிறைவு செய்வர். வந்தவர்களுக்கு பாலிகையும் வழங்குவர்.

படியிலுள்ள பொம்மைகளை படுக் வைத்தும் கொலுவை நிறைவு செய்யலாம்.

**தத்துவம்:-** கொலுப்படிகள் பல, உலகங்கள் தேவி, பரம்பொருள், கலசம் - தேவியின் பிரசன்னம். பொம்மைகள் உயிர்கள் அனைத்து உயிர்களுக்கும் உயிருக்குயிராய் இருந்து அருள் சுரக்கிறாள் அம்பிகை.

தேவியின் அருளால் பாவங்கள் ஒழிகின்றன. தர்மங்கள் நிலைபெறுகின்றன. அஞ்ஞானம் அழிகின்றது; மெய்ஞ்ஞானம் மிளிர்கின்றது.

கொலு வைப்பதால் பலருக்கும் பல நற்பயன்கள் கிட்டுகின்றன. அவை வருமாறு:-

1. தேவி வழிபாடு, விருந்தோம்பல், என்ற தமிழர்களின் அடிப்படைப் பாரம்பரிய பண்புகளைப் பாதுகாத்து வளர்க்கிறது.
2. பெண்களின் பக்தி உணர்வுகள், செல்வ வளம், மனோபலம், கலைத்திறன் என்பவற்றைக் கொலுவின் மூலம் உணரமுடிகிறது.
3. பொம்மைகள் செய்யுங்கலை, வார்ப்புக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, அழகியற்கலை, அலங்காரக்கலை எனப் பல்வகைக் கலைகளும் வளரவும், அழியாமற் பாதுகாக்கவும்படுகிறது.
4. பழமையான முதிசப்பொருட்களை, புதுப்பித்து மெருகூட்டிப் புனிதமாகத் தொடர்ந்தும் பாதுகாக்க முடிகிறது. புதிய பொம்மைகள் வாங்கப்படுகின்றன. இதனாற் கொலு பழமைக்கும் பழமையாகவும், புதுமைக்கும் புதுமையாகவும் இரண்டின் சங்கமமாக விளங்குகிறது.
5. குழந்தைகள் கொலுவைப் பார்த்துப் பரவசங் கொள்வதோடு, பல செய்திகளையும், புராணக்கதைகளையும் தெரிந்துகொள்கின்றனர். அவர்கள் தம் பாரம்பரியங்களை அறிந்து கொள்ளவும், பக்தி உணர்வுகளைப் பெருக்கவும் கொலு மிகவும் உதவுகின்றது.
6. ஒன்பது நாட்களும் குடும்பத்தவர் தமது மனக்கஷ்டங்கள், வாழ்க்கைப் பிரச்சினைகளைச் சிறிது மறந்து குதூகலமாக இருப்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ஐயப்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஐயப்பன் கவசம்

" அரிஹர புத்திரனை ஆனந்த ரூபனை
இருமூர்த்தி மைந்தனை, ஆறுமுகன் தம்பியை
சபரி கிரீசனை சாந்த ஸ்வரூபனை
தினந்தினம் போற்றிப் பணிந்திடு வோமே
ஐயப்ப தேவன் கவச மிதனை
அனுதினம் சொல்ல அல்லல்கள் ஒழியும்
தினந்தினம் துதிக்கத் தீரும் வினையெல்லாம்
நாடிய பொருளும் நலமும் வருமே"

## நூல்

மண்ணுல கெல்லாங் காத்தருள் செய்ய
மணிகண்ட தேவா வருக வருக
மாயோன் மைந்தா வருக வருக
ஐங்கரன் சோதரா ஐயப்பா வருக

புலிவா கனனே வருக வருக
புவியெலாங் காத்திட வருக வருக
பூரணை நாதனே வருக வருக
புண்ணிய மூர்த்தியே வருக வருக

பூத நாயகா வருக வருக
புஷ்களைப் பதியே வருக வருக
பொன்னம் பலத்துறை ஈசா வருக
அடியாரைக் காக்க அன்புடன் வருக

வாசவன் மைந்தா வருக வருக
வீரமணி கண்டா வருக வருக
வஞ்சனை நீக்கிட வருக வருக
வல்வினை போக்கிட வருக வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயம் தவிர்த்திட ஐயப்பா வருக
அச்சம் அகற்றிட அன்னாய் வருக
இருளினைக் களைந்தே எனையாட் கொள்ள
இருமூர்த்தி மைந்தா வருக வருக

பதினெண் படிகளை மனதில் நினைக்கப்
பண்ணிய பாவம் பொடிப் பொடியாகும்
ஐயப்பா சரணம் என்றே கூறிட
ஐம்பூ தங்களும் அடிபணி ந்திடுமே

சபரி கிரீசனை நினைத்தே கீரிடத்
துன்பங்கள் எல்லாம் தூள்தூ ளாகுமே
சரணம் சரணம் என்றே சொல்லிட
சித்திகள் யாவும் வந்தடைந் திடுமே

பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பகைவர்கள் எல்லாம் பணிந்தே வணங்குவர்
ஐயப்பன் பாதம் அநுதினம் நினைக்க
அவனியி லுள்ளோர் அடிபணிந் தேத்துவர்

சரணம் சரணம் ஐயப்பா
சரணம் சரணம் சபரி கிரீசா
சரணம் சரணம் சற்குரு நாதா
சரணம் சரணம் சுவாமியே சரணம்

## வேண்டுதல்

சிவனார் மகனென் சிரசினைக் காக்க
நெடுமால் மைந்தன் நெற்றியைக் காக்க
கஜமுகன் தம்பிஎன் கண்ணினைக் காக்க
நாரணன் பாலன் நாசியைக் காக்க

இருமூர்த்தி மைந்தனென் இருசெவி காக்க
வாபரின் தோழர் வாயினைக் காக்க
பம்பையின் பாலன் பற்களைக் காக்க
நான்முகப் பூஜீயன் நாவினைக் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| கலியுக | வரதனென் | கருத்தினைக் | காக்க |
| குமரன் | தம்பியென் | குரல்வளை | காக்க |
| புஷ்களை | நாதன் | புயங்களை | காக்க |
| முக்கண்ணன் | பாலன் | முழங்கையைக் | காக்க |
| | | | |
| வீரமணி | கண்டன் | விரல்களைக் | காக்க |
| மணிகண்ட | தேவன் | மார்பினைக் | காக்க |
| கைலை | மைந்தன் | கைகளைக் | காக்க |
| வன்புலி | வாகனன் | வயிற்றினைக் | காக்க |
| | | | |
| முழுமுதற் | கடவுளென் | முதுகினைக் | காக்க |
| இருமுடிப் | பிரியனென் | இடுப்பினைக் | காக்க |
| பிரம்பா | யுதனென் | பிட்டங்கள் | காக்க |
| தர்மசா | ஸ்தா | துடைதனைக் | காக்க |
| | | | |
| முருகன் | சோதரன் | முழங்கால்கள் | காக்க |
| கற்பூர | ஜோதியென் | கணுக்கால் | காக்க |
| பந்தள | பாலன் | பாதத்தினைக் | காக்க |
| விஜய | குமாரன் | விரல்களைக் | காக்க |
| | | | |
| அன்னதானப் | பிரபு | அங்கமெல்லாங் | காக்க |
| ஆரியங்கா | ஜோதி | அன்புடன் | காக்க |
| காட்ட | ளரூபி | காலையிற் | காக்க |
| நவக்கிரக | நாதன் | நடுப்பகல் | காக்க |
| | | | |
| மாலின் | மகனார் | மாலையிற் | காக்க |
| அரிஹர | சுதனார் | அந்தியிற் | காக்க |
| இன்பமய | ஜோதி | இரவினிற் | காக்க |
| எருமேலி | சாஸ்தா | என்றுமே | காக்க |
| | | | |
| அரியின் | மகனார் | அநுதினம் | காக்க |
| நடராஜன் | பாலன் | நாள்தொறும் | காக்க |
| வாசவன் | செல்வன் | வலப்புறங் | காக்க |
| இருமுடி | ஈசன் | இடப்புறங் | காக்க |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்க காக்க கருணையாற் காக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
இம்மையும் மறுமையும் இல்லா தொழிந்திட
ஈசன் மகனெனை என்றுமே காக்க

கொடிய விஷங்களும் கொள்ளை நோய்களும்
குருதியைக் குடிக்கும் துஷ்டப் பேய்களும்
காந்தமலை தனைக் கருத்திற் கொண்டிட
கலங்கி மறைந்திடக் கருணை புரிவாய்

பில்லி சூனியம் பலவித வஞ்சனை
பம்பையின் பாலன் பெயர்சொல் லிடவும்
பஞ்சாய்ப் பறக்க வரமெனக் கருள்வாய்
பயங்களைப் போக்கி அபயம் அளிப்பாய்

வாதம் பித்தம் சிலேட்சுமத் துடனே
வாந்தியும் பேதியும் வலிப்பும் சுளுக்கும்
எவ்வித நோயும் எனையணு காமல்
என்றுமே காப்பாய் எருமேலி தேவா

கல்வியும் செல்வமும் கள்ளமில்லா மனமும்
நல்லோர் உறவும் நாளும் அருள்வாய்
நல்ல மனத்துடன் உனைநான் துதிக்க
நித்தமும் அருள்வாய் சபரி கிரீசா

காமங் குரோதம் லோபம் மோகம்
மதமாச்சர் மெனும் ஐம்பெரும் பேய்கள்
என்றுமே என்னை அணுகி விடாமல்
ஐயப்ப தேவா வரமெனக் கருள்வாய்

சூது பொறாமை பொய்கோப மில்லாமல்
சோரம் லோபம் துன்மார்க்கங் கல்லாமல்
தேவ நெறிதனை விலகி நில்லாமல்
வீரமணி கண்டா வரமெனக் கருள்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூப்பும் பிணியும் வறுமையும் பசியும்
வந்தெனை வாட்டி வதைசெய் யாமல்
உள்ளன் புடனே உன்திரு நாமம்
அநுதினம் சொல்ல அருள் தருவாயே

## நமஸ்காரம்

அரிஹரபுத்ரா அன்பா நமோ நமோ
சபரிகிரீசா சாஸ்தா நமோ நமோ
பதினெண் படிவாழ் பரமாநமோ நமோ
ஐங்கரன் சோதரா ஐயப்பாநமோ நமோ

பொன்னம் பலத்துறை புண்ணியா நமோ நமோ
புலிப்பால் ஈய்ந்த புண்ணியா நமோ நமோ
சுரிகாயுத முடைச் சுந்தரா நமோ நமோ
மஹிஷி மர்த்தன மணிகண்ட நமோ நமோ

சரணம் சரணம் சபரி கிரீசா
சரணம் சரணம் சத்ய ஸ்வரூபா
சரணம் சரணம் சர்வ தயாளா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம்

**[பிரமாண்ட புராணத்தில், கோரளீய மஹாத்மியத்தில் , ஸ்ரீபரசுராமரால் துதிக்கப்பட்ட கவசம் ]**

**–ஆதாரம் –**
**ஐயா என ஓங்கி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவர் துதிகள்

தொகுப்பு

திருமதி. சித்தி தேவி பத்மநாதன்

ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் [ தமிழ்மொழி]

**1. கச்சியப்பசிவாசாரியார் – கந்தபுராணம்**

பரமனை மதித்திடாப் பங்கையாசனன்
ஒரு தலைகிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமும்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்

**2. கச்சியப்பர் – கந்தபுராணம்**

வெஞ்சினப் பரியழல் மீது போர்த்திடும்
அஞ்சனப் புகையென ஆலமாம் எனச்
செஞ்சுடர்ப் படிவமேல் செறிந்த மாமணிக்
கஞ்சகக் கடவுள் பொன் கழல்கள் ஏத்துவாம்

**3. சிவஞான முனிவர் – காஞ்சிப்புராணம்**

எளியாரை வலியார் வாட்டின்வலியரை இருநீர் வைப்பின்
அளியறத் தெய்வம் வாட்டும் எனும் உரைக்கமைய அன்றே
தெளியும் மாவலியைச் செற்றோற் செகுத்துரிக் (கு) அவயம் போர்த்த
வளியுளர் கச்சிகாவல் வயிரவற் (கு) அன்பு செய்வோம்

**4. மீனாட்சி சுந்தரம் பிள்ளை – மாயூரபுராணம்**

ஓங்கு நாற்படைமுன் அஞ்சும் ஒள்ளுகிர் படையும் தேசு
வீங்கு சக்கரம் முன்னான வெம்படை அஞ்சும் அஞ்சும்
தாங்கு சூற்படையும் கொண்டோர் தலைக்கல நெத்தோர் ஏத்த
பாங்கு சேர் வடுகப்புத்தேள் பதமலர்க் (கு) அன்பு செய்வோம்

**5. மீனாட்சி சுந்தரம் பிள்ளை – காசிரகசியம்**

தளம் பொலி மலரோன் ஆதி வானவர் தாழ்ந்து போற்ற
உளம் பொலி காசிமேவும் உயிர்கள் செய் பாவமெல்லாம்
களம் பொலியாது தண்டம் கண்டற ஒழித்து முக்தி
வளம் பொலி வகை கால வயிரவதற்கு அன்பு செய்வோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6. புலியூர்ப்புராணம்**

விதிப்பால வினை தீர்க்கும் வியாக்கிரமா
புரத்தினது மேவினோர்கண்
மதிப்பாவில் செய்வினைக்கு மூவிலைவேற்
சூலத்தின் மருவ வைத்தே
உதிப்பால் அன்னையர் முலைகண்மீட்டு, அருந்தாவகை
முக்தி உலவுத் தில்லை
பதிபால வைரவன் தன் பாத சரோருகங்கள்
என்றும் பரவி வாழ்வாம்

**7. திருப்பாதிரிப்புலியூர்ப்புராணம்**

தருண மலர்க் கோயிலுறை உச்சி முடிக்
கபாலத்தைத் தளிர்க்கையேந்தி
அருணநீர் பலிக்கிமையோர் நடுங்க வலம்
வந்து மாற்காவி நல்கி
மருணனி செய் மூவிலைவேல் மணிநாகம்
உடுக்கை இவை வயங்க ஏந்திக்
கருணை மறம் பூண்டெழில் செறி கடல் ஞாழல்
வயிரவரைக் கருதி வாழ்வாம்

**8. கருணாகரக்கவிராயர் – கடம்பர் கோயிற்புராணம்**

கயிரவ நாண்மலர்க் கவின் கணார் மயல்
செயிரவ நாடொறும் இயற்றியேதிரி
உயிரவ நானென ஒறாது காத்தருள்
வயிரவ நாதனை வணங்கி வாழ்த்துவாம்

**9. சபாதி நாவலர் – திருப்பைஞ்ஞீலிப்புராணம்**

லீலையொடு திரிசூலமலரவன்
சென்னியும் கரத்தில் ஏந்தினானை
வேலை அனைத்தினுக்கும் அக்கினிச் சுவாலையானை
எனது துன்ப இடர் தீர்த்தானை
பாலை அனைய நிலாவை நிகர்த்த
வெண்ணீற்றானை அணி பணி கபால
மாலையனை பிரளய கற்பகால
வயிரவனை அன்பின் வணங்குவோமே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10. சிவறாடலிங்கம் பிள்ளை – திருமலைத்தலபுராணம்**

பயிரவம் ஓங்குநல்ல பக்தி மெய் ஞானம் இல்லாக்
கயிரவம் அகற்றி ஆளும் காவலனாக எல்லா
உயிரவம் இன்றிவாழ உதித்தருள் கீர்த்திமேவும்
வயிரவ நாதனான வள்ளலை வணங்குவாமே

**11. சபாபதி நாவலர் – திருப்பைஞ்ஞலிப் புராணம்**

கருதரிய லலித பரன் நெற்றியில் தோன்றி
சூல கபாலம் ஏந்தி
வரு பிரளயம் சுவற்றிப் பயிரவனாய்
அண்ட தத்துவங்கள் மாற்றி
அரி சரும கஞ்சுகியாய் வேதவேகினூர்ந்து
முன் போல் அவையுண்டாக்கி
கிருபை பெறக்காத்தருளும் கேத்திரபாலன்
திருத்தாள் ஏத்தல் செய்வோம்

**வீரபத்திரர் துதிகள்**

**கச்சியப்ப சிவாச்சாரியார் – கந்தபுராணம்**

அடைந்தவி உண்டிடும் அமரர் யாவரும்
முடிந்திட வெருவியே முனிவர் வேதியா
உடைந்திட மாமகம் ஒடியத் தக்கனைத்
தடிந்திடு சேவகன் சரணம் போற்றுவாம்

அந்த வான் பெருமேனியன் கறைமிடறு அணிந்த
எந்தைதன் வடிவாயவன் நுதல் விழி இடையே
வந்து தோன்றியே முன்னுற நின்றனன் மா
முந்து வீரபத்திரன் எனும் திறலுடை முதல்வன்!

அங்க வேளையில் உமையவள் வெகுளியால் அடல் செய்
நங்கையாகிய பத்ர காளியை நல்க
செங்கை ஓரிரண்டாயிரம் பாதி செம்முகமாய்த்
துங்க வீர பத்ரன்தனை அடைந்தனள் துணையாய்

– ஆதாரம் –
'ஐயா என ஓங்கி'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊஞ்சல் தத்துவம்

ஆக்கம்

சக்தி. விண்மணி

தெய்வத் திருவுருவங்களை ஊஞ்சலில் வைத்து ஆட்டி, பாடி மகிழும் வழக்கம் பக்தர்களிடையே நெடுங்காலமாக இருந்து வரும் மரபாகும். இதற்காக ஒவ்வொரு தெய்வத்தின் பேரிலும் "திருவூஞ்சல்" பாடல்களும் உண்டு.

இதை ஒரு விழாவாகவே கொண்டாடுவார்கள். இதற்கு ஒரு தத்துவக்கருத்து முண்டு; தனிப் பாடல்களும் உண்டு.


இந்தப் பரந்த உலகம் பெரிய பந்தல் ; பிறவி ஊஞ்சல் ; அதிற் பலகை போன்றவர் மக்கள்; இவர்களுடைய ஐம்புலன்களும், ஊஞ்சலைப் பிணைக்கும் சங்கிலிகள்; சங்கிலிகளை மாட்டும் விட்டம் மக்களின் அறிவு; உலக மாயையில் மக்கள் கொண்டிருக்கும் பற்றும் பாசமும் விட்டத்தைத் தாங்கும் தூண்கள்; பிறவிகளில் மக்கள் செய்யும் நல்வினை தீவினைகளே ஊஞ்சலை முன்னும் பின்னும் ஆட்டுபவர்கள்;மக்கள் செய்த வினைகளுக்கேற்ப நரகம் செல்வது இறக்கம், சொர்க்கத்தை அடைவது ஏற்றம்.

இவ்வாறு ஏற்ற இறக்கத்தால் தடுமாறும் ஆன்மாக்கள் ஊசலாட்டம் நீங்கி, பிறவாத நிலையான முக்தியடைய வேண்டிப் பாடிக்கொண்டாடுவதே ஊஞ்சல் திருவிழா

இதைப் பின்வரும் பாடல் விளக்குகிறது :-

"அண்டப் பந்தலில் பற்றுக் கால்களாக
அறிவு விட்டம் கரணம் சங்கிலிகளாக
கொண்ட பிறப்பே பலகை வினைஅசைப்போர்
கொடுநரக சுவர்க்கப்பூ வெளிகள் தம்மில்
தண்டலில் ஏற்றம் இறக்கந் தங்கலாகத்
தடுமாறி யிடருழக்கும் ஊசல் மாற"

இப்பாடல் ஊஞ்சல் விழா, ஆன்மாவின் வளர்ச்சிக்குத் துணைபுரியும் பாங்கை விளக்குகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்திலங்கும், திருக்கோணேஸ்வரத்தில் வீற்றிருக்கும், மாதுமை சமேத திருக்கோணேசப் பெருமானுக்கு, காவற் தெய்வமாக விளங்குபவர், திருக்கோணமலை உப்புவெளி, அருள்மிகு சோலைவைரவர். என்பது வரலாறு. இவ்வாலயம் 1985ஆம் ஆண்டு ஊரின் அசாதாரண நிலைமைகாரணமாக பெரும்பாதிப்புக்குள்ளானது. இங்கு இருந்த எழுந்தருளி விக்கிரகம் மட்டும் காப்பற்றப்பட்டு திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ முத்துக்குமார சுவாமி தேவஸ்தாதனத்தில் வைத்து 2001 ஆம் ஆண்டு வரை பூசை செய்யப்பெற்றது. அங்கு நடைபெறவிருந்த கும்பாபிடேகம் காரணமாக எழுந்தருளி விக்கிரகம் மடத்தடி ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானதில் வைத்துப் பூசை செய்யப்பட்டது. மேற்படி தேவஸ்தான தர்மகர்த்தா. முகாமையாளர், ஆதினகர்த்தா ஆகியோருக்கு எமது ஆலய பரிபாலன சபையை மிக்க நன்றியைத் தெரிவிக்கின்றது. 2009ஆம் ஆண்டு நூதன பிரதிஷ்டா மகாகும்பாபிடேகத்தை வெகு சிறப்பாக நிறைவேற்றி வைத்த வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ.சோ.ரவிச்சந்திரக் குருக்கள் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றி உரித்தாகுக. ஆலய நிர்மானப் பணிகளில் எம்மோடு நின்று பல உதவிகளைச்செய்தும், கும்பாபிடேக விஞ்ஞாபனத்தை வெகுசிறப்பாகத்தயாரித்து, வெளியிட்டும் வைத்த ஆலடி விநாயர் தேவஸ்தான ஆதீன கர்த்தாவும், பிரதம குருவுமான ஸ்ரீலஸ்ரீ.மு.சுந்தரலிங்க தேசிகருக்கு எமது நன்றிகள் உரித்தாகுக. ஆலய நிர்மாணப்பணிகளுக்கு நன்கொடை வழங்கி உதவிய இந்துக்கலாசார அமைச்சுக்கும், அதைப் பெறத்தூண்டுகோலாக விளங்கிய மாவட்டக் கலாசார உத்தியோகத்தர் திரு.சி.மகேந்திரராஜா அவர்களுக்கும் எமது நன்றிகள். ஆலயத்திருப்பணிகளிலும் கும்பாபிடேக வேலைகளிலும் பண உதவியும், சரீர உதவியும், வழங்கிய அனைத்து அன்பர்கள், அடியார்களுக்கும், இந்து இளைஞர் பேரவைக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். கும்பாபிடேக தினம் முதலாக, இன்றுவரை விசேட அபிடேகம், பூசைகளை மேற்கொண்டுவரும், பிரம்மஸ்ரீ பொன்.ஆறுமுகசுவாமிக் குருக்களுக்கும், ஆலய பிரதம குரு சிவத்திரு.கனக விக்கினராஜாக் குருக்களுக்கும் எமது நன்றி உரித்தாகுக. இவ்வாலய மூலமூர்த்தி, பரிவார மூர்த்திகள் யாவற்றையும் வழங்கிய வைரவரின் அடியார்கள் அனைவருக்கும் நன்றி. திருவிழாக்களுக்கு சுவாமி வீதியுலாவர வாகனங்கள் தந்துதவிய, பெரிய தொடுவாய்ப் பிள்ளையார் தேவஸ்தான பிரதம குரு கண்ணன் ஐயா அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள். ஆதீனகர்த்தா .திரு.ந.சத்தியமூர்த்தியவர்களின் வேண்டுகோலுக்கு இசைந்து, மிகுந்த பிரையாசைப்பட்டு அருள்மிகு சோலை வைரவப்பெருமானுக்கு, கும்பாபிடேக மலரை வெகு சிறப்பாகத் தொகுத்துத்தந்துள்ள கலாபூஷணம். செல்வி.மணிமேகலாதேவி கார்த்திகேசு அவர்களுக்கும், மலரின் பிரதிகளைப் பலதடவைகள் மொய்பார்த்துச் சரிசெய்து கொடுத்த கலாபூஷணம் திருமலை சுந்தாவுக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள் உரித்தாகுக. மலரைச் சிறப்பான முறையிலே அச்சிட்டு வடிவமைத்துதவிய "அஸ்ரா" அச்சகத்தாருக்கும், ஊழியர்களுக்கும் எமது நன்றிகள். இன்னும் நன்றிகூறத்தவறிய ஏனைய அடியார்களுக்கும் நன்றி கூறி, எல்லாம் வல்ல வைரவப்பெருமான் அருளாசி வேண்டி நிறைவு செய்கின்றோம்.

இங்ஙனம்

ஆலய பரிபாலன சபை,

2012.03.16

அருள்மிகு சோலை வைரவர் ஆலயம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2009.03.22 நூதன பிரதிஷ்டா கும்பாபிடேகம்



நூதன பிரதிஷ்டா பஞ்சகுண்ட பக்ஷய
மகா கும்பாபிடேகத்திற்கு யாகசாலைகளில்
யாகம் நிகழ்கிறது



நூல் வெளியீடு ஆலய பரிபாலன சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org